சஞ்சீவி
சஞ்சிகை

* காது,மூக்கு,தொண்டை
* கண்
* பொது
* பல்

} சத்திர சிகிச்சைகளும் நிபுணத்துவ ஆலோசனைகளும்

* தோல் வைத்திய நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள், ஆலோசனையும், சிகிச்சையும்.
* WARD வசதி மற்றும் ஆய்வுகூட வசதிகள்.
* MBBS வைத்தியரின் இரவு - பகல் வெளிநோயாளர் பிரிவு சிகிச்சை.
* பெண்ணோயியல் (V.O.G) மற்றும் மகப்பேற்றியல் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள், மகப்பேறு அறுவைச்சிகிச்சைகள்.

யாழ். வைத்தியசாலை
(ஆலடிச்சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில்)
284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(C/10199)

சஞ்சீவி 18-12-1999

## கருத்துக் கலசம்

மயூரா

### நாணயம் அவசியம்

**நிலத்தை நாம் ஒருவனிடம் அடகு வைத்தால், பணத்தை அல்லது பொருளைக் கொடுத்து அந்த நிலத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் நாணயமாக இருக்கும் தன்மையை நாம் ஒருமுறை இழந்துவிட்டால் அதனை ஒருநாளும் திரும்பப் பெற முடியாது.**

– மில்ரன் -

மனிதன் நல்லவனாக வாழ்வதற்கு நல்ல குணவியல்புகள் தேவை. அறநெறிகள், மனித விழுமியங்கள், நற்பண்புகள், சமூக வரன்முறை, நல்லொழுக்கம் முதலியனவற்றைக் கைக்கொண்டு வாழ்பவனே நல்லவன் என்ற பெருமைபெறத் தகுதி உடையவன்.

நல்லொழுக்கங்களில் உண்மை, நேர்மை, இன்னா செய்யாமை ஆகியவற்றுடன் நாணயமாக நடந்துகொள்வதும் நிகரானதாகும். சொன்னதுபோல நடந்து கொள்பவனை, சொன்னதைச் செய்பவனை நாணயமுள்ளவன் என்று அழைக்கின்றோம்.

இன்றைய சமூகத்தில் இத்தகு நாணயம் உடைய மனிதர்களைக் காண்பது அரிதாகிவிட்டது. சொல்வது ஒன்று செய்வது வேறு என்று வாழ்பவர்களே அனேகர். அரசியல்வாதிகள் மட்டுமே சொல்லொன்று செயல் இன்னொன்றாக தமது தொழிலை நடத்துகின்றார்கள் என்பதில்லை. ஏனையோரும் அவ்வாறு வாழ்வதே வழமையானது என எண்ணுகின்றார்கள் எனக் கருதுமளவுக்கு மனிதர்களிடம் நாணயத்தைக் காணமுடியவில்லை.

சொல்வதை அளந்து சொல்ல வேண்டும். தன்னால் செய்வதற்கு இயலுமான ஒன்றையே சொல்லவேண்டும். விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பார்கள். தனது ஆற்றலின் அளவை உணர்ந்து அதற்கேற்றவாறு செயற்படுவதே சிறப்பு.

தனது ஆற்றலுக்கு உட்பட்டுச் செய்யமுடியாத ஒன்றை செய்யலாம் என்று கருதி அதனை அடுத்தவருக்குக் கூறிவிட்டுப் பின்னர் இயலாமல் திண்டாடுபவரும் தனது நாணயத்தை இழக்க நேரிடுகிறது. எனவே தன்னால் செய்ய முடியும் என்று கருதுவதையே அடுத்தவருக்குச் சொல்லவேண்டும்.

ஒருவரிடம் கடனை வாங்கும்போது திரும்பத் தருவதாகக் கூறிவிட்டு, அதனை உரியகாலத்தில் செலுத்தாதவர்களும் நாணயம் இல்லாதவர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள்.

மில்ரன் கூறுவதுபோல, அடகு வைத்த பொருளை பணத்தைக் கொடுத்துத் திரும்பப்பெறலாம். ஆனால் மனிதனுக்கு உள்ள நாணயத்தை ஒருமுறை இழந்துவிட்டால் அதனைத் திரும்பப் பெறமுடியாது.

நாணயம் என்பது நம்பிக்கையோடும் தொடர்புடையது. ஒருவரை - அவரது சொல்லை - நம்பி ஒரு பணியைச் செய்யத்தொடங்கியவருக்கு ஏமாற்றம் அளிக்கும்வகையில் முதலாமவர் நடந்துகொண்டால் அவர் நாணயமற்றவர் என்று வர்ணிக்கப்படுவார். நாணயம் தவறி நடப்பவர்கள் அடுத்தவர்களால் மதிக்கப்படுவதில்லை; நம்பிக்கைக்கு உரியவர்களாக இருப்பதில்லை. நாணயம் ஒருவகையில் நேர்மையும் ஆகும்.

நாணயம் இல்லாதவர்கள் நல்லவர்கள் என்ற வகுப்பில், அந்தஸ்தில் சேர்க்கப்படமாட்டார்கள். ஆகவே வாழ்க்கையில் நல்லவர்கள் என்ற பெயரைத் தேடுவதற்கு நாணயம் தேவை.

நாணயம் மனிதனுக்கு அவசியம். நாணயமாக நடந்துகொள்வதற்கு இளமையிலிருந்தே பழகிக்கொள்ளவேண்டும். நாணயம் ஒருவனை மேன்மையுள்ளவன் ஆக்கும் என்பதனையும் மறந்துவிடலாகாது.

# தன்னினத்தையே சிறுமைப்படுத்த பயன்படும் கம்பனின் கவித்திறம்

இராமாயணம் பிறந்தது எவ்வாறு? இதற்கு வரலாற்று அடிப்படை ஏதும் உள்ளதா? - என்னும் வினாக்கள் இன்றும் கற்றார் நெஞ்சங்களைக் குடைந்து வருகின்றன.

வடமொழியில் இந்தக்காப்பியம் தோன்றிய வரலாற்றை ஆராய்ந்தோர், அடிநாளில் நிகழ்ந்த ஆரியர், திராவிடர் போராட்டத்தில் முன்னவர் பின்னவரை வெற்றிகொண்டதாகக் காட்ட அவர்களால் புனையப்பட்ட கற்பனைக்கதையே இது எனக் கூறியுள்ளனர். "இந்தியாவை வெளிப்படுத்தல்" என்னும் நூலை எழுதிய பண்டிதர் நேருவும் இதே கருத்துடையவர். (ஆரியர் இந்தியாவின் வடபால் நிலைகொண்ட பின் வடமொழியிலெழுந்த முதற் காப்பியமாதலின், இது "ஆதி காவியம்" எனப்படலாயிற்று.)

## இராமன் தெய்வமா?

வான்மீகி முனிவர் யாத்த இம்முதனூலில் தசரதனின் மகனான இராமன் ஓர் இளவரசன் என்றே கூறப்பட்டுள்ளது. பின்னாளில் ஆரியர் தம் குழு நலன்களுக்கு இசைவாக மதக்கோட்பாடுகளை வகுத்து மக்களிடையே பரப்ப முற்பட்டதும் இம் முதனூல் வான்மீகி என்னும் பெயர் தாங்கிய வேறு இருவரால் வெவ்வேறு காலத்தில் திரித்து எழுதப்பட்டது. இவ்வாறு குழுநல நோக்கில் எழுதப்பட்ட வழிநூலிலேயே இராமன் மாலின் மறுபிறப்பு எனக் கூறப்பட்டுள்ளது.

கம்பன் யாத்த இராமகாதைக்கு அடிப்படையாக அமைந்தது எது? வான்மீகியின் முதனூலைப் பின்பற்றியே இராமகாதையைப் புனைந்ததாகக் கம்பனே கூறியுள்ளான். உண்மை இவ்வாறிருக்கையில் முதனூலில் காணப்படாத தெய்வத்தன்மை, கம்பராமாயணத்தில் இராமனுக்குக் கிட்டியது எவ்வாறு? இன்றுவரை இதற்குச் சரியான விளக்கம் தரப்படவில்லை. உள்நோக்கோடு பின்னாளில் திரித்தெழுதப்பட்ட வான்மீகி இராமாயணக் கருத்துக்களால் கம்பன் ஈர்க்கப்பட்டிருந்தானா? அவன் வாழ்ந்த சூழ்நிலையில் இராமனைப் பற்றி நிலவிய கருத்துக்களுக்கு அடிபணிந்தானா? அல்லது அவனைப் புரிந்தவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தனது மனச்சான்றுக்கு மாறாக இத்தகைய ஒரு கருத்தைத் தன் கதையுள் அவன் புகுத்தினானா? இது எவ்வாறிருப்பினும், கவித்திறம் மேலோங்கி நின்ற அளவுக்கு மனச் சான்றின் வழிநிற்கும்நெறியுடைமை கம்பனிடம் துலங்கவில்லை என்பது வெளிப்படை.




திராவிடனான இராவணனைச் சிவபக்தன், வேதம் பயின்றோன், இசைவல்லான், மாவீரன் என விதந்து போற்றிய கம்பன் அவனை அரக்கன், காமுகன், இரக்கமற்றவன் எனப் பொருந்தாப் பண்புகளின் உறைவிடமாகக் காட்ட முற்பட்டதன் நோக்கம் யாது? இராவணன் பேராற்றலின் உறைவிடமாக இருந்தமையாலேயே அவனுக்குப் பத்துத் தலைகளும் இருபது கைகளும் இருந்தன என்றும் மிகையான கதை புனையப்பட்டது. வேதம் பயின்ற சிவபக்தனான இவன் - தெய்வ மகளிரையொத்த பேரழகியான மண்டோதரியைத் துணைவியாகப் பெற்றவன். இத்தகைய பெரும்பேறு பெற்ற இராவணன் - மாற்றான் மனையாளாகிய ஓர் ஆரிய மங்கை மீது காமுற்றுக் கருத்தழிந்து அடாதன செய்தான் எனும் பொருந்தாக் கருத்துக்களைக் கூறித் தன்னினச் செம்மலை இழிவு படுத்தக் கம்பன் முற்பட்டதேன்?

எதிரி மீது போர்தொடுக்கு முன் அவர் நாட்டிலிருந்து சிறுவர், பெண்டிர், நோயுற்றார், ஆநிரை முதலியவற்றைக் கவர்ந்து பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்துதல் அந்நாள் வழக்கமாக இருந்தது. இராவணனோடு பொருதமுற்பட்ட இராமனது அணியில் இருந்த பெண்மணி சீதை மட்டுமே. போர் மரபுகளுக்கேற்ப சீதையைப் போர்ச் சூழலினின்றும் அகற்றி பாதுகாப்பாக அசோக வனத்தில் வைத்தனன் எனல் தவறாகுமா? இச் செயல்மூலம் இராமனைப் போருக்கழைத்தனன் எனலும் ஏற்புடையதே. சூர்ப்பனகை எனப்பட்ட காமவல்லி இராவணனின் தங்கை. காமத்தீயில் சிக்கிக் கருத்தழித்த கீழ்த்தரமான ஒரு பெண்ணாக அவளை உலகோர் முன் நிறுத்தியதோடமையாது அவளை உறுப்பறிந்து சிறுமைப்படுத்திய ஆரிய இளவல் இலக்குவனது செயலை ஏற்றுக்கொண்ட கம்பனது கருத்தோட்டத்தைச் சற்றே எண்ணிப் பார்க்க.

இராமனது நடத்தையிற் காணப்பட்ட குறைபாடுகளை வான்மீகி தனது முதனூலில் ஆங்காங்கு சுட்டிக்காட்டியுள்ளான். ஆனால் கம்பன் தன் புனைவின்போது இவையனைத்தையும் மறைத்ததோடமையாது, முலாமிட்டுப் பூசி அவற்றை நிறைவாகக்



காட்டப் பெருமுயற்சியும் செய்துள்ளான். இம் முயற்சியில் ஈடுபட்டிருந்த காலை அவனது புனைவு ஒன்றுக்கொன்று முரணாக அமைந்தது. சீரற்ற கற்பனையோட்டத்தை புலப்படுத்தியமையை அவன் அறியாதிருந்தமை பெருவியப்பே. தந்தை சொல் ஏற்று இராமன் காடேகப் புறப்படுகையில் சீதை அவனோடு செல்வதற்கு முற்படுகின்றாள். 'உடன் வரல் வேண்டா' என இராமன் தடுத்தபோது சினமுற்ற சீதை அவனை எதிர்த்து சுடு சொற்களைக் கூறினாள் என வான்மீகி கூறியிருப்ப, கம்பன் தன் புனைவில் அதனை முற்றாக மறைத்துள்ளான். "காடேகுக!" எனத் தசரசன் பணித்தபோது துயருற்ற இராமனின் முகம் கோணியவாற்றை வான்மீகி படம்பிடித்துக் காட்டியிருக்கையில் கம்பனோ 'இராமனது முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல ஒளிர்ந்தது' எனப் பொய்யுரைத்து உண்மையை மறைக்க முற்பட்டுள்ளான். கைகேயியின் தலையீடே இராமன் அரசிழக்கக் காரணமாகியது. இதனால் வெகுண்ட இலக்குவன் மிகத் தரக்குறைவான வார்த்தைகளால் அவளை இழித்துரைத்தமை முதனூலில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. கம்பன் புனைவில் அவற்றின் சுவடேயில்லை. இவற்றின் வேறாக சில இடங்களில் அவனது வர்ணனை வெறுப்பூட்டுமளவுக்குத் தரக்குறைவாக இருப்பதை மறுக்க வல்லார் யார்?

## இறைவனுக்கு இழிவு

கம்பன் குறிப்பிடுவது போன்று இராமன் தெய்வத்தன்மையுள்ளவன் என்றே கொள்வோம். இறைவன் எத்தகையன்? பேராற்றலின் உறைவிடம்; எல்லாம் வல்லவன். அவன் நினைத்தாலே விரும்பியது நடக்கும். இத்தகைய பரம்பொருள் ஓர் அரசனான இராவணனோடு களமாடிப் பொருதுதான் அவனை அழிக்க வேண்டுமா? வில்லேந்தி மாய மந்திர பாணங்களை அவன் மீது ஏவித்தான் போரிட வேண்டுமா? அண்ணன், தம்பி சண்டையில் தலையிட்டு வானரப் படைதிரட்டிக் களமாடு நிலைக்கு இறங்கியது ஏன்? தெய்வமான இராமன் கணப்போதில் வேண்டிய படைகளை அயோத்தியிலிருந்து வரவழைத்து இருக்கலாமல்லவா?

இவையனைத்தையும் நோக்குமிடத்து கம்பன் குறிப்பிடும் இறையியல்பு எதுவும் இராமனிடம் இல்லை என்பதும், ஓர் இளவரசனின் நிலையிலிருந்தே அவன் இராவணனோடு பொருதினான் என்பதும் புலனாகும். இராமன் இறையியல்பினனாயின் 'இராவணன் கிளையொடும் அழிக' என நினைப்பதே கருதிய பலனைத்தரும். தெய்வமான இராமன் வானரனாகிய வாலியை மறைந்திருந்து வதைக்க வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காதே? தெய்வத்தின் பேராற்றலை விஞ்சியதோ குரங்கின் வலிமை? இம்முரண்பாடுகள் கம்பனது சீரிய, தெளிவான சிந்தனையின் விளைவாகப் பிறந்தவையா? அல்லது தவிர்க்கமுடியாத மறைமுக நெருக்கடிகளுக்காளாகி கருத்துச் சீரமை, அளவையியல் நெறிகள் என்பனவற்றைத் துறந்து, அவன் கருத்து முரண்பாடுகளுக்குத் இடமளித்தானா? இங்கே கம்பனின் புனைவு இறைவனை, அவனது இயல்பை இழிவு படுத்துவதற்கே பயன்பட்டிருத்தல் கண்கூடு. கம்பராமாயணச் சுவையில் திளைத்துள்ள நம் அறிஞர்கள் இதனை மறுக்க முற்படக்கூடும்; விழாவெடுத்துப் [illegible] சொற்சிலம்பம் ஆடிக் குறைகளை நிறைவாகக் காட்ட அவர்கள் முற்படக்கூடும். இச்செயல் நேர்மையற்ற புலமையின் புலப்பாடாகவே அமையும்.

## பொருந்தாக் கருத்து

ஆரியர்களின் திட்டமிட்ட சூழ்சிகளின் விளைவாகத் தமிழர் இழிவாகக் கருதப்படும் நிலை தோன்றியுள்ளது. இந்நிலை இன்றும் தொடர்கின்றது. இந்த அவல நிலையை நம்முட் சிலரே நன்குணர்ந்துள்ளனர். ஏனையோர் ஆரிய மாயையில் சிக்கி உண்மைநிலை உணராது செயலற்று வாழ்கின்றனர். இவ்விழி நிலைக்குத் தமிழினத்தைத் தள்ளிய ஆரியர்களை உயர்ந்தவர்களாகக் காட்டித் தமிழினம் அவர்களிடம் தோற்று விட்டது. இதனின்றும் தமழினம் மீளமுடியாது. இதனைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்வதே தக்கது எனக் கருத்தூட்டும் நோக்குடனேயே கம்பனின் புனைவு அமைந்துள்ளது. இவ்வொழுங்கற்ற புனைவால் தமிழினத்துக்குற்ற இழிவை மறைக்க முற்படும் நம் அறிஞர்களுட் சிலர் சீரிய அறிவின் வழி நிற்பதை விடுத்து, "இராவணன் திராவிடனோ தமிழனோ அல்லன். அவனும் ஆரியனே" எனப் பயனில் சொல்லாட முற்படுவர். இத்தகையோர் கருத்தை ஏற்பதாயின், ஆரியர் இருவர் கதைதானா தமிழர்களின் தலையாய கலைச்செல்வம் என்னும் வினாவுக்கு இடமுண்டாகும்.

**- கங்கர்தரன் -**

வான்மீகி இராமாயணம் எழுந்த காலத்து தென்னகத்தில், குறிப்பாக இலங்கைத்தீவில் ஆரியர் வாழ்ந்த சுவடேயில்லை. விந்தியமலைக்கு வடக்கே வெகுதொலைவிலேயே அவர்களது நடமாட்டம் இருந்ததாகத் தெரிகிறது. இந்நிலையில் இலங்கைத்தீவில் ஆரிய இராவணன் முளைத்தது எங்ஙனம்? இரு ஆரியர்களுள் ஒருவனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தி, மற்றவனை அரக்கன் - காமுகன் - இரக்கமற்றவன் - என இழித்துரைப்பதற்குத் தூண்டுதலாயமைந்த பின்னணி யாது? கம்பன் அதனைக் கூறினானில்லை. நம் அறிஞர்கள் கூற முற்படுவரோ?

## ஒரு கலைப்படைப்பின் குறிக்கோள்

கம்பராமாயணம் கலையின் கருவூலம், அதற்கு இணையான கலைப்படைப்பே தமிழில் இல்லை என ஒரு புடையாகப் பெருங்குரலில் மொழிவோரும், விழா எடுப்போரும் நம்மிடையே இன்றும் உளர். ஒரு கலைப்படைப்பு உணர்த்துமுறை, உணர்த்து பொருள், அதன் தன்மை என்னும் முக்கூறுகளுடையதாகவே அமையும். உணர்த்துமுறை கலைஞனின் திறமையின் வழித்துலங்கும். இங்கு கம்பனின் கவித்திறம் மேலோங்கி நிற்றல் கண்கூடு. கவி புனையும் திறனில் மேலோங்கி நின்ற கம்பன் கலையின் குறிக்கோளை போற்றினானில்லை.

கலைப் படைப்புக்களின் குறிக்கோள் யாது? "இழுமென் மொழியால் விழுமியது நுவலல்" அன்றோ? கம்பர்ாமாயணத்தில் "விழுமியது" எத்தனை விழுக்காடு உளது? தமிழினத்தை ஆரியர் வெற்றி கொண்டனர் என்ற கற்பனைக் கதையை முதனூலை அடியொற்றிப் புனைய முற்பட்ட தமிழ்க் கவிஞனான கம்பன் எத்துணை ஒழுங்கீனமான நடைமுறைகளையும், பொய்யுரைகளையும் எடுத்தாண்டுள்ளான்? இதன் விளைவாக உணர்ந்து பொருள் போற்றத்தக்கதாக, தமிழ் இனத்தின் மேம்பாட்டுக்கும், சிறப்புக்கும் ஊன்றுகோலாக அமையவில்லை. மாறாக இனத்தை இழிவுபடுத்தும் பாங்கிலேயே கருப்பொருள் அமைக்கப்பட்டுள்ளது.

எத்தகைய கருத்தூட்ட முயற்சியில் கம்பன் ஈடுபட்டிருந்தான் என நாம் முன்னரே கண்டோம். குறிக்கோளற்ற - சீரிய சிந்தனையின் வழியில்லாத - முரண்பாடுகள் மலிந்த - கதைப் போக்குள்ள ஆரிய துதிதான் தமிழர்களுக்கேற்ற கலைச்செல்வமா?

தெள்ளுதமிழ்ச் சிலப்பதிகாரத்தையாக்கு முன் துறவியான இளங்கோ அடிகள் தான் மேற்கொண்ட பணியின் குறிக்கோள் யாதென அந்நூலுக் கெழுதிய பாயிரத்தில் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். "பத்தினிப் பெண்டிரை உலகு விதந்தேற்றும்; அரசியல் பிழைத்தார்க்கு அறங்கூற்றம்" என்னும் கருத்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரத்தின் புதிய புறநிலைச் சூழல் காரணமாக

# குடாநாட்டில் தேர்தல் சூடு தணிந்து போயிற்று!

ஏதோ ஒரு வகையிலேனும் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்துள்ள ஜனாதிபதித் தேர்தல், இன்னும் இரண்டு நாள்களில் நடைபெறப்போகிறது. ஜனாதிபதியாக யார் தெரிவு செய்யப்படுவார் என்பதை அறிவதில் எவ்வளவு ஆர்வம் உண்டோ, அதே அளவு ஆர்வம் தேர்தல் அமைதியாக, நீதியாக, சுதந்திரமாக நடைபெறுமா என்பதனை அறிவதிலும் மக்களிடம் உண்டு.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே தேர்தல் பி[illegible]ரம் சூடுபிடிக்கத் தொடங்கியிருந்தது. நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்யப்பட்ட பின்னர் கடந்த நான்கு வாரங்களாக அங்கு தேர்தல் பிரசாரம் கனல் கக்கியது. இன்று நள்ளிரவுடன் அது தணிந்து போய்விடும்.

ஐந்தாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் மொத்தம் பதின்மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். எனினும் தேர்தல் போட்டி ஆளும்கட்சியைச் சேர்ந்த சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலேயே உண்டு.

இரண்டு தரப்புக்களும் தமது பிரசாரங்களைச் சூடுபறக்கச் செய்துகொண்டிருக்கின்றன. பிரசார காலத்திலேயே இரண்டு தரப்புகளும் மோதியுள்ளன. பதிவுசெய்யப்பட்ட தேர்தல் வன்செயல்கள் கடந்த புதன்கிழமை வரை 671ஆக இருந்தது. உண்மையான எண்ணிக்கை அதனை விடவும் அதிகமாகவே இருக்கும்.

தேர்தல் பிரசாரகாலத்திலேயே வன்செயல்கள் இத்தனை என்றால் தேர்தலன்றும் அதற்கு முதல்நாளும் எந்தளவுக்கு உயர்ந்துசெல்லும் என்று நினைத்துப்பார்க்க வேண்டியதுதான். தேர்தலைக் குழப்பமின்றி அமைதியாக நடத்த முடியும் என்று அரசாங்கத் தரப்பில் - பொலீஸ் தரப்பில் - தெரிவிக்கப்பட்டபோதிலும் அது கேள்விக்குரிய ஒன்றுதானே.

தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையம் நாளாந்தம் விடுக்கும் அறிக்கைகளைப் படித்தால் ஆளும்கட்சித் தரப்பினரே அதிக மோதல்கள். வன்செயல்களில் ஈடுபடுவதனை அவதா

## உள்ளும் புறமும்

குறுமணி

னிக்கமுடிகிறது.

தமது தரப்பு மீது சேறுபூசி, நியாயமற்ற தேர்தலை நடத்த முயல்வதாக மக்களை நம்பச் செய்யும் நோக்குடனேயே ஐக்கிய தேசியக்கட்சியினர் கண்டபடி முறைப்பாடுகளைச் செய்து வருவதாக ஆளும் கட்சித்தரப்பின் அமைச்சர்கள் கூறுகிறார்கள்.

தேர்தல் அன்று கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் படையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தேர்தல் குழப்பமின்றி, நீதியாக, சுதந்திரமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்தாலும் -

தெற்கில் உள்ள எல்லோருக்கும் இது குறித்து நிறையவே சந்தேகம் உண்டு. வயம்பா மாகாணசபைத் தேர்தல் அளவுக்கு இல்லாவிடினும் ஜனாதிபதித் தேர்தல் நேர்மையாக நீதியாக நடக்க வாய்ப்பில்லை என்பது இப்போதே தென்

## கள்ளவாக்குப் போடும் திட்டம் கண்காணிப்புக் குழுக்களின் கண்களில்

படுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் தாம் விரும்பியவர்களைத் தெரிவு செய்து ஆட்சிப்பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பதுதான் உண்மையான மக்கள் ஆட்சி. மக்களின் வாக்குரிமையே ஜனநாயத்தின் முதன்மைச் சிறப்பு. அது மக்களுக்கு உள்ள மனித உரிமைகளில் ஒன்று. தேர்தல் வாக்கு அரசியல் நீதிக்கு உட்படுகின்றது.

இத்தகைய "மகிமையுள்ள" தேர்தல் கள்ளவாக்குப் போடுதல், மோசடி மற்றும் தில்லுமுல்லு இல்லாமல் நடைபெற்றாலேயே உண்மையான மக்கள் தெரிவாக அமையும்.

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கண்காணிப்பு அதிகாரம் வழங்கப்படவில்லை. வெறும் அவதானிகளாக இருந்து தமது அவதானிப்பை, "தீர்ப்பை" அறிக்கை வடிவத்தில் அரசிடம் கையளித்துவிட்டுச் செல்வார்கள்.

உள்ளூர் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் பணி ஜனாதிபதித் தேர்தலில் பெரும் பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கலாம் . தேர்தல் வன்செயல்களை கண்காணிப்புக் குழு உறுப்பினர்களால் தடுக்கமுடியாது. தேர்தல் நடைபெற்று முடிந்தபின்னர் அவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவரலாம். கள்ளவாக்குப் போடுதல் மற்றும் ஏனைய தில்லுமுல்லுகளையும் ஓரளவு கண்டுபிடிக்க முடியும்.

தென்னிலங்கையின் ஏழு மாகாணங்களிலும் தேர்தல் இடையூன்றி நடைபெறும். மக்கள் வாக்களிப்பார்கள்; பகிஷ்கரிப்பு, வாக்களிக்கச் சென்று வாக்குகளைப் [illegible]ல் என்று எதுவும் இருக்காது.

[illegible]க்கு - கிழக்கு மாகாணத்தின் கிழக்குப் பிரதே[illegible]த்திலும் தேர்தல் இடையூறின்றி நடைபெறும். மட்டக்களப்பு மாவட்டத்தின் 85 சதவீதமான பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும் அங்கும் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும். தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் அப்பகுதியில் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கில் வவுனியாவில் தேர்தல் வாக்களிப்பு நடைபெறும். மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் வாக்களிப்பு நடைபெறாது.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. ஆனால் தேர்தல் நடைபெறக்கூடிய சூழ்நிலை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நில்வுமா என்பதனை எவரும் எதிர்வுகூறமுடியாத நிலைமை உருவாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை (11ஆம் திகதி) காலை பாதுகாப்பு நிலைமை திடீரென மாறியது. தென்மராட்சிப் பிரதேசத்தின் கடலோரக் கிராமங்களில் ஒன்றான தனங்களப்பின் மீது விடுதலைப்புலிகள் ஏவிய ஷெல்களினால் தென்மராட்சியிலும், யாழ்ப்பாண நகரத்திலும் பதற்றநிலை தோன்றியது.

செவ்வாய்க்கிழமை (14ஆம் திகதி) நண்பகலோடு ஷெல் முழக்கம் ஓய்ந்தபோதிலும் எப்போதும் அது மீண்டும் ஆரம்பமாகலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. தென்மராட்சிப் பிரதேசத்தைச்சேர்ந்த தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி - நாவற்குழி, கோவில் குடியிருப்பு, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி நகரப் பிரிவு, கொடிகாமம் வடக்கு ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 4000 மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு (புதன்கிழமை வரை) வெளியேறி இருந்தனர். இவர்கள் உறவினர் வீடுகளிலும் ஆலயங்களிலும் தங்கி உள்ளனர்.

எப்போதும் எதுவும் நடைபெறலாம் என்ற பீதியுடன் சாவகச்சேரியின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இடம்பெயரும் மனநிலையுடனேயே காணப்படுகின்றனர். அவர்கள் மட்டுமென்ன, யாழ்.நகரத்தில் வசிக்கும் மக்களும் அச்சத்துடனேயே உள்ளனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவகை ஊகங்களுடன், வதந்திகளின் அடிப்படையில் சில திகதிகளைக் கூறியவாறே நாள்களை நகர்த்திக்கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய ஒரு புறச்சூழ்நிலையில் யாழ்ப்பாண மக்களுக்கு வாக்களிக்கும் மனநிலை இருக்குமா என்பது பெரிய கேள்விக்குறியாகி உள்ளது. தங்கள் உயிர்ப்பாதுகாப்புச் சார்பாக உளவியல் ரீதியான மனப்பதற்றம் நிலைக்குமானால் இங்கு வாக்களிப்பு மிகவும் மந்தமாகவே இருக்கும்.

இப்பத்தியில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, ஜனாதிபதித் தேர்தல் பற்றிய பிரகடனம் வெளியிடப்பட்ட காலத்திலும், நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட காலத்திலும் குடாநாட்டு மக்களிடம் வாக்களிப்புச் சம்பந்தமான பிரக்ஞை இருக்கவில்லை.

சந்திரிகாவும் ரணிலும் எங்களைப் பொறுத்தவரையில் மோதகமும் கொழுக்கட்டையும் ஆவர். அவர்களில் யார் வென்றாலும் எமக்கு என்ன வரப்போகிறது? இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன? யார் பதவிக்கு வந்துதான் தமிழ்மக்களுக்கு விமோசனமா கிடைக்கப் போகிறது? இடம்பெயர்வும், அவலநிலையும் நீங்கி உரிமைகள் கிடைக்கவா போகின்றன? - என்ற மனச்சலிப்புடனேயே குடாநாட்டு மக்கள் காணப்பட்டனர்.

எனினும் மாவீரர் தின உரையின் பின்னரும், தேர்தல் பிரசாரம் சற்று சூடுபிடிக்கத் தொடங்கிய பின்னரும் வாக்களிப்பதில் மக்களுக்கு விருப்பம் ஏற்பட்டது தெரிந்தது. தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் எதுவும் குடாநாட்டில் நடைபெறவில்லையாயினும், சுவரொட்டிகள் ஒட்டுதல், பச்சை, நீல நிறக் கொடிகளைக் கட்டுதல் ஆகியவற்றில் சூடான போட்டி நிலவியதும் மக்கள் தேர்தல் குறித்து ஓரளவேனும் நினைக்கக் காரணங்கள் ஆகும்.

கடந்த வார இறுதியில் ஆளுங்கட்சி வேட்பாளருக்கும் எதிர்க்கட்சி வேட்பாளருக்கும் ஆதரவான கொடி, சுவரொட்டிப் போட்டியில் இரண்டு தமிழ்க்கட்சிகள் ஈடுபட்டிருந்தன. தேர்தல் சூடு சிறிதாக உஷ்ணம் தொடங்கிய அவ்வேளையில் [illegible]தலைப்புலி[illegible]ந்திய இராணுவத் [illegible]ர் அ[illegible] சூட்டை முற்றாகத் [illegible]பட்டன.

[illegible]தலைப்புலிகள் தேர்தல் காலத்தில் குடாநா[illegible]டில் இராணுவத் தாக்குதலை ஆரம்பித்தது தேர்தலைக் குழப்பும் நோக்கம் கொண்டதாக இருக்குமோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவுகிறது.

மொத்தத்தில் தேர்தலில் மக்கள் வாக்களிக்க முடியுமா என்ற புறச்சூழ்நிலை ஒன்று இப்போது தோன்றியுள்ளது. இடம்பெயர்வா அல்லது தேர்தலா என்ற கேள்வியே இப்பத்தி எழுதப்படும் வரை குடாநாட்டுமக்கள் மனங்களில் மேலோங்கி நிற்கிறது.

## இடம்பெயர்வா வாக்களிப்பா என்பதனைச் சொல்லமுடியா நிலை

அது ஒரு புறமிருக்க -

யாழ்ப்பாணத்தில் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மிக மும்முரமாக நடைபெற்று வருகின்றன. அரசாங்க இயந்திரம் உஷாராகப் பணியாற்றுகிறது.

தேர்தல்கள் மாவட்டரீதியில் நடக்கத் தொடங்கிய பின்னர், யாழ்.நிர்வாக மாவட்டமும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டமும் சேர்ந்ததே யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் எனப்படுகிறது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 6லட்சத்து 12ஆயிரத்து 770 ஆகும். இவர்களில் 49 ஆயிரத்து 270 வாக்காளர்கள் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மிகுதி 5லட்சத்து 63ஆயிரத்து 500 வாக்காளர்களே குடாநாட்டைச் சேர்ந்தவர்கள். (இவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளைப் பிரதேச வாக்காளர்களும் அடக்கப்பட்டுள்ளனர்)

தேர்தலைச் சுமுகமாக நடத்தும் பொருட்டு மொத்தம் இருக்கவேண்டிய 423 வாக்களிப்பு நிலையங்கள், 148 கொத்தணி வாக்களிப்பு நிலையங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 5,500 அரச ஊழியர்கள் தேர்தல் பணிகளைச் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் சில இராணுவக் காவலரண்களுக்கு அருகில் அமைக்க ஏற்பாடாகி இருந்தது. இப்போதைய சூழ்நிலையில் அது வாக்காளருக்குப் பாதகமாக அமையும் என்பதால், அவற்றை மாற்றுவதற்கான ஏற்பாடுகளில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

### கண்காணிப்புக்குழுக்கள்

தேர்தல்களைக் கண்காணிப்பதற்கென்று கொழும்பிலிருந்து இரண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பின்(PAFFREL) பிரதிநிதிகளும், தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் நிலையத்தின் (CMEV) பிரதிநிதிகளும் இவ்வாரம் இங்கு வந்துள்ளனர். முதலாவது அமைப்பின் சார்பில் சுனில் சாந்த, எஸ்.ஆதவன் ஆகியோர் இங்கு வந்தள்ளனர். இரண்டாவது அமைப்பின் சார்பில் கலாநிதி அர்ச்சுனா பராக்கிரமவும் எஸ்.தேவ்வும் வந்துள்ளனர்.

இவர்கள் தேர்தலின்போது மோசடிகள், தில்லுமுல்லுகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவார்கள் எனத் தெரிய வருகிறது. இரண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தமது பணிகளைச்செய்வது தொடர்பாகவும் இங்குள்ள நிலைமைகள் குறித்தும் பிரமுகர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்தாலோசனைகள் நடத்தினர்.

"பவ்ரல்" பிரதிநிதிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தினர். அப்போது தமது கண்காணிப்புப் பணிகளுக்கு உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

### அரசசார்பற்ற நிறுவனங்கள்

அவ்வேளை, அவர்களில் பலரும் தற்போதைய குடாநாட்டில் தேர்தலை நடத்துவதற்குச் சாதகமான புறச்சூழ்நிலை இல்லை என்று சுட்டிக் காட்டினர். அதற்கான காரணங்களும் அப்போது எடுத்துரைக்கப்பட்டன. அவற்றில் சில பிரதான காரணங்களை இங்கே தருகின்றோம்.

* நாட்டின் ஒருபகுதியான வன்னியில் வறுமை, நோய், மரணம் என மக்கள் அவலப்படும்போது மறுபகுதியில் எப்படி நீதியான தேர்தலை நடத்தமுடியும்?

* இந்தத் தேர்தலினால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை. நம்பிக்கை அற்ற நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

* இத்தகைய சூழ்நிலையில் தேர்தலைக் கண்காணிக்க முடியாது என்று அரசாங்கத்துக்கு உங்களால் அறிவிக்கமுடியாதா?

இவற்றுக்குப்பதிலளித்த 'பவ்ரல்' பிரதிநிதிகள் குடாநாட்டில் தேர்தல் நடத்துவதற்குரிய சூழல் இல்லை என்பதனை ஏற்றுக்கொண்டனர்.

தேர்தல் நியாயமாக நடக்கவும் அதில் நிகழக்கூடிய முறைகேடுளைத் தவிர்க்கவும், மோசடிகள், தில்லுமுல்லுகளை அம்பலத்துக்குக் கொண்டுவரவும் நடவடிக்கை எடுப்பதே தமது பணியாக இருக்கும் என அவர்கள் விளக்கமளித்தனர். குடாநாட்டில் நடக்கவுள்ள தேர்தல் குறித்து எவ்வித பக்கச்சார்பும் இல்லாமல் தாங்கள் கடமையாற்றவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அத்தோடு தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் தம்முடன் இணைந்து கடமையாற்றுமாறும் மீண்டும் கேட்டுக்கொண்டனர்.

இவர்களின் கோரிக்கைகள் குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இரண்டொரு தினங்களில் தமது முடிவை தெரிவிப்பதாகக் கூறியிருந்தனர். ஆயினும் இப்பத்தி எழுதப்படும் வரை அவர்கள் தமது பதிலைச் தெரியப்படுத்தவில்லை என அறியவந்தது.

கொழும்பில் இருந்து வந்துள்ள தேர்தல் கண்காணிப்பு குழுக்களுக்கு குடாநாட்டில் பெரிய அளவிலான கள்ளவாக்குப்போடும் திட்டம் ஒன்று இருப்பது நன்கு தெரியும். குடாநாட்டுக்கு அனுப்பப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் இங்கு வசிக்கும் வாக்காளர்களைவிட இரண்டுமடங்கானது என்பது ஏற்கனவே எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். வேட்பாளர்களின் பிரதிநிதிகள் அண்மையில் பதில் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்தபோது இதனைப் பெரும் பிரச்சினையாகக் கிளப்பியிருந்தனர். ஆனால் பதில் ஆணையாளர் குடாநாட்டில் எல்லாம் சரியாகவே நல்லதாகவே நடக்கும் என்று கூறி நிலமையைச் சமாளித்துக் கொண்டார். இந்த விடயமும். இங்குவந்துள்ள கண்காணிப்புக் குழுக்களின் பிரதிநிதிகளுக்குத் தெரியும்.

அதனால் அவர்கள் இதுவிடயத்தில் மிகவும் கவனமாக உள்ளார்கள் என்பது பிரதிநிதிகளில் ஒருவருடனுடன் உரையாடியபோது தெரியவந்தது. குடாநாட்டில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் இதுவரை தேர்தல் ஏஜண்டுகளை நியமிக்காத வேட்பாளர்களின் சார்பில் அந்தந்த இடங்களைச் சேர்ந்தவர்களை நியமிப்பதன் மூலம் கள்ளவாக்குப் போடுவதைத் தவிர்க்கமுடியும் என்று அவர் தெரிவித்தார். அதற்கான சகல முயற்சிகளையும் தாம் எடுத்துவருவதாகவும் இங்குள்ள அமைப்புகளின் உதவி தங்களுக்குத் தேவை என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் அக்கறை உள்ளவர்கள், இங்கு வந்துள்ள கண்காணிப்புக் குழுக்களுக்கு இந்தவகையில் உதவலாம். ஒரு சிலர் யாழ்ப்பாணத்தில் இருந்து குறிப்பிட்ட ஒரு வேட்பாளருக்கு அதிகவாக்குகள் கிடைக்கச் செய்யும் முயற்சியை முறியடிக்கலாம் - எனவும் அவர் அர்த்த பூர்வமாகக் கருத்துவெளியிட்டார்.

தமிழ் மக்களின் இன்றைய நிலைப்பாட்டை வெளிஉலகத்திற்குத் தெரிவிக்கும்முகமாக ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற முயற்சி பிசுபிசுத்துப்போன நிலையில், தமிழ் அரசியல் கட்சிகள் வழமை போல தன்னை பிரிந்து ஜனாதிபதி வேட்பாளர்களை ஆதரிக்க செயற்பட்டு வருகின்றனர். ஒவ்வொருகட்சியும் தத்தமது நிலைப்பாட்டை விளக்கி காரணங்களைத் தெரிவித்து தமது செயலை நியாயப்படுத்தத் தவறவில்லை.

மூத்தகட்சியான தமிழர் விடுதலைக்கூட்டணி சந்திரிகாவையோ, ரணிலையோ ஆதரிப்பது இல்லை என்றும் மக்கள் தமது சுயவிருப்பப்படி வாக்களிக்கலாம் என்றும் நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இவர்களைப்போலவே ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியும் நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்து தமிழ்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய, சீனத் தலைவர்களின் கூட்டறிக்கை: புதிய உலக ஒழுங்குக்கு முன்னேற்பாடா?

உலக உலா
என்.பி.சீலன்

மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான குரல் மேற்குலகில் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்க, மறுபுறத்தில் மனிதஉரிமை மீறல்கள் குறித்து சர்வதேச உலகு அலட்டிக்கொள்ளக்கூடாது என்பதை வற்புறுத்தும் கூட்டறிக்கை ஒன்றில்



சீனத் தலைவர் ஜியாங் ஸெமினும் ரஷ்யத் தலைவர் பொறிஸ் யெல்ட்ஸினும்.

அணுஆயுத வலிமைமிக்க இரண்டு வல்லரசுகள் ஒப்பமிட்டிருக்கின்றன.

சந்தைப் பொருளாதாரத்தை ஓரளவு ஏற்றுக்கொண்டு, அதேசமயம் தொடர்ந்து கம்யூனிஸ நாடாக விளங்கிவருவது சீனா.

முன்னர் கம்யூனிஸ அமைப்பின் கீழ் சோவியத் ரஷ்ய குடியரசில் இருந்து, பின்னர் கம்யூனிஸத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து ஜனநாயகப் பாணிக்குத் திரும்பிய குடியரசு ரஷ்யா.

இரண்டுமே அணுஆயுத வலிமைமிக்க வல்லரசுகள். ஆனால் தமது ஆட்சி அமைப்பு மற்றும் அதிகாரப் பலத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக தமது நாட்டிலே மனித உரிமை மீறல்களை கண்மூடித்தனமாகப் புரிபவையாக அல்லது புரிந்தவையாக மேற்குலகால் கண்டிக்கப்பட்டு வருபவை அவை.

சீனாவில் ஜனநாயக உரிமை கேட்டு அகிம்சை வழியில் கிளர்ந்தெழுந்த மாணவர் மற்றும் இளைஞர் சக்தியை ஆயுதப்படைகளைக் கொண்டு கொடூரமான - பலாத்காரமான - முறையில் 1980களின் பிற்பகுதியில் கம்யூனிஸ ஆட்சியாளர் அடக்கி ஒடுக்கினர். 1989இல் தினமென் சதுக்கத்தில் மாணவர்கள், ஆயுதப்படையினரால் அடக்கப்பட்டு அவர்களது ஜனநாயக உரிமைக்கான குரல்வளை நசுக்கப்பட்டபோது, அந்த மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச உலகமே கொதித்தெழுந்து கண்டனம் தெரிவித்தது. அப்போது முதல் தொடர்ந்து சீனாவின் பெயர் மனிதஉரிமை மீறல் விவகாரங்களில் களங்கமுடையதாகவே கருதப்பட்டு வருகிறது.

இதேபோல -

ரஷ்யாவும் கூட மனித உரிமை மீறல் விவகாரங்களில் தனது பெயரைக் கெடுத்துக்கொண்டு நிற்கின்றது.

ரஷ்யாவிலிருந்து தன்பாட்டில் பிரிந்துசென்று, தனிக்குடியரசாகப் பிரகடனம் செய்த செச்சினியாவை மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அதன் மீது மனிதப் பேரழிவைத் தரும் - மூர்க்கத்தனமான - இராணுவநடவடிக்கைகளைக்கட்டவிழ்த்துவிட்டிருப்பதாலும்-

அதன் வடபிரதேசமான டாகெஸ்தானில் இஸ்லாமிய பிரிவினைவாதிகளுக்கு எதிராக ரஷ்ய படைகள் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளினாலும் -

ரஷ்யாவில்மனிதஉரிமை பேணும் விவகாரம் சர்வதேச சமுதாயத்தில் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது.

செச்சினியாவின் தலைநகர் குறோஸ்னியை இலக்கு வைத்து ரஷ்யப்படைகள் தொடுத்துள்ள பெரும் போரையும், அதனால் செச்சினியாவில் ஏற்பட்டுள்ள பேரழிவையும் கருத்தில் கொண்டு, ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான சொற்கள் அடங்கிய கண்டனங்களை உலகத் தலைவர்கள் வெளியிட்டு வருகின்றார்கள்.

“செச்சினியாவில் பெருமபோரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு, மேற்குலகின் உதவிகளையும் தொடர்ந்து பெறலாம் என்று ரஷ்யா கருதக் கூடாது” - என்று ஜேர்மன் அதிபர் ஜெரால்ட் ஸ்குருடர் தெரிவித்திருக்கின்றார். ரஷ்யாவுக்கு உதவிவழங்கும் மேற்குநாடுகளில் முன்னணியில் இருப்பது ஜேர்மனி. அதன் தலைவரின் கூற்று, செச்சினியாவில் போரைத் தொடர்ந்தால் ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கையாக அதற்கு வழங்கப்படும் மேற்குலக உதவிகள் வெட்டப்படும் என்ற எச்சரிக்கையாக அமைந்துள்ளது என அவதானிகள் கூறுகின்றனர்.

பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் ரஷ்யாவுக்கு மேற்குலக நாடுகளின் உதவிகள் வெட்டப்படுமானால் பொருளாதார நிலைமை அதோ கதியாகிவிடும்.

அத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டால் தனது பதவிக்காலத்தின் கடைசி வருடத்தில், மிகவும் செல்வாக்கு இழந்த நிலையில், சுகவீனமுற்றவராகக் காணப்படும் ரஷ்யத் தலைவர் பொறிஸ் யெல்ட்ஸினின் அரசியல் எதிர்காலமும் கேள்விக்குரியதாகிவிடும்.

செச்சினியா மீது ரஷ்யா ஆரம்பித்துள்ள இராணுவ நடவடிக்கையை அமெரிக்காவும் கடுமையாகச் சாடியிருக்கின்றது.

“ரஷ்யா தனது தவறுகளுக்காக பிராயச்சித்தம் செய்யவேண்டியிருக்கும். ரஷ்யாவின் இந்தப்போக்கு, அதை சர்வதேசஉலகில் தனிமைப்படுத்தி விடும்” - என்று அமெரிக்க அதிபர் கிளின்ரன் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

கிளின்ரனின் இந்த எச்சரிக்கை ரஷ்ய அதிபர் யெல்ட்ஸினை சீற்ற முற வைத்திருக்கின்றது. “ரஷ்யா மீது அழுத்தம் பிரயோகிக்க கிளின்ரன் முயற்சிக்கின்றார். இது, ரஷ்யா முழுஅளவிலான அணுஆயுத அணியைக் கொண்டிருக்கின்றது என்பதை கிளின்ரன் மறந்து விட்டிருக்கின்றார் என்பதையே காட்டுகின்றது. அதனால்தான் தனது நாட்டின் பலம் குறித்து அவரது இறுமாப்பு அவரை அதிகம் பீற்றிக்கொள்ள வைத்திருக்கின்றது” - என்று யெல்ட்ஸின் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

யெல்ட்ஸினின் இந்தப் பதிலுக்குக் காட்டமான எதிர்ப் பதிலை வாஷிங்ரனில் கிளின்ரன் அளித்தார்.

“நான் அதை மறந்துவிடவில்லை. ஆனால் கொசோவோ விவகாரத்தில் அவர் இணங்கிவராமல் எதிர்த்து நின்ற போதிலும், நான் என்பாட்டில் எடுத்த நடவடிக்கைகள் குறித்து அவர் மறந்துவிட்டார் போலும்” - என்று காட்டமாகப் பதிலளித்தார் கிளின்ரன்.

ரஷ்யாவின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் கொசோவோவில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் பெரும் தாக்குதல்நடவடிக்கையை மேற்கொண்டு தமது இலக்கை அடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மனித உரிமைகள் மீறலில் சர்வதேச ரீதியில் கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கும் சீனாவும், ரஷ்யாவும் தமக்குள் சில விவகாரங்களில் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன.

தனது சம்மதமின்றி தன்பாட்டில் பிரிந்து சென்ற செச்சினியக் குடியரசை மீண்டும் அடக்கி ஒடுக்கி, தன்னுடன் இணைத்து, ஆட்சி அதிகாரத்தை விரிவுபடுத்தவேண்டும் என்பது ரஷ்யாவின் வேணவா.

இதேபோன்று பிரிந்து தனிநாடாக இயங்கும் தைவானை தன்னுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பது சீனாவின் நிலைப்பாடு.

அத்தோடு மனித உரிமை மீறல் விவகாரங்களிலும் சர்வதேசக் கண்டனத்துக்கு இலக்காகும் நிலைமை.

இவ்வாறு எதிர்நோக்கும் பிரச்சினைகளால் ஒன்றுபட்டிருக்கும் சீனாவும், ரஷ்யாவும் பிரச்சினைகளுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளிலும் ஒன்றிணையத் திட்டமிட்டன.

ரஷ்ய அதிபர் யெல்ட்ஸின் கடந்த வாரம் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயம் இத்திட்டத்தை வகுப்பதற்கு உதவியிருக்கின்றது.

ரஷ்யத் தலைவர் யெல்ட்ஸினும் சீன அதிபர் ஜியாங் ஸெமினும் சந்தித்துக்கொள்வது இது ஏழாவது

## செச்சினியத் தலைநகர் குறொஸ்னி எந்நேரமும் ரஷ்யப் படைகளிடம் வீழும்!

தடவை.

ஜியாங் ஸெமின் 1994, 1997 மற்றும் 1998இல் ரஷ்யாவுக்கும் -

யெல்ட்ஸின் 1992,1996,1997 இல் சீனாவுக்கும் -

விஜயம் செய்தபோது இரு தலைவர்களும் விரிவாகப் பேச்சு நடத்தியிருந்தனர்.

தற்போதைய ஏழாவது சந்திப்பு மேற்குலகுக்கு எதிரான ஓர் அணியில் இரு நாடுகளையும் மிக நெருக்கமாக இணைப்பதற்கு வழி வகுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இம்முறை சீனாவில் இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்ட ரஷ்ய அதிபர் அங்கு சீனத்தலைவர் ஜியாங் ஸெமின்னுடன் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார். கடந்த வாரம் வெள்ளியன்று அது பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

“மனிதஉரிமைகள் விவகாரத்தை சம்பந்தப்பட்ட நாடுகளின் இறைமையிலும்விட முக்கியமான விடயமாகத் தூக்கிப் பிடிப்பதையும், மனித உரிமைகள் விவகாரம் என்ற பெயரில் சுதந்திரமானதொரு நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதையும் இரு நாடுகளும் எதிர்க்கின்றன.

“நாடுகளின் எல்லைகளுக்கு உட்பட்ட ஐக்கியத்தைப் பேணுவதையும், சீனாவுடன் தைவானையும், ரஷ்யாவுடன் செச்சினியாவையும் இணைப்பதையும் அதற்கான ஒட்டுமொத்தமான முயற்சிகளையும் இரு நாடுகளும் வரவேற்கின்றன.” - இப்படி கூட்டறிக்கை தெரிவித்தது.

“உலகத்தில் சமாதானத்தைப் பேணுவதில் ஐ.நா. முக்கிய பங்கு வகிக்க வேண்டும்” - என்றும் பேஜிங், மொஸ்கோ அரசுகள் அந்தக் கூட்டறிக்கையில் கோரியுள்ளன.

இது உலகில் சமாதானத்தைப் பேணுகிறேன் என்று கூறிக்கொண்டு - உலக பொலிஸ்காரனாகத் தன்னைக் காட்டியவாறு - நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் தலையிடுவதை மறைமுகமாகக் கண்டிக்கும் விவகாரங்களாகக் கொள்ளலாம்.

உலக சமாதானாத்தைப் பேண வேண்டிய பொறுப்பு ஐ.நா. சபைக்கு உரியதே தவிர, தனக்குரிய அதிகாரமாக - தன்பாட்டிலேயே அமெரிக்கா எடுத்துக்கொள்ளவேண்டிய விடயமல்ல - என்று இருநாட்டுத் தலைவர்களும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

செச்சினிய விவகாரத்தில் மேற்குலகின் கடும் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கும் ரஷ்யா, தனது நிலைப்பாட்டுக்கு சீனாவின் ஆதரவைப் பெற்றிருப்பது, இந்த விடயத்தில் அடுத்த கட்டம் என்ன என்ற கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

செச்சினியா மீதான தனது கொடுரப்பிடியை - சர்வதேச உலகின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் - சீனாவின் தார்மீக ஆதரவோடு - ரஷ்யா இறுக்கும்போது மேற்குலக நாடுகள் என்ன நடவடிக்கை எடுக்கும்? எதிர்த்தரப்பில் சீனா இருக்க - அதன் ஆதரவின்றி - அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் செச்சினியா விவகாரம் தொடர்பாக ரஷ்யாவுக்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அது ரஷ்யாவைப் பாதிக்குமா? சீனாவுடன் கைகோர்த்து நின்று அந்த எதிர்ப்புக்களை எல்லாம் முறியடித்து செச்சினியா மீதான தனது இராணுவ நடவடிக்கைகளை ரஷ்யா வெற்றிகரமாக நிறைவேற்றுமா? - இவை இப்போது எழுந்துள்ள கேள்விகள்.

இது தவிர, ரஷ்ய - சீனத் தலைவர்களின் சந்திப்பும் அதன் பின்னான கூட்டறிக்கையும் புதிய சர்வதேச ஒழுங்கு ஒன்றை ஏற்படுத்துவதற்கான அத்திவாரமாக அமையுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

சோவியத் ரஷ்ய குடியரசுகள், பல தனி நாடுகளாக உடைவதற்கு முன்னர் - அமெரிக்க - ரஷ்ய பனிப்போர் நிலவியகாலத்தில் - உலக நாடுகள் அமெரிக்காவிற்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் பின்னால் தனித்தனியாக அணிவகுத்து நின்ற வகையில் உலக ஒழுங்கு அமைந்திருந்தது.

ஆனால் 90களின் ஆரம்பத்தில் சோவியத் ரஷ்யா பல குடியரசுகளாகப் பிரிந்து, அதன் வல்லமை குன்றியபோது சோவியத் ரஷ்யாவுக்குப் பின்னால் நின்ற நாடுகளின் அணியின் வலிமையும் சிதறி,புதிய உலக ஒழுங்கு ஏற்பட்டது. அதில் அமெரிக்காவின் கை தனித்து வலிமைமிக்கதாக வுளர்ந்தது. சர்வதேச விவகாரங்களின் அமெரிக்க அணியின் பின்னால் செல்லவேண்டிய கட்டாய நிலை உலக நாடுகளுக்கு.

இந்தச் சூழ்நிலையில்தான் ரஷ்ய - சீன அதிபர்களின் சந்திப்பும் கூட்டறிக்கைப் பிரகடனமும் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சந்திப்பு புதிய உலக ஒழுங்குக்கு வழிகோலலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என அவதானிகள் கூறுகின்றனர்.

* * * *

செச்சினியக் குடியரசு மீது ரஷ்யப் படைகள் தொடுத்திருக்கும் இராணுவத் தாக்குதல் தற்போது மிக முக்கிய கட்டத்தை அடைந்திருக்கின்றது.

இக்கட்டுரை வரையப்பட்ட சமயம் செச்சினியத் தலைநகர் குறோஸ்னியை எந்நேரமும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முன்னணி நிலையில் ரஷ்யப் படைகள் இருந்தன.

குறோஸ்னியில் இருந்து சுமார் இருபது கிலோ மீற்றர் (பன்னிரண்டு மைல்) தொலைவில் உள்ள ஷாலி என்ற செச்சினிய நகரமே கடைசியாக ரஷ்யப்படைகளிடம் வீழ்ந்தது. இதிலிருந்தவாறே முன்னேறி குறோஸ்னிக்குள் புகும் நடவடிக்கையை ரஷ்யப் படைகள் ஆரம்பிருத்திருந்தன.

தலைநகர் குறோஸ்னி மீதான தனது தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னர், அங்கிருக்கும் பொதுமக்கள் அனைவரையும் வெளியேறுமாறு - ஒரு காலக்கெடு கொடுத்து - அறிவித்தல் ஒன்றை ரஷ்யத்தரப்பு வெளியிட்டிருந்தது.

இந்தக் காலக்கெடு பற்றிய விவரங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் குறோஸ்னி நகரத்தின் மீது விமானத்திலிருந்து வீசப்பட்டன.

காலக்கெடு கடந்த சனிக்கிழமை முடிவுற்றதை அடுத்து குறோஸ்னி மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

எனினும் இடம்பெயர்ந்து செல்வதற்கு நாதியற்ற சுமார் 40ஆயிரம் பொதுமக்கள் இன்னும் குறோஸ்னியில் தங்கியிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

செச்சினியா மீதான இந்த இராணுவக் கிடுக்கிப்பிடியை மேற்குலகும், ஐரோப்பிய ஒன்றியமும் கடுமையாக சாடியுள்ள போதிலும் -

உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்குமாறு ரஷ்யாவை அவை நிர்ப்பந்தித்துள்ள போதிலும்- அவற்றையெல்லாம் நிராகரித்து விட்டு தனது தீவிர இராணுவத் தாக்குதல் திட்டத்தை நிறைவேற்றி செச்சினிய கிளர்ச்சியாளர்களை - போராளிகளை அடக்கி ஒடுக்குவதென்பதில் ரஷ்யா கங்கணம் கட்டி நிற்கின்றது. கொசோவோ பிரச்சினை தொடர்பாக, இவ்வருட முற்பகுதியில், யூகோஸ்லாவியாவில் மக்கள் நெருக்கமாக இருந்த குடியிருப்புகள் மீது அமெரிக்கத் தலைமையிலான நேட்டோப் படைகள் முன் எப்போதும் இல்லாத வகையில் பெரும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதும் -

இத்தாக்குதல்களினால் மனிதப் பேரழிவும் மனித உரிமை மீறல்களும் நிகழ்வதாகச் சுட்டிக்காட்டி, அதற்குக் கண்டனம் தெரிவித்து, அதை நிறுத்துமாறு ரஷ்யாவும் ஏனைய நாடுகளும் கேட்டபோது நேட்டோ அமைப்பு அதை செவிமடுக்காமல் தனதுதாக்குதலை தொடர்ந்து நடத்தி தனது இலக்கை எட்டியதும் - குறிப்பிடத்தக்கவை.

அப்போது அடுத்தநாட்டு விவகாரத்தில் நேட்டோநாடுகள் தலையிட்டு, இராணுவத் தாக்குதலை மேற்கொண்டு, பேரழிவுகளை ஏற்படுத்தி விட்டு -

இப்போது தனது சொந்த நாட்டில் கிளர்ச்சி செய்து, தனித்துப் பிரிந்து சென்ற குடியரசுடன் அதேபாணி நடவடிக்கையை ரஷ்யா எடுக்கும்போது மேற்குலகு அதிகம் துள்ளிக்குதிப்பது ஏன் என்று ரஷ்ய, சீனத் தரப்புக்களில் நியாயம் கேட்கப்படுகின்றது.

குறொஸ்னியை ரஷ்யப்படைகள் கைப்பற்றினாலும் கூட, தமது கிளர்ச்சியை விட்டுக்கொடுக்கும் நிலையில் செச்சினியப் போராளிகள் இல்லை என்றும் தெரிகின்றது.

கிளர்ச்சியைக் கைவிட்டு சரணடையும் செச்சினியப் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்படும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

அடுத்த பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் தமது ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடையும் கிளர்ச்சியாளர்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்கும் திட்டம் ஒன்றை ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ்ச் சபையான டூமா அங்கீகரித்துள்ளது.

எனினும் -

தலைநகர் குறொஸ்னியை பறிகொடுத்தாலும், தாங்கள் தெற்கே பாதுகாப்பான மலைப்பிரதேசங்களுக்குப் பின்வாங்கி, அங்கிருந்தவாறே தமது நாட்டின் மீட்புக்காக ரஷ்யப் படைகளுடன் கிளர்ச்சிப் போரைத் தொடரப் போவதாக முஸ்லிம்களான செச்சினியப் போராளிகள் தெரிவித்துள்ளனர்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்து ஆடும் தீர்த்தன் அவன்

*"தொன்மையிலேயே இருந்து வந்த பிறவித்துன்பமானது நீங்கும் பொருட்டு, உவகையால் ஆரவாரித்து முழுக்காடுதற்குரிய புண்ணிய கங்கை நீரையுடையவனும், அறிவு வெளியாகிய தில்லையின் கண்ணுள்ள அகண்ட வெளியில் அனல் ஏந்திஆடும் அருட் கூத்துடையவனும், இந்த நிலவுலகத்தையும் வானுலகத்தையும், நம் எல்லோரையும் ஆக்கியும், காத்தும், ஒடுக்கியும் விளையாடுபவனுமாகிய முழுமுதற் கடவுளாம் சிவபெருமானுடைய பொருள் சேர் புகழைப் பாடிக்கொண்டு கைவளையல்கள் ஒலிக்கவும், அழகிய கூந்தலின் மேல் வண்டுகள் எழுந்து ரீங்காரம் செய்யவும், பூக்கள் நிறைந்த திருக்குளத்தில் முழுகி, எல்லாவற்றையும் தன்னகத்தே உடைய அந்தச் சிவப் பழம்பொருளின் தூய திருவடிகளைத் தியானித்துப் பாராட்டியவாறு மேலும் பெரிய ஊற்றுச்சுனை நீர்நிலைகளிலும் முழுகுவோமாக!"* என்பது 'திருவெம்பாவை' பன்னிரண்டாவது பாடலின் பொருளாகும்.

இப்பாடல் இறைவனின் முத்தொழில்களையும் குறிக்கின்றது. இம் மூன்று தொழில்களும் ஆன்மாவின் உடலைப்பற்றி நிகழ்வன. பிறவிகள் தோறும் ஆன்மா எடுக்கும் உடல் காரணமாகவும், வினை காரணமாகவும் தேடிக்கொண்ட துயரங்கள் விடுபட வேண்டுமெனில், அருள் நோக்கும், திருப்பெருக்கும், உடைய புண்ணிய கங்கைகளில் நீராடவேண்டும் என்பது இதனால் பெறப்படுகிறது.



இதனை *"அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய், அருள் நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்"* என்னும் அப்பர் தமிழ் மறையாலும், *"தீதுநீங்கக் கடலாடியும், மாசு போகப் புனல் படிந்தும்"* என்ற பட்டினப்பாலைத் தொடராலும் அறியலாம். ஆற்றிலோ, ஏரியிலோ, கடலிலோ, சுனையிலோ எங்கெங்கெல்லாம் நீருண்டோ, அவையெல்லாம் கங்கை மாதாவின் அருட்பெருங் கருணையின் தனிப் பெருஞ்சுரப்புகளாகும்.

மார்கழி நீராடலின் பொதுப்பயன் நாடு செழிக்க மழையை வேண்டிப் பெறுதலாகும். திருவெம்பாவை பதினாறாவது பாடலில் *"மழையே! நீ கடலைச் சார்ந்து அதுகுறையும்படி நீரை முகந்து விண்ணில் எழுந்து, எம்மை உடைய அருள் அம்மையைப் போல நீலநிறம் பெற்றுவிளங்கி, எம்மை ஆட்கொள்ளும் உடையாளின் சிறிய இடைபோன்று மின்னி விளக்கமுற்று, எங்கள் திருவருட்தலைவியின் திருவடியின் கண்ணுள்ள பொன்னம் சிலம்பு போல ஒலித்து, இடித்து, அவ்வுடையாளின் திருப்புருவம் போல வானவில் விளங்கச்செய்து, நம்மை அடிமையாகக் கொண்ட பெருமாட்டியிலிருந்து பிரிதலில்லாத எம்பெருமானுடைய அன்பர்க்கும், அந்த அம்மையானவள் திருவுளம் கொண்டு நமக்கும், சுரந்து அருளும் இனிமைமிக்க அருட் பொலிவே போன்று பரந்து பொழிவாயாக"* என்று பொருள் கொள்ளப்படுகிறது.

## திருவெம்பாவைச் சிந்தனை

மழை என்பது வானிலிருந்து இறங்கிவருகின்ற அமிழ்தம். இறைவனாகிய பரிசுத்தன் தருகின்ற தீர்த்தம், அதனால் அவனுக்கு தீர்த்தனன் என்ற பெயர் பொருத்தமானதன்றோ! அந்த இறைவனுடைய ஆணையால் உலகமும் அதற்கு உறுதுணையாய் நிற்கும் அறம், பொருள், இன்பம், என்பனவும் நடப்பதற்கு மழை பொழிகிறது. வான் முகில் வழாது பெய்தால் மலிவளம் சுரக்கும்; மன்னன் கோன் முறை அரசு செய்வான்; குறைவிலாது உயிர்கள் வாழும்; நான்மறை அறங்கள் ஓங்கும்; நற்றவம் வேள்வி மல்கும்; வையகமும் துயர் தீர வாழும்.

*"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம் ஈண்டுமுயலப்படும்"* என்னும் தமிழ் மறையின் கூற்றுப்படி தொன்று தொட்டுத் தமிழ்ச் சான்றோராம் சைவப்பெருமக்கள் அனைத்துச் செயல்களையும் அம்மை அப்பராம் சிவபெருமானைத் தொழுதே ஆற்றி வந்தனர். அந்தமுறை தழுவி நோற்று வருவதே பாவை நோன்பாகும். இக் காலத்தில் கன்னிப்பெண்கள் நல்ல மழைபெய்து நாடு செழிக்கவும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வீடும் குடியுமாய் விளங்கவும் பீடுடைத் துணைவராம் காதற் கணவரை பெற்றுய்ய, அகிலாண்ட கோடியீன்ற அன்னையைக் கன்னி என மறைகள் பேசுவதால், மலைமகளாகிய பார்வதி அம்மையாரைக் கன்னியாக நினைந்து நோன்பிருப்பர். *"நீளநினைந்து நித்தலும் கைதொழுவதால்"* அகத் தூய்மையையும், மார்கழித் திங்களிலே, விடியற்காலையில் "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகே ரென்னக் கையாற் குடைந்து, குடைந்து மார்கழி நீராடுவதால்" புறத் தூய்மையையும் அடைவர். அவ்வாறடைந்து -

"ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின், உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம். எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்" என்று அம்பிகையாம் உமை அம்மையை விளிப்பர்.

## முருகனடியான்

"ஏலோ ரெம் பாவாய்" என்பதை இன்னொலியோடு கௌரியை நினைவுபடுத்தும் மந்திரமாகக் கொள்வதே பொருந்தும். அம்மையினூடாக அப்பன் அருளைப்பெற்று இம்மையிலும் மறுமையிலும் எல்லா நலனும் பெற விளைவதே திருவெம்பாவை நோன்பாகும். தீர்த்தனைத் தேடும் தேடலாகும்.

*"தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"*

என்ற அப்பர் திருப்பாட்டாலும் அறியலாம்.

# உழைப்பும் பிழைப்பும்

உழைத்துப் பிழைப்பவர்
உழட்டிப் பிழைப்பவர்
வளைத்துப் பிழைப்பவர்
வாட்டிப் பிழைப்பவர்
இளைத்து உழைப்பவர்
ஈட்ட உழைப்பவர்
நிலைத்து உழைப்பவர்
நீள்நிலம் உள்ளார்
உழைப்பவர் உழைப்பை
உறிஞ்சி உறிஞ்சிப்
பிழைப்பவர் அதுவே
பிழைப்பாய் நாளும்
திளைக்கிறார்; உழைப்போர்
தினமெலாம் உழைத்துக்
களைக்கிறார் எனினும்
கடமையில் தவறார்.
உழைப்ப ராற்றான்
உலகமே இயங்குது.
பிழைப்பவர் இயக்கமும்
பேணுவ(து) அதுவே
நிலைப்பவர் உழைப்பவர்
நிறைப்பவர் பிழைப்பவர்
கலைப்பவர் கலைப்பினும்
கலையார் பிழைப்பவர்
உழைப்பவர்க்(கு) உறுதுணை
ஊக்கமும் ஆக்கமும்
பிழைப்பவர்க்(கு) எத்திப்
பிழைப்பதே பெருந்துணை
அழைப்பினால் உழைப்பவர்
ஆற்றல் பெருகிடும்
பிழைப்பவர் குழப்பலால்
பெருமையே ஒடுங்கிடும்
பிழைப்பவர் பெருகிடில்
பெருகிடும் வறுமை
குழப்பமும் குதர்க்கமும்
குடிகுடி ஓச்சிடும்
இழப்பினால் நாடு
ஏழ்மையில் மூழ்கிடும்
அழைத்திடு! யாவரும்
உழைப்பினால் உயருவோம்!
மாச்சுடல் உழைப்பவர்
மாண்பினைத் தினந்தினம்
ஏச்சுமே பிழைப்பது
ஏற்றதோர் பிழைப்பதா?
மூச்சதை உள்ளே
மூட்டிடு மனிதா!
ஓச்சிடு உழைப்பினை
உலகது உய்திட
'இலமென்(று) அசையி
இருப்பார் கண்டுமே
நிலமெனும் நல்லாள்
நித்தமும் நகுமே"!
'ஆக்கம் வழிகேட்(டு)
அடையும் அசைவிலா
ஊக்கத் துடனே
உழைப்பவர் உறையுள்'
'மடியை மடியால்
மடித்து; உழைப்பால்
குடியை உயர்த்திக்
குதுகலித்(து) இருப்போம்.'

* மடி - சோம்பல்
* குடி - குடிமக்கள்

- நயினைக் கவிஞர்
நா.க. சண்முகநாதபிள்ளை.

# திருவள்ளுவர் பெருமான் காட்டும் மரங்கள்

தெய்வத் திருக்குறள், தமிழ் இலக்கிய வானில் தன்னிகரற்ற இளவள ஞாயிறு என்ன இலங்கா நிற்கின்றது. தமிழ்ச் சான்றோர், இவ்வரும்பெரும் நூலை, பதினெண்கீழ்க் கணக்குள் ஒன்றாகக் கொண்டனர். திருக்குறள் அன்றல்ல, இன்றல்ல, என்றுமே இனிய வாழ்விற்கு வழிகாட்டியாக இயங்கா நிற்கும்.

தமிழ் மொழி மாந்தருக்கன்றி, பிறமொழி மாந்தருக்கும் கூட இது வழிகாட்டியாகப் பிறங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இன்று ஆசிய மொழிகளில் மட்டும் அன்றி ஐரோப்பிய மொழிகள் சிலவற்றிலும் கூட மொழி பெயர்க்கப்பட்டுப் பீடுநடை போடா நிற்கின்றது.

திருக்குறளின் பெருமை குறித்து பண்டும் இன்றும் உள்ள தமிழ்ச் சான்றோர்கள் பலபடப்புகழ்ந்து கூறி உள்ளனர். இன்று மேற்கு நாட்டு அறிஞர் பெருமக்களும் அதனை வெகுவாகப் புகழ்தலைக் கேட்கின்றோம். தமிழன்னை குதூகலிக்கின்றாள்.

இலக்கியம், தத்துவம், மருத்துவம், இசை ஆகிய கலைகளில் பெறுதற்கரிய கலாநிதிப்பட்டம் பெற்றவர் சேர்மனிய நாட்டுப் பேரறிஞர் ஆல்பர்ட் சுவிட்சர் என்பார். அவர் சேர்மன் மொழியில் திருக்குறளைப் படித்துவிட்டு 'இந்தியத் தத்துவ வளர்ச்சி' என்னும் தமது நூலில் பின்வருமாறு கூறியுள்ளதாக அறிகின்றோம்.

## சிந்திப்போம் செயற்படுவோம்

'திருக்குறள் எளிதாகக் கைக்கொள்ளக் கூடிய அறங்களைக் கூறுகின்றது. மானிடருடைய தனிவாழ்வுக்கு வேண்டிய தனி ஒழுக்கத்திற்கும், உலகத்தோடு ஒட்ட நடந்துகொள்ள வேண்டிய பொதுவாழ்வுக்குத் தேவையான பொது ஒழுக்கத்துக்கும் பலவகையான அறங்களையும் இயம்புகின்றது. அவை பெருந்தன்மை உடையனவாகவும் அறிவுக்குப் பொருத்தம் உள்ளனவாகவும் இருக்கின்றன' - என்பதாம். மேலும் இரசிய நாட்டு மொழி பெயர்ப்பின் மூலம் பல இரசியப் பேராசிரியர்களும் புகழ்ந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இத் தொடரில், பெருநாவலர், பொய்யா மொழியார் மரங்களைக் காட்டி மக்களுக்கு உணர்த்தும் விழுமியங்கள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

தேவர் திருவள்ளுவர் எம்மை அழைக்கின்றார். அவருடன் செல்கின்றோம். நீர்வளம் அற்ற காட்டாந் தரையை அடைகின்றோம். அங்கு நீரற்று வாடி வதங்கி நிற்கின்ற வற்றல் மரத்தைக் காண்பிக்கின்றார். அன்பில்லா மனை வாழ்வும் இதனை ஒப்ப அமையும்; சிறப்பெய்தாது சிதைந்து போகும் என்கிறார். அவருடைய திருவாயில் இருந்து,

"அன்பத்தில்லார் உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளித்தற்று"

என்னும் அருமைக் குறள் முகிழ்க்கின்றது.

சிற்றூர் ஒன்றுக்குச் செல்கின்றோம். அங்கு ஊர் நடுவண் ஒரு மரம் நிற்கின்றது. அம்மரத்தில் கனிகள் நிறையக் காணப்படுகின்றன. பலரும் அதனைப் பறித்து உண்டு உண்டு அனுபவிக்கின்றார்கள். ஆம், பறவை இனங்களும்தான் கொத்தி உண்டு சுவைக்கின்றன, உபகாரியாம் ஒருவனிடம் செல்வம் சேர்ந்திருந்தால் எப்படி இருக்கும்? என்னும் வினாவை எழுப்பி விடை கூறுகின்றார்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான்கண் படின்"

என்று பாடுகிறார். எமது பயணத்தில் ஒரு சாலில் மூலிகைத் தோட்டம் ஒன்று தென்படுகின்றது. சில மரங்களின் இலைகள், சில மரங்களின் பட்டைகள், சில மரங்களின் வேர்கள் மட்டும் மருந்துக்குப் பயன் படுவதுண்டு. எனினும் மற்றும் ஒரு சில மரங்களின் அனைத்துப் பகுதிகளும் பயன்படுவதும் உண்டுதானே! அந்த மரத்தைக் காட்டி.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகையான் கண்படின்"

என்று செப்பி வைக்கிறார். தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றோம். எங்கிருந்தோ, கண்ணோட்டம் என்றால் என்ன எனும் வினா எழுகின்றது. தம்மோடு பழகியவரைக் கண்டபோது உண்டாகும் தாட்சணியம் - இரக்கம் என்று விடையும் வருகின்றது. கண்களைப் பெற்றிருந்தும் கண்ணோட்டம் இன்றி வாழ்பவர்களும் நம்மிடையே உண்டுதானே என, ஒருவர் பேசுவது காதில் விழுகின்றது. பெருநாவலர் உடனே, அவர்கள் நடமாடும் மனிதர்கள்தான் ஆயினும் மரத்துக்குத்தான் ஒப்புக்கூற வேண்டும் என்று மொழிகின்றார். திருக்குறள் பிறக்கின்றது.

## தேன்கூடு

"மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்து கண்ணோடா தவர்"

என்பது அது.

வழியின் அருகே தொழிலாளர் மிக்க முயற்சி உடன் வேலை செய்வதைக் காண்கின்றோம். ஒருசிலர் ஊக்கம் அற்றவர்களாகவும் இருந்தனர். எப்படியென்று பொய்யா மொழியாரை வினவுபவர் போன்று சிலர் நின்றார்கள். உடனே,

"உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம் மக்களாதலே வேறு"

என்னும் குறட்பா எமது காதில் ஒலிக்கின்றது.

தொடர்ந்து வள்ளுவர் பெருமான் எங்கள் முன்னே, மிக்கபுத்திக் கூர்மை உள்ள ஒருவரைக் காட்டுகிறார்: அவரிடம் பிறர் இயல்பு அறிந்து நடக்கும் பெருங்குணம் இல்லாவிடின் அவரும் கூட மரம்தான் என்னும் பொருளில்,

"அரம் போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்"

என்னும் குறட்பாவைக் கூறியருளினார்.

எல்லோரும் தரிப்பிடத்துக்கு வந்து விட்டோம். ஒட்டி உலர்ந்த தேகம்: வறியவன் ஒருவன், செல்வச் சீமானிடம் ஏதோ கேட்கின்றான். அவன் 'இல்லை இல்லை' என்று இயம்புகின்றான். ஏழை திரும்புகிறான். வள்ளுவர் பெருமான் அதனைக் காண்கின்றார். இச்செல்வன் 'மரந்தான்: மரத்திலும் நச்சுமரம் ஆவான்' என்னும் பொருளமைய,

"நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத்தற்று"

என்னும் குறள் அமுதை எமது செவியில் வார்க்கின்றார்.

நாமெல்லாம், அன்பை வளர்த்து, பிறர்க்குப் பயன் பட்டுக் கண்ணோட்டம் பேணி, ஊக்கத்தை ஓம்பி, பிறர் இயல்பறிந்து ஒழுகி, எல்லோராலும் விரும்பப்பட்டு, இன்பமாக வாழ்வோமாக!

(தொடரும்)

-சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவோடு தொடராத உணர்வுகள்

ஜானகி தலையைத் துவட்டிய படியே முற்றத்து வெய்யிலில் சில நிமிடம் நின்றாள். பிள்ளைகள் இருவரும் பாடசாலைக்கும் கணவன் அலுவலகத்துக்கும் சென்றுவிட்டிருந்தார்கள். வெயிலையே சற்றுநேரம் பார்த்தவாறு நின்றிருந்தவளுக்கு தனிமை உறைத்தது. முன்பெல்லாம் இப்படியில்லை.

"ஜானகி வெயிலுக்கை கனநேரம் நிக்காதே" என்று அம்மா சத்தம் போடுவாள்.

"அக்கா உடுப்பைத்தோய்ச்சு விட்டு விடு. நான் முழுகிவிட்டு ரியூசனுக்கு போகவேணும்" தம்பி தன் பங்குக்கு சத்தம் போடுவான். இப்போது சாதாரணதரமும் பத்தாம் ஆண்டுமாக கல்வி கற்கும் அவளது பெண்கள் இருவரும் "மாமா மாமா" என்று அவனையே சுற்றி வருவார்கள். ஹரிகரனைப் பற்றிய நினைவு வந்ததும் அவளது வழிகள் நீரால் நிரம்பின.

"அக்கா ஹரி நிற்கிறானே? நாளைக்கு எங்கட ஸ்கூல் சோஷல் இருக்கு இவனில்லாமல் என்ன செய்யிறது?" என்று ஒவ்வொரு தேவையோடும் அந்த வீட்டைத்தேடிவரும் அவனது நண்பர்கள் எத்தனைபேர்!

'நேற்றுக்கூட இரண்டு பெடியங்கள் வந்து விசாரித்துவிட்டு போறாங்கள்' ஜானகியின் இதயம் பெருமூச்சால் நிரம்பியது. உள்ளே சென்று அவளது தாயிடமிருந்து அன்று வந்தடைந்த கடிதத்தினை மீண்டும் ஒரு தடவை வாசித்தாள்.

**- நிலாப்பெண் -**

"மகளே! நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறன் அவன் உன்னைத்தேடி வந்தால் எப்படியாவது அவனை விரைவில் இங்கே அனுப்பிவிடு. அவன் யாழ்ப்பாணம் போறேன் என்று சொன்னது முதல் எனக்கு நிம்மதியில்லை. நான் அவனுக்காகத்தானே உங்களையெல்லாம் விட்டுவிட்டு இங்கே இருக்கிறேன்" அந்தக் கடிதத்தின் சோகம் அவளையும் தாக்கியது.

ஹரி அவளுக்கு தம்பியாக மட்டும் இருக்கவில்லை. அவள் அவனை தனது மூத்தமகன்போலத்தான் வளர்த்தாள். நான்கு பெண்களுக்குப் பிறகு பிறந்த கடைக்குட்டி என்பதால் இயல்பாகவே அவனுக்கு செல்லம் அதிகம்.

அவளுக்கு அடுத்த சகோதரிகள் அனைவரும் திருமணமாகி சென்றுவிட அவள்தான் அவனது சகல தேவைகளையும் நிறைவேற்றி வைத்தாள். ஜானகியின் கணவன் மோகனுக்குக் கூட ஹரியின்மேல் அளவற்ற அன்பிருந்தது. ஹரி உயர்தர வகுப்பில் கல்விகற்றுக்கொண்டிருந்த வேளையில்தான் இராணுவநடவடிக்கையும் இடம்பெயர்வும் ஏற்பட்டு அவர்கள் அனைவரும் கிளிநொச்சியில் இரண்டு வருடங்கள் வசித்தார்கள்.

இரண்டு வருடங்களில் அவர்களைத் தாக்கியது ஒரே ஒரு மாற்றம் தான். ஹரி சொல்லாமலே சென்றுவிடவில்லை. வீட்டில் எல்லோரிடமும் சொல்லி விட்டுத்தான் சென்றான். அவனது வெற்றிடம் அவர்கள் வீட்டில் பெரிய சோகமாகத்தான் அமைந்தது. அதுவும் அம்மா நன்றாகவே தளர்ந்துவிட்டாள். ஆனாலும் ஹரி மாதத்திற்கு ஒருமுறையாவது வீட்டிற்கு வருவான். அதனால்தான் ஜானகி குடும்பத்தோடு யாழ்ப்பாணம் வந்தபோதும் அம்மா வராமலேயே தங்கி விட்டாள்.

ஜானகி, தாயின் கடிதம் வந்த விவரத்தை மோகனிடம் கூறியபோது அவனது முகத்தில் ஆவல் ஒருகணம் தோன்றினாலும் அடுத்தகணமே அவன் முகம் சுருங்கிவிட்டது. அதன் காரணத்தை அவள் அறிவாள். சில நாட்களாக அவர்களது கிராமத்தில் சீருடையினரின் நடமாட்டம் அதிகமாகவே இருந்து வருகின்றது. இரவிரவாக நாய்களின் குரைப்பும், அயலவர்கள் பலர் கூறும் கதைகளும் அவளுக்குள் பயத்தை விளைவித்தன. இயல்பாகவே அவனைப் பார்க்கவேண்டும் என்கிற பாசம் பொங்கியெழுந்தாலும் அவள் அவன் வந்துவிடக்கூடாதே என்றுதான் இறைவனைப் பிரார்த்திக்கவேண்டி இருந்தது. மோகனின் எச்சரிக்கைப்படி அவள் தனது பெண்களிடம் கூட இந்த விடயத்தை கூறவில்லை.

மோகனுக்கும் ஜானகிக்கும் கனக்கின்ற நினைவுகளோடு சில நாள்கள் கடந்து சென்றன. ஒரு நாள் மோகன் இரவு பி.பி.சி. செய்திகளைக் கேட்ட வண்ணமே ஈஸிச்சேரில் சாய்ந்திருந்தான். ஜானகி அடுக்களைக்குள் இரவு சமையலில் ஈடுபட்டிருந்தாள். ஒழுங்கையில் நாய்களின் குரைப்பு மெதுவாகக் கேட்டது. ஜானகி செவிகளைத் தீட்டியவாறு நாய்களின் குரைப்பு எத்திசையில் கேட்கின்றது என்பதனை கவனித்தாள். அவளது பிரமையோ தெரியவில்லை. அவர்களது கேற்றடியில் ஆளரவம் கேட்டது. கேற் மெதுவாகத் திறக்கப்படும் "கிரீச்" என்கின்ற சத்தம் கேட்டதும் அவள் பதற்றத்துடன் வெளியே வந்தாள். மோகன் திகைப்புடன் அவளைப் பார்த்து ஏதோ கூற வாயெடுத்தான். ஆனால் படியேறிவந்துகொண்டிருந்த ஹரியைக் கண்டதும் இருவரும் சிலையாக நின்றுவிட்டனர். ஹரி கொஞ்சம் கறுத்துவிட்டாலும் அப்படியேதான் இருந்தான். அவனது முகத்தில் உறுதியும் தீர்க்கமும் சிம்மாசனமிட்டிருந்தன.

"அக்கா பயங்கர 'ஷொக்' கொடுத்திட்டன் போல" அவன் சிரித்தவாறே உள்ளே வந்தான். ஜானகி அவனை விழிகளால் ஆசைதீரப் பருகிக்கொண்டாள்.

ஜானகியும் ஹரியும் கதைத்துக் கொண்டிருந்தபோது மோகன் மூவருக்கும் உணவைத் தயாரித்து எடுத்து வந்தான்.

"உன்ரை கையால அருமையாய் சாப்பிட்டு எத்தினை நாளாச்சுது?" ஹரி விழிகள் பளபளக்கக் கூறினான். அவன் அவசர அவசரமாக உண்பதை இருவரும் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவள் ஹரி உண்டு முடித்ததும் தாயின் கடிதத்தை எடுத்துவந்து காட்டினாள். அவன் வாசித்து விட்டு மெல்லச் சிரித்தான். "அக்கா பயப்பிடாதை. வந்த அலுவல் முடிஞ்சுது. நாளைக்குப் போயிடுவன். இங்க வர வேணும் என்று கனநாளாய் நினைச்சிருந்தன். இண்டைக்குத்தான் வர முடிஞ்சுது"

அவன் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்வதை அவளால் உணரமுடிந்தது. அவனது தலையை கோதிவிடவேண்டும், அவனது கன்னத்தை வருடவேண்டும் என்று உத்வேகமாக எழுந்த உணர்வுகளை அரும்பாடுபட்டு அடக்கிக்கொண்டாள். மோகன் அவனைப் பிரமிப்பாய் பார்த்துக்கொண்டிருந்தான். தீயை விழுங்கிவிட்டும் நீராய் புன்னகைக்க எப்படி இவனால் முடிகிறது? இந்த நாலு வருடத்திற்குள் எவ்வளவு மாற்றம் அவனுள்? இரவுமுழுவதும் அவனை ஆசை



தீரப்பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவன் உடனே சென்றுவிடத்தான் அவசரப்பட்டான்.

நித்திரையில் இருந்த பிள்ளைகள் இருவரையும் அன்புடனும் கன்னத்தில் தடவிக்கொடுத்துவிட்டு வந்த சுவடே தெரியாமல் சென்றுவிட்டான். அவன் விட்டுச் சென்றதுபோல் மௌனம் மட்டுமே அவ்வீட்டில் நெடுநேரமாய் ஆட்சி செய்தது.

இரண்டு நாட்கள் பாரமாகக் கழிந்து சென்றபிறகுதான் ஜானகியால் நிம்மதியாக காரியங்களில் ஈடுபட முடிந்தது. அன்று பின்னேரம் அவள் அம்மாவுக்குக் கடிதம் ஒன்று கூட எழுதினாள் - ஹரி பத்திரமாகத் திரும்பி வருவானென்றும் அவன் வீட்டிற்கு வந்ததைப் பற்றியும் விவரமாக எழுதும்போதே அவளது சிந்தனைகள் சிதறின. பத்து வயதில் முகமெல்லாம் கிளுகிளுக்க - அத்தையின் மகன் மோகன் கொடுத்துவிட்ட சொக்லேட் ஒருகையிலும் அவளுக்கான கடிதம் மறுகையிலுமாக வந்து அவள் முன் நின்று ஹரி வார்த்தைகளை கோர்வையாகச் சொல்ல முடியாமல் திக்கியவாறுநின்ற நிலை அவள் மனக்கண்ணில் நிழலாடியது. அவனது பிரியமான 'சீஸர்' இறந்துவிட்ட வேளையில் இரண்டு நாட்கள் உணவு எதுவுமே உட்கொள்ளாமல் அவன் மௌனமாகிவிட்டதும், க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் அதிஉயர் சித்தி பெற்றும் கூட,பரீட்சை முடிவுகள் வந்த அன்று சிவந்த விழிகளோடு வந்து, பொய்யாக அவர்களைக் கலங்க வைத்ததும் வரிசையாக அவள் நினைவில் வந்து வருத்தின.

இன்று தங்களுக்கே ஆதரவு சொல்லக்கூடியவனாகவும் மனதாலே எட்டமுடியாத தூரத்தில் தனித்து நிற்பவனாகவும்தான் அவனைப் பார்க்கவும் நினைக்கவும் முடிகிறது.

"கடவுளே அவன் எங்கையெண்டாலும் இருக்கட்டும். ஆனால் நல்ல ஆயுளோடு இருந்தால் போதும்" வேதனையின் வெம்மை தாங்கமாட்டாது அவள் தன்னிச்சையாக முணுமுணுத்துக் கொண்டாள்.

திடீரென்று முற்றத்தினுள் வந்து நின்ற மோட்டார் பைக்கின் சத்தம் கேட்டதும் அவள் திடுக்கிட்டுப் பரபரப்பாக எழுந்து வெளியே வந்தாள். வழக்கமற்றவேளையில் வீட்டிற்கு வந்துவிட்ட கணவனைக் கண்டதும் அவளது முகத்தில் வியப்பு தோன்றியது. ஆனால் ஏன் என்று கேட்பதற்குக் கூட அவளது நாக்கு புரளவில்லை. ஏதாவது அசம்பவமாகக் கேட்கவேண்டி ஏற்படுமோ என்கின்ற அச்சத்தில் அவள் பேசாமலேயேஅவனைப் பார்த்தபடிநின்றாள்.

"ஜானகிநேற்று இரவுஇரண்டுபேரை அவங்கள் சுட்டவங்களாம். அதுதான் நியூஸில் மத்தியானம் கேட்கலாமெண்டு..." தடுமாறியபடியே கூறிக் கொண்டுபோன மோகன் இடையிலேயே எதுவும் பேசாமல் நின்று விட்டான்.

அவனது முரலல்பாடான பேச்சை முதலில் ஜானகி கவனிக்கவில்லை. "சீச்சீ அவன் முந்தநாளே" என்று உத்வேகத்துடன் மறுத்துப் பேசிய ஜானகியின் விழிகள் திடீரென அச்சத்தால் விரிந்தன. முகமும் கண்ணும் கலங்க அவள் பேச்சை நிறுத்திக்கொண்டாள்.

"ஐயோ" தீனமான ஒலியொன்று அவள் நெஞ்சிலிருந்து கேவலாய் வெளிப்பட்டது. சுவரோரமாய்ச் சரிந்து விழப்போனவளை மோகன் கைத்தாங்கலாகப் பற்றிக்கொண்டான்.

"ஜானகி அழுதுகொண்டிருக்க நேரமில்லை எதுக்கும் நாங்கள் போய் ஹொஸ்பிற்றலில் பார்த்துவிடுவோம். தேவையில்லாமல் ஏன் கவலைப்பட வேணும்?" அவள் தோளைத் தட்டியபடி மோகன் மேலும் சொல்லிக் கொண்டு போனான்.

"நான் வரேல்லை. அவனை இரண்டு நாள் வீட்டில தங்கச் சொல்லவும், அவன் எங்களுக்காக, எங்கட நன்மைக்காக வேண்டாமெண்டு சொன்னான். அது அவனாயிருக்காது. அவனாயிருக்கக்கூடாது" ஜானகியின்முடிய விழி இமைகளின் வழியே கண்ணீர் கரகரவென்று வழிந்தது.

மோகன் ஜானகியை பலவாறு சமாதானப்படுத்தி வலுக்கட்டாயப் படுத்தி, கெஞ்சுதலாகக்கேட்டு ஒருவாறு அவளைச் சம்மதிக்க வைத்தான். ஆனால் வைத்தியசாலை வாசலில் சென்று இறங்கியதுமே அவனது இதயத்தின் அதிர்வுகள் அவனுக்கே பயத்தை அளித்தன. ஜானகி பேசாமடந்தையாகச் சென்றாள். யார் யாரையோ விசாரித்தார்கள். யார் யாரையோ அழைத்துச்சென்றார்கள். அவனாக இருக்கக்கூடாது என்கின்ற ஜெபத்தைத் தவிர இவர்கள் இருவரும் வேறு சிந்தனைகளே இன்றிக் கலங்கியவாறு நடந்தார்கள்.

இறுதியாக அந்த அறையின் வாசலில் நின்றபோதும் கூட ஜானகி ஒருமுறை கண்ணை மூடிப் பிரார்த்தித்தாள். அவளது இதயம் 'திடும் திடும்' என அதிரத்தொடங்கியது. அவர்களை உள்ளே அழைத்துச்சென்றார்கள். ஓர் உருவத்தின் மேல் போர்த்தியிருந்த வெள்ளைத்துணி விலக்கப்பட்டதும் ஜானகி கண்ணில் வழிந்த நீரைத் துடைத்தபடி பார்த்தாள். 'இது ஹரியில்லை' அவள் மனது மறுத்துச் சொல்லியது. மறு உருவத்தின் அருகில் சென்றார்கள். நெஞ்சைப் பிடித்துக்கொண்டே சாயப் போனவளை மோகன் தாங்கிக்கொண்டான். அந்தப் போர்வையும் விலக்கப்பட்டது. கருமையான அழகான இளைஞன். ஆனால் ஹரியில்லை. ஒரு நொடியில் உணர்ந்து கொண்டதால் அவள் திரும்ப முனைந்தாள். ஆனால் மோகனின் கரங்கள் மேலும் இறுக்கமாக அவளைப்பற்றின. ஏன் என்ற கேள்வியுடன் அவன் முகத்தைப் பார்த்தவள் அதிர்ந்தாள். அவன் முகம் பேயறைந்தது போல் இருந்தது.

அப்போதுதான் திரும்பி மறுபடியும் பார்த்தவள் அதிர்ந்தாள். அந்தத் தீர்க்கமான முகம், நெற்றி மத்தியில் ஒன்று சேரும் புருவங்கள், ஹரி.... மீளமுடியாத துன்பம் அலையலையாய் அவளைத்தாக்கியது.

"அவனைப் பாருங்கோ 'அக்கா நாளைக்குப் போறன்' எண்டு சொன்னானே. இப்படி போய்விட்டானே?" அவளது கதறல் தீனமாய் ஒலித்தது. நடுங்கும் விரல்களால் அந்த முகத்தை வருடினாள்.

"நான் அம்மாக்கு என்னடா சொல்லப்போறன்?" வேதனையின் உச்சத்தில் ஜானகி அரற்றியவாறே கலங்கி அழுதாள். சூழ்நிலையை உணர்த்த வேண்டிய மோகனோ செயலற்று கலங்கியபடி நின்றான். அவர்களோடு வந்த பணியாள் ஹரியின் உடலை மூடினான். மோகன் ஜானகியின் இரு கைகளையும் பிடித்தவாறு அவளை பலவந்தமாக வெளியே அழைத்து வந்தான்.

வாய்விட்டு அழக்கூட முடியாமல், வேதனையை வெளிக்காட்டவும் முடியாமல் அவர்கள் வெளியேவந்தனர். அவர்கள் வார்த்தைகளில் வழி சமைத்து, விழி நீரால் வேள்வி செய்து அஞ்சலி செய்யாமலேயே தனிமையில் ஒரு மனிதம் மரணித்து விட்டது, மறைக்கப்பட்டு விட்டது. ஓர் அன்புத் தாய் வன்னியின் எங்கோ ஒரு மூலையில் வழிமேல் விழிபாய ஏங்கியிருக்கின்றாள். அன்றுதான் கிடைத்துவிட்ட மகளின் கடிதம் அவள் வயோதிபக் கரங்களில் படபடத்துக்கொண்டே இருக்கின்றது.

*

# சில வட்டங்களும்... சில சதுரங்களும்...

தழும்புகள்; சிவந்த கால்கள், பிஞ்சுக் கைகள் எங்கும் கருஞ்சிவப்புக் கோடுகளாய்..... தழும்புகள். பூவாய்ச் சிரிக்கிற மகனின் முகம் அழுது அழுது வீங்கிப்போய்க் கிடக்கிறது. பார்க்கும் பொழுதிலே இவள் வயிற்றுக்குள் யாரோ அக்கினித் துண்டுகளை அள்ளிக்கொட்டினார்கள். தன்னையறியாது கண்ணோரம் துளிர்த்த நீர்த்துளிகளை துடைத்துக் கொண்டாள் இந்து. விம்மல் வெடித்தது. கஷ்டப்பட்டு அடக்கினாள். மகன் படித்துக்கொண்டிருக்கிறான். ஓரளவு சமாதானமாகி இருக்கிறான் போலிருந்தது. இவள் அழ.... அவன் மீண்டும் தொடர்ந்து அழக் கூடும்.

'அதுசரி! இன்னும் அழுவதற்குரிய பலம் என் குழந்தைக்குள் இருக்கிறதா?' தாய்மையின் கேள்வி கண்ணீரோடு மனதில் பொங்கிற்று. மௌனமாய் இருந்தாள். மனதினுள் புருஷன்... ஒரு கணத்தில் ராட்சசனாகவும், மறு கணத்தில் மனிதனாகவும் மாறுவதற்கு இவருக்கு எப்படி முடிகிறது? குழம்பினாள். வந்தவுடன் பிள்ளைக்குத் தண்டனை கொடுத்து அதற்குப் பிராயச்சித்தம்போல் சாப்பிடாமலே தூங்கிப்போன கணவன். மேசை மீது அமர்ந்து படிக்கிற அல்லது படிப்பதாகப் பாவனை பண்ணுகிற மகன். இவளுக்குக் களைப்பாக இருந்தது. உடலும் மனமும் கூடச் சோர்ந்துபோனதாய்த் தோன்றிற்று. கதிரையில் அமர்ந்து கண் மூடிக்கொண்டு நினைவுப் பாதையில் நடக்கத் தொடங்கினாள்.

* * *

இவன் வயற்றில் ஜனித்த அந்தப் பொழுது.... செம்மையேறிய முகத்துடன் மெதுவாய்ச் சேதி சொன்னபோது உலகத்து மகிழ்வெல்லாம் தனதாக்கிக் குதூகலித்த கணவனின் முகம் நினைவிலாடிற்று. அன்பான கணவன், ஆயிரந் தடைவைகள் இறையவனுக்கு நன்றிசொல்லி இருக்கிறாள். இன்னமும் இவளுள் பசுமையாய் எழும்புகிற.... பூவாய்த் தாங்கிய அவனது பண்புகள்.

"குட்டி சுசீனா? குட்டி இந்துவா? உள்ளுக்கு யாரது?" தாய்த்தன்மையான இவளைச் சுட்டிக் கேட்டான்.

"இந்துதான் போல...."

"இல்லை சுசீன்தான்..."

இவள் தொடங்கவே அவன் மறுத்தான். "இல்லை இந்து...", "இல்லை சுசீன்...." சிறுபிள்ளைகளின் வீண்பிடிவாதமாய்த் தொடர்ந்த வாக்குவாதத்தில் திடீரெனக் கட்சி மாறினாள்.

"சரி சுசீன்தான்..... குட்டி சுசீன் தான்."

அவனுக்கு முகமெல்லாம் சந்தோஷம் அப்பிப்போயிற்று. அவளுக்குத் தெரியும். நன்றாகவே தெரியும் விளையாட்டுக்குக் கூட சுசீனுக்குத் தோல்விகள் பிடிக்காதென்று. இன்று மகன் வாங்கிய அத்தனை அடிக்கும் காரணம் உண்மையில் சுசீன் தோற்றுப் போனதுதான். ஐந்தாமாண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் பரீட்சை எழுதுவது பிள்ளையானாலும் தோற்பதும் வெல்லுவதும் பெற்றோர்களும் தனியார்கல்வி நிறுவனங்களுமாகத்தானே இருக்கின்றன. ஏன்? ஏன்? இவரால் புரிந்துகொள்ள முடியவில்லை? பக்கத்து வீட்டுப் பையன் - இளையவன் - 'பாஸ்' பண்ணியிருக்கத் தன் மகன் தோற்றுவிட்டதற்கான பொறாமையுணர்ச்சியா? அவன்போலத் தன்மகன் இல்லையே என்ற இயலாமைக் கோபமா? அல்லது அவர் வளர்க்கப்பட்ட முறையா? இவளுள் கேள்விகள் பெருகின.

துர்ரதிஷ்டவசமாக தனிப்பிள்ளையாகப் பிறந்தவன்; தாய்தந்தையரின் கரங்களுள் மிகக் கண்டிப்பாக வளர்க்கப்பட்டவன்; படிக்கும் காலம் முழுதும் முதலாந்தரக் கெட்டிக்காரர்களின் வரிசைக்குள் தன்பெயரைத் தக்க



வைத்துக்கொண்டவன். ஆனாலும் ஏன் வாழ்வைச் சிந்திக்கமுடியாதிருக்கிறது இவருக்கு? வாழ்வின் வரவுகள் குழந்தையாக, பெற்றோராக, சிநேகிதர்களாக ... உரையறுக்கப்பட்டுத்தானே இருக்கின்றன? இதில் போட்டிகளோடும் ஒன்றை மற்றொன்று போல் ஆக்கிவிடும் முயற்சிக்குள் புதைந்து, அதுவே வாழ்வாகி ஓடிக்கொண்டிருக்கிற மனிதர்களுள் ஒருவராக ஏன் இவரும் ஆகிப்போனார்?

இன்றைய நிகழ்வின் காரணம் அவளுள் மீண்டும் எழுந்தது.

**சாரங்கா**
(சங்கத்தானை)

புலமைப்பரிசில் முடிவுகள் வெளியாகி இருந்தன. பெரும் எத்தனிப்புக்கள்; இதோ வாழ்வையே பாய்ந்து கடந்துவிடுகிற பரீட்சை என்பதாகப் பெற்றோரதும் ஆசிரியரதும் ஏன் பிள்ளைகளினதும் கடும் பிரயத்தனங்கள்; சகலதன் வாயிலாகவும் சின்ன மகன் புகுந்து வெளிப்பட்டிருக்கிறான். காலை எழுந்ததும் தனிப்பட்ட வகுப்பு; பிறகு அவசரமாய்ப் பாடசாலை; பிறகு பின்னேரம் பொதுவகுப்பு; களைத்துச் சோர்ந்து கசங்கியபூவாய் வருகிற பிள்ளை இரவு ஏழுமணி தொடக்கம் தந்தையிடம் கற்றாக வேண்டும். மீண்டும் காலை அதே சக்கரம் சுழலத் தொடங்கும். எல்லாம் போயிற்று; எல்லாமே போயிற்று; மகன் தேர்வில் சித்தியடையவில்லை. இவனுள் சடுதியாய் ஒரு நெருப்புக் கங்கு நெஞ்சேறிற்று. தோற்றதைத் தாங்க முடியாதிருந்தது. பொறுமையாக வீடுவந்து கொண்டிருந்தவனை வழியில் மடக்கினார் செல்லமக்கா.

"அப்ப சுசீ! என்ன மோன் பாஸ் பண்ணீட்டான்தானே?" ஒற்றைக் கேள்வி. இவனை ஆயிரம்பேர் ஒரே கணத்தில் சாட்டையால் அடித்தார்கள்.

"இல்லை...அவன்...ஏதோ... கிடைக்கேல்லை"

இது முதலே செல்லம்மாவுக்குத் தெரியும். ஆனாலும் அவள் தேள் மனிதர்களின் ரகம். தோல்வியை - கசப்பை - விசாரிக்க வேண்டும். வார்த்தைக் கொடுக்குகளை விரித்தாகவேண்டும். சோரும் முகங்களை மௌனமாய் ரசிக்கவேண்டும். ஆக மீண்டும் கேட்டாள்.

"மெய்யாய்த்தான் சொல்லுறியே தம்பி! நான் இதை நம்பச் சொல்லிறியே?" அவன் அமைதியாய் நின்றான். முதலில் நெஞ்சேறியிருந்த நெருப்புக் கங்கு மெதுவாய்ப் பற்றத்தொடங்கிற்று. உடல் முழுதும் அதே நெருப்புச் சினமாய்ப் பரவிற்று.

"அவள் தேவியின்ரை பொடியன் - இளையவன்தானாமே மாவட்டத்தில் முதலாவது. மனுஷனும் இல்லாமல் அவள் ஆளாக்கிப்போட்டாள். நீ செல்லங் கொடுத்து சீரழிச்சுப் போட்டாய். இனியாலும் கொஞ்சம் கண்டிச்சு வளவன்" புத்தி சொல்லிச் செல்லம்மாக்கா விலகினாள். புத்தி அவன் தலைக்குள் ஏறிற்று. புத்தி சொன்னவரின் நிலை இவனுக்கு மறந்து போயிற்று. தன் பிள்ளைகள் தலைக்குமேல் வளர்ந்தும் கட்டாக்காலிகளாய்த் திரிவது செல்லம்மாக்காவிற்கும் நிச்சயமாமாய் மறந்துதானிருக்கவேண்டும். மெல்லத் தன் கொடுக்கு விரித்துக்கொட்டி மீண்டும் சுருக்கி நகர்கிற செல்லம்மாக்காவை இவனுக்குப் புரிய முடியவில்லை.

'இளையவன் போல என்மகன் ஏனில்லை?' என்பது மட்டும் இவனுள் தொக்கிக் கிடந்தது. விளைவு வந்த

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாஜ்பாய்க்கு நீ சொல்லு!




வானில் தவழ்ந்து வரும்
    வைகை நதிப் பூங்காற்றே
வாடி வதங்கி நிற்கும்
    வன்னி மக்கள் படுந்துயரை
பாரதத்தின் மூத்த மகன்
    பண்பு மிகு வாஜ்பாய்க்கு நீ சொல்லு!
நல்ல தொரு அரசமைத்த
    நாயகனாம் வாஜ்பாய்க்கு
நாங்கள் படும் துயரை
    நன்றாக நீ சொல்லு!
ஈழ மக்கள் படும் துயரை
    எடுத் தோது அவர் காதில்
வங்கக் கடலைக் கேள்
    வகை வகையாய் எடுத்துரைக்கும்
செங்குருதி சிந்திச் செத்தவர்கள்
    எத்தனை பேர்
மாலையிடா மங்கையராய் மரக்கலத்தில்
    மாண்டவர்கள் எத்தனை பேர்
மாநகராம் சென்னையிலே
    மலர்ந்த தமிழ்நாடே
வன்னித் தமிழனுக்கு வாழ்வளிக்க மாட்டாயோ?
    மாட மாளிகையில் உறங்கிய தமிழன்
மரத்தடியில் உறங்குகிறான்.
    பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்
சங்காரம் நிசம் என்ற தங்கத்தமிழகமே
    கூடை தலை மேலே எங்கள்
குடி வாழ்க்கை கானகத்தில்
    கானகத்தில் எங்களுக்கு
கை தருவார் ஒருவர் இல்லை
    சொல்லும் தர மன்றோ எம் சோகக் கதைகள்
–எல்லாம்
வைகை நதிப் பூங்காற்றே வாஜ்பாய்க்கு நீ சொல்லு!

- நெய்தல் நிலமகன் -

# உயிரில் உயிருக்கு வேண்டும் வரம்

அன்பு வழியில் வாழ்ந்திட வேண்டும்
அறிவு மொழியில் வளர்ந்திட வேண்டும்
அழகு எண்ணத்தில் பறந்திட வேண்டும்
அமைதி வெள்ளம் பாய்ந்திட வேண்டும்

ஆலை விழுதுகள் உறவுகள் வேண்டும்
ஆளுமை பழுதில்லா உள்ளங்கள் வேண்டும்
ஆசுகள் களைந்திட ஆண்டவன் வேண்டும்
ஆனந்தம் கிடைத்திட அருளது வேண்டும்

இன்ப வாழ்க்கை இனித்திட வேண்டும்
இனிய வார்த்தை இசைத்திட வேண்டும்
இதயத்தில் காதல் கனிந்திட வேண்டும்
இளமையில் கல்வி கற்றிட வேண்டும்

ஈகை செய்திடும் நினைவுகள் வேண்டும்
ஈழத்தின் இருள் நீங்கிட வேண்டும்
ஈசனைத் துதித்து எழுந்திட வேண்டும்
ஈசலின் வாழ்வை எண்ணிட வேண்டும்

உழைத்து என்றும் உயர்ந்திட வேண்டும்
உண்மை எதிலும் உரைத்திட வேண்டும்
உன்னில் உனக்கு நம்பிக்கை வேண்டும்
உரமான உதயனாய் உதயம் வேண்டும்

ஊனம் இல்லாத உடல்கள் வேண்டும்
ஊன்று கோலாக உதவி வேண்டும
ஊருடன் உன்னை ஊன்றிட வேண்டும்
ஊகித்து உண்மை உணர்ந்திட வேண்டும்

எழுவகை பிறப்பை நினைத்திட வேண்டும்
என்றும் சிறப்பை நிறைத்திட வேண்டும்
எளிமை வாழ்வில் நனைந்திட வேண்டும்
எல்லா மக்களும் நலன்பெற வேண்டும்

ஏடெடுத்து உலகை அறிந்திட வேண்டும்
ஏரெடுத்த உழவரை போற்றிட வேண்டும்
ஏழ்மை நிலைகள் அழிந்திட வேண்டும்
ஏற்றம் எவர்க்கும் அமைந்திட வேண்டும்

ஐயம் இல்லாத அறிவுகள் வேண்டும்
ஐந்து பாதகங்கள் அழிந்திட வேண்டும்
ஐம்புலன் உணர்வை அடக்கிட வேண்டும்
ஐசுவரியம் அனைவர்க்கும் அமைந்திட வேண்டும்

ஒற்றுமை உலகில் ஓங்கிட வேண்டும்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பிட வேண்டும்
ஒட்டிய துயரங்கள் வடிந்திட வேண்டும்
ஒன்றே இறைவன் வணங்கிட வேண்டும்

ஓலமிடும் உள்ளங்கள் ஒளிபெற வேண்டும்
ஓம் என்ற மந்திரத்தை ஒலித்திட வேண்டும்
ஓங்கிய யுத்தங்கள் ஓய்ந்திட வேண்டும்
ஓசோன் ஓட்டைகள் அடைத்திட வேண்டும்

மட்டுவிலூர் - மு.வே.அன்பழகன் -

# உலகம் ஒரு பைத்தியம்

முட்டாள்கள் முன்னிலையில்
    மூதறிஞர் பைத்தியம்
கல்லாதோர் சபைநடுவில்
    கற்றோர்கள் பைத்தியம்
படிக்காத மேதைகள்முன்
    பண்டிதர்கள் பைத்தியம்
கயவர்கள் பார்வையில்
    கனவான்கள் பைத்தியம்
ஊர்சுற்றும் வாலிபர்க்கு
    உழைப்பாளி பைத்தியம்
கஞ்சப் பயல்களின் முன்
    வள்ளல்கள் பைத்தியம்
குடிகாரர் பார்வையில்
    குடும்பஸ்தர் பைத்தியம்
வாலிபர்கள் முன்னிலையில்
    வயோதிபர்கள் பைத்தியம்
நாஸ்திகம் பேசுவோர் முன்
    பக்தர்கள் பைத்தியம்
வேட்பாளர் பார்வையில்
    வாக்காளர் பைத்தியம்
விலைமாதர் கண்களுக்கு
    பத்தினிகள் பைத்தியம்
கருவற்ற மலடுகள் முன்
    கர்ப்பிணிகள் பைத்தியம்
விமர்சகர்கள் பார்வையில்
    எழுத்தாளர் பைத்தியம்
நடிகர்கள் முன்னிலையில்
    ரசிகர்கள் பைத்தியம்
வட்டிக்கு விடுவோர் முன்
    கடன்காரர் பைத்தியம்
குறுக்குவழி செல்வோர்க்கு
    சட்டம் பெரும் பைத்தியம்
சண்டைப் பிரியர்கட்கு
    சமாதானம் பைத்தியம்
நெறியற்று வாழ்வோர் முன்
    நீதி ஒரு பைத்தியம்
பைத்தியங்கள் முன்னிலையில்
    வைத்தியர்கள் பைத்தியம்
கவிதைமுற்றப் பிரியர்கட்கு
    மௌனமொழி பைத்தியம்
உண்மையை வெறுப்போர்க்கு
    உதயன் ஒரு பைத்தியம்
வம்பளப்போர் பார்வையில்
    "வாசன்" ஒரு பைத்தியம்
உள்ளதைச் சொல்லுகின்றேன்
    உலகம் ஒரு பைத்தியம்

- வதிரி வாசன் -

# நாரை விடு தூது...!

தேனூறும் மலரி னங்கள்
    தென்றலிலே முகை யவிழ
மான் துள்ளும் சோலை மலர்
    மகரந்தம் வண் டெடுக்க
வான் பரப்பில் பறந் தேகி
    வாவியிலே தவமியற்றி
மீன்தேடி உணவெடுத்து
    மீளுகின்ற நாரை களே!

வற்றாக் குணம் நிறைந்த
    வளங் கொழிக்கும் விளைவேலி
உற்றவென் சிற் றூரில்
    ஒளிறிகளும் குடிசை யுள்ளே
பொற்கொடியாள் என் துணைவி
    பொலிவிழந்து கலங் கிடுவாள்
அற்புதச் செய்தி ஒன்று
    அவளிடத் துரைப் பீரோ?

பெண்மனதைத் தவிக்க விட்டு
    பொருளீட்டக் கடல் கடந்தேன்!
பொன்நினைவுப் பொறி அனலில்
    புழுவாய்த் துடிக்கு மவள்
எண்ண விருட் கொடுங்குகையில்
    இருந் தேங்கி மாயாமல்
வண்ணப் பொற் செய்தியொன்று
    விளம்பிடுவீ ரவள்மகிழ!

பொன்னுருக்கி வார்த் தெடுத்த
    பொற்சிலையாம் மைந் தனுக்கும்
கன்னலின்ப மழலை யினைப்
    பின்னுகின்ற தேன் மொழிக்கும்
தன்னலத்தில் நாட்ட மின்றித்
    தினம் வருந்தி நானுழைத்து
கண்ணியமாய் பணந் தேடி
    நான் வருவேன் நத்தார் பண்டிகைக்கு!

பொங்கு மெழில் புத்தாண்டாம்
    பேரழகி ஜனவரி யாள்
எங்கெங்கும் மலர் மலர
    ரீங்காரம் வண் டிசைக்க
மங்களப் பொற் புத்தாண்டில்
    [illegible]
[illegible]
    தூதுரைப் பீரவள் மிகிழ!

-விதுஷனி தவதாஸ் -

# இயேசுவே பிறக்கவேண்டாம்

பல்லாண்டு காலமாகப் பலவித வேதனைகள்
நம்வாழ்வு கண்டுவரும் நிலையை நீ அறிந்திடாயோ
இவ்வாண்டு தீருமென இருந்தோம் நாம் இன்றுமில்லை
எவ்வாண்டு தீருமிது யேசுவே திடமாய்க் கூறு!

சோதனை சோதனையாய் நம்தலை சுமக்கின்றது
வேதனை முட்கள்அவை நம்முடல் துளைக்கின்றன
நாமிதை ஆண்டுபல சகிக்காமல் சகிக்கிறோமே
யாரிதை உணர்வரிங்கு யேசுவே உனைத்தவிர!

கரத்திலே விலங்குஇல்லைக் கட்டுண்டு கிடக்கிறோம் நாம்
உடம்பிலே தெம்புஇல்லை உயிரூசல் ஆடுகிறோம்
பண்ணிலே இனிமையில்லைப் பாடத்தான் செய்கிறோம் நம்
கண்ணிலே இன்பமில்லை காட்சிகள் காணுகிறோம்!

நம்கூண்டு வாழ்க்கைதனை நீக்காது நீவிடுத்தால்
இவ்வாண்டு எங்களுக்காய் இயேசுவே பிறக்கவேண்டாம்
நல்லாண்டு அடுத்தஆண்டு நலமான புத்தாயிரம்
அவ்வாண்டு பிறப்பாயெனில் நம்குறை தீர்க்கவேண்டும்!

நம்குறை தீர்க்காயெனில் - நம்நலம் வேண்டாயெனில்
இத்தரை உன்பிறப்பு இல்லாது இருந்திடட்டும்
கல்லறை கல்லறையாய் எங்குமே பெருகிடட்டும்
கல்லறை எமையணைத்துக் கட்டாயச் சாதரட்டும்!

எத்தனை பக்தியோடு ஏத்திநாம் பாடுகிறோம்
உந்தனை நீயறிவாய் உறுவினை போகுமென்று
சிந்தனை செய்துஉந்தன் சிந்தையில் எமைநிறுத்தி
நல்வினை நீபுரிந்து நம்குறை களைந்திடையா!

உந்தனால் முடியுமென்று உறுதியாய் நாமிருந்தோம்
உந்தனாற் கூடஎமக் குதவிட முடியவில்லை
ஆண்டாண்டு எங்களுக்காய் அவனியிற் பிறப்பவனே
இவ்வாண்டு விடிவெமக்கு இல்லையேற் பிறந்திடாதே!

இணங்கிட வேண்டுமெங்கள் விருப்புக்கு இல்லையென்றால்
பிறந்திட வேண்டாமுந்தன் பிறப்புக்கு அர்த்தமில்லை
வணங்கிட மாட்டோமுனை யேசுநீ அறிவாய் அதால்
சுணங்கிட வேண்டாமெங்கள் குறைதீர்க்கிற் பிறந்திடுவாய்!

- கலாபூஷணம் -
-நவாலியூர் சி.என்.செல்லத்துரை-

# பூக்கும் புதிய நூற்றாண்டே!

அமைதியான நதியாய் வருவாய்
அனலிலாத புயலாய் வருவாய்
குமுதமான மலராய் வருவாய்
கூவும் குயிலின் குரலாய் வருவாய்
    வருவாய் வருவாய் – புது
    வசந்தம் தருவாய்!

மேனி தழுவும் தென்றல் காற்றாய்
மேவிப்போகும் மேகக் குழுவாய்
நாணிநிற்கும் நங்கை முகமாய்
நயனமூட்டும் மழையின் புனலாய்
    வருவாய் வருவாய் – நீயும்
    தருவாய் திருவே!

மயிலின் தோகை அழகாய் வருவாய்
மானின் துள்ளல் எழிலாய் வருவாய்
கயலின் கண்ணின் விழியாய் வருவாய்
கம்பன் சொன்ன கதையாய் வருவாய்
    வருவாய் வருவாய் – புது
    வசந்தம் தருவாய்!

பூவினுள்ளே வண்டின் இசையாய்
பூவைபாடும் அழகின் இசையாய்
காவிலாடும் பூவின் மகிழ்வாய்
காவியத்தின் மகளாய் வருவாய்
    வருவாய் வருவாய் – நீயும்
    தருவாய் திருவே!

பச்சைமேனி தழுவும் தாயாய்
பரிசமுற்றுச் சிரிக்கும் சேயாய்
இச்செகத்தின் எழிலாய் உருவாய்
அச்சமின்றி நீயும் வருவாய்
    வருவாய் வருவாய் – புது
    வசந்தம் தருவாய்!

யுத்தமேகம் வெளுக்க வருவாய்
ஜோதியாக நிலைக்க வருவாய்
சத்தியத்தின் பதியாய் வருவாய்
சாந்திமிக்க மதியாய் வருவாய்
    வருவாய் வருவாய்–நீயும்
    தருவாய் திருவே!

- க.தேவா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போன அடையாளங்கள்

என்றுமே இல்லாத நீண்ட கியூ! ஒருபக்கம் சைக்கிள்கள், அவற்றை உரசிக்கொண்டே அவசரப்படும் மோட்டார் சைக்கிள்கள், ஒன்றிரண்டு கார்கள், சோதனைச் சாவடியில் ஒவ்வொருவரையும் மிக உன்னிப்பாக கவனித்தபடியே அவரவரின் அடையாள அட்டைகளை துருவித்துருவி ஆராய்ச்சி செய்யும் சிப்பாய்கள்.

இதோ வருகிறேன், வருகிறேன் என்று கூறாமல் கூறி இந்தத் தேர்தலும் வந்து சேர்ந்தது. கூடவே இருந்தாற்போல் சுறுசுறுப்பும் பதற்றமும் தொற்றி நின்று பொதுமக்களை ரொம்பவும்தான் வாட்டத்தொடங்கி விட்டன.

மேற்கு நாடுகளில் குறைந்தது இரண்டு, கிழக்கில் ஒரு நாடு என்று அங்கெல்லாம் தேர்தல் சமயங்களில் நின்று கவனித்த அனுபவம் எனக்குண்டு.

நாங்கள் ஏதோ தெருவோரத்துக் கோயில்களில் ஒரு சில நிமிடத் துளிகளை சாமி கும்பிடுவதற்காக நிற்பதைப்போல - போகின்ற வழியில் இதையும் பார்த்துவிட்டுப் போவோமே என்ற மனப்பாங்குடன் வாக்குச் சாவடிக்குள் சென்று தமது வாக்குகளைச் செலுத்திவிட்டு அமைதியாகச் செல்லும் மக்களை அங்கு கண்டு வியந்திருக்கின்றேன். தீர்ப்புக்களை அமைதியாக ஏற்கும் மக்கள் சமுதாயம்! ஆனால் இங்கோ?

மனமே சலித்தது. தேர்தல் வர முன்னரும் தேர்தல் முடிந்த பின்னரும் இடம்பெறும் மரணக்குவியல்கள்! பூகம்பம் வரமுன்னர் அதைக் கிரகிக்கும் நுண்ணறிவை கடவுள் பறவைகளுக்குக் கொடுத்திருக்கின்றானாமே! அவை பரபரப்புடன் பறந்து புகலிடத்தைத் தேடிக்கொள்கின்றன. நாங்களும் எதையோ எண்ணி எண்ணி பரபரத்து...முடிவில்லாத பயணங்கள். இனம்புரியாத பயமொன்று மனதைக் கவ்விநிற்கின்றது.

சீ! வாழ்க்கை முழுவதுமே எதிர்கால விளைவுகளைப்பற்றி ஒரு பயந்த வாழ்க்கை. இவை எப்போது முடிவுறும்? கேள்விகள் பாரமாய் மனதை முழுமையாகத் தாக்கின.

வேகமாய் ஓடித்திரியும் பொலீஸ் வாகனங்கள் இராணுவ நகர்வுகள்...., மரணத்தைக் கையில் தருகின்றேன் என்று சொல்லிக்கொண்டே மின்னல் வேகத்தில் ஓடி மறையும் பச்சை மோட்டார் சைக்கிள்கள்...., அவற்றை ஓட்டிச்செல்லும் சிப்பாய்களின் பார்வைகள்...., இவை ஒருபுறம் -

**து.வைத்திலிங்கம்**

தேர்தல் வருவதால் யாவுமே வரும் என்ற நிலையில் அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களின் விலைக் குறைப்பை வானொலியிலும் பத்திரிகைகளிலும் அறிவித்தாலும் அவை தம் காதுகளுக்கு இன்னும் கேட்கவில்லை என அடம்பிடிக்கும் வியாபார உலகின் கயமைத்தனம் ஒருபுறம் -

தன் உண்மையான சட்டப்படியான நிறையை உள்வாங்கி, மெலிந்துபோன பாண்கள்...., அவற்றின் உற்பத்திக் கர்த்தாக்களின் பொய்கள் ஒருபுறம்.

ஓடி மறையும் அத்தியாவசியப் பொருள்கள் ஒருபுறம் -

நிஜங்களை மறைத்தபடியே மக்களுக்கு வெறுமுகம் காட்டி மறையும் நிர்வாக இயந்திரங்கள் ஒருபுறம் -

இவை எல்லாமே மக்களை மந்தைகளாக்கி, அதுவும் சிந்திக்கத்தெரியாத மந்தைகளாக்கிவிட்டனவே!

இத்தனையும் போதாதென்று காலம்காலமாக நல்ஆசிரியர்களாலும் பெற்றோர்களினாலும் பெரியோர்களாலும் போதிக்கப்பட்ட மனித நாகரிகச் சிந்தனைகள், அவற்றின் அடையாளங்களை தொலைத்துவிட்ட மாணவச் சமுதாயம்...

அவற்றின் பலனாக இன்று நடைபெறும் குரூரமான 'ராகிங்' வதைகள்....

அவற்றின் கோரவிளைவாக வைத்தியசாலையில் அவ்வப்போது சிகிச்சைக்காக மாணவர் அனுமதிக்கப்பட்ட சம்பவங்கள்...

ஒரு வரப்பிரகாசத்தின் மறைவுடன் ஓய்வுபெற்று மறைந்துவிடும் இந்த ராகிங் என்று நினைத்த அப்பாவிகள் நிறைந்த உலகம். இந்த அவலங்களைப் பார்த்துக்கொண்டு ஒன்றும் செய்யமுடியாமல் திண்டாடும்.... கல்விப்பீடத்தை அலங்கரிக்கும் கற்றறிந்த பெருந்தலைகள்....

கடைசியாக மிகஅண்மையில் இந்தக் கொடுமைக்கு ஆளான கிறீஸ்தவ கன்னியாஸ்திரியின் செய்தியை பத்திரிகையில் படித்தபோது மனம் பதறியது. செக்கென்ன சிவலிங்கமென்ன என்ற மனப்பான்மையில் நடப்பவர்களைப் பற்றி நாம் என்ன செய்யமுடியும்?

பத்திரிகைகளும் தமது கைநோக இந்த அவலங்களை கண்டித்து எழுதத்தான் செய்கின்றன.

ஆனாலும் -

யாரும் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

எல்லா நாகரீகங்களையும் கற்பிக்க பீடங்கள் உண்டு.

ஆனால் மனித நாகரிகத்தைக் கற்பிக்க யார் உள்ளனர்?

மனித நாகரிகத்தைத் தழுவிய விழுமியங்கள் அவற்றின் அடையாளங்கள் யாவுமே ஒட்டுமொத்தமாக தொலைத்துவிட்ட் சமுதாயமாக நாம் மாறிய நிலைதான் இப்பொழுது....



சீ! எல்லாமே கசந்தது.

மனம் அமைதியாக, மெதுவாக சைக்கிளை உருட்டுகிறேன். கால்சட்டைப் பைக்குள் கைவிட்டேன். எனது அடையாளத்தைத் தேடி - மனம் பகீரென்றது! எல்லாம் எடுக்க முன்னர் அதையே எடுத்துவைக்கும் அதி முன்னெச்சரிக்கைக் குணம், இன்று எங்கே மறைந்தது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அடையாள அட்டை எடுத்து இருபத்திஏழு வருடங்கள் ஆகின்றன. பத்திரமாய் பெட்டியில் சுகமான தூக்கத்தில் இருந்த அட்டைகள், கடந்த ஐந்து ஆண்டுகளில் புத்துயிர் பெற்று வாழ்க்கையின் மிக மிக முக்கிய பொருளாகத் திகழத்தொடங்கிவிட்டனவே! கூடவே தனக்கு ஒரு விசேடமான சோடியையும் சேர்த்துக்கொண்டது.

சோதனைச்சாவடிகளில் எனது தேசியத்தன்மையின்அடையாளத்தை பரிசோதிப்பார்கள். நான் இந்தநாட்டில் பிறந்தவன்தான் என்று அவன் திருப்திப்படமாட்டான்.'விசேட அட்டையைக் காட்டு!' என்று கேட்பான். ஆகவே ஒருவனை அடையாளம் காட்ட இரண்டு அட்டைகள் அவனுக்குத் தேவை.... ஆனால் நானோ தொலைந்துபோன, காணாமல்போன, என்னை விட்டுப்போன அடையாளங்களைத் தேடி அலைகின்றேன்......

இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. மனைவியைத் தொலைத்துவிட்டு வாழ்க்கையின் கோடுகள் முடிந்துவிட்டன என அவதிப்பட்ட நாள்கள்.... தாமரை மலரைப்போல் தன் மெல்லிய இதழ்களை விரித்து என்னைப் பார்த்துச் சிரிக்கும் என் உதிரத்தின் சாட்சியாய் தவழ்ந்துதிரிந்த அபர்ணா என் வாழ்க்கையின் ஒளிவிளக்காக - நம்பிக்கைநட்சத்திரமாக - தெரிந்தபடியால் வாழ்க்கையின் கோடுகள் மீண்டும் கண்களுக்குத் தெரியத் தொடங்கின. அபர்ணாவின் ஒவ்வொரு அசைவிலும், என்னைக் கரம்பிடித்து, என்னோடு நட்புறவாடி, என்னைத் தாங்கிய என் சாரதாவின் முழுச்சாயல் அப்படியே அச்சொட்டாக இருந்தது.

'சாரதா' என்று நான் அழைத்து வாய் மூடமுன் நான் எதை எதிர்பார்க்கின்றேன் என்பதை குறிப்பறிந்து செய்வாள் சாரதா.

"சாரதா! நீ என் மனைவியாய் வந்தது நான் செய்த புண்ணியம். இல்லாவிடில் எனது அவசரத்துக்கும், மறதிக்கும் கோபத்துக்கும் யார் ஈடு கொடுப்பாள்?"

நான் அசடு வழிந்து அரற்றும்போது தன் மெல்லிய சிரிப்பினால் என்னை மறக்கடிப்பாள். அர்த்தமில்லாத - அவசரமான - உணர்வுகளைத்தந்த உத்தியோக வாழ்க்கை. அதன் பரபரப்பில் நான் மூழ்கியபோதெல்லாம் "அமைதியாய் செய்யலாம்தானே!" என்று அபிநயம் காட்டியவள்.

ஆனால் வாழ்ந்து ஒரு குழந்தையையும் கையில் தந்துவிட்டு மறைந்தபோது நான் இருட்டில் தட்டுத்தடுமாறி செய்வதறியாது திகைத்துப்போனேன்.

என் மகள் அபர்ணாதான் இத்தனை நாள்களையும் அர்த்தமான தாக்கி என் கையைப்பிடித்து பாதை காட்டிய வழிகாட்டி.

நினைவுகள் தேய, பார்வையைக் கண்ணீர்திரை மறைத்தது.

அடேயப்பா!

என்ன துரிதகதியில் வாழ்க்கையின் நூல்களை எட்டிப்பிடித்து உயர வளர்ந்தாள் அபர்ணா! நான் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டே வந்தேனே! படித்துப்பட்டதாரியாய் அந்த வளாகத்துப் புல்தரையில், பட்டதாரிக் கோட்டுடன், கழுத்தில் பட்டப் பதக்க மாலையுடன் போட்டோவுக்கு நின்றபோது, அந்த விஸ்வரூபமான வளர்ச்சியைக்கண்டு நான் திகைத்து நிற்பதைப் பார்த்துப் பக்கத்தில் வருகிறாள்.

"அப்பா! என்ன அப்படியே நிக்கிறியள்? பக்கத்தில் வந்து நில்லுங்கோ. படம் எடுக்க போட்டோக்காரன் அவசரப்படுகிறான்!" நான் கண்ணீரை அடக்க முற்படுகிறேன். மனம் விம்முகிறது.

அபர்ணாவிற்கு சங்கீதம் படிப்பிக்க வேண்டும் என்று சாரதா கூறுவாள்.

சாரதாவின் ஆசையை நான் நிறைவேற்ற துடியாய்நின்றேன். அபர்ணாவும் என் ஆசையைப் புரிந்துகொண்டபோது நான் மகிழ்ந்தேன். நல்ல இனிமையான குரலுடன் அவளின் சங்கீதம் வளர்ந்தது. இளம் கலைஞர்மன்ற மேடையில் அபர்ணா, சாரதாவின் பச்சைநிறக் காஞ்சிபுரம் சேலை அணிந்து தனதுமுதல் இசைக் கச்சேரியைச் செய்தபோது நான் கனவுலகில் மிதந்தேன். "எங்கள் பாராட்டுதல்கள்" என்று என் நண்பர்கள் எனது கையைப் பிடித்து பாராட்டியபோது நான் கண்ணீரில் குளித்தேன்.

எனது மனம் ஆயிரம் யானைகளின் பலத்தை ஏற்றுக்கொண்டது. மாதிரி உணர்கிறேன். அந்தவேளையில் நான் ஒன்றையுமே தொலைக்கவில்லை என்று என்னுள் ஒரு வியப்பு. காலையில் நான் எழு முன்னரே எழுந்து வீட்டை மங்களமாக்கி விடுவாள் அபர்ணா. சாமிஅறையில் மெல்லிய திரியில் அமைதியாய் ஒரே சீரில் எரியும் குத்துவிளக்கு. நல்ல இதமான வாசனையைப் பரப்பி தன்னை இழந்து கொண்டிருக்கும் பத்திக்குச்சி.

எனக்கு மிகவும் பிடிக்கும் என்று [illegible] வரும் அளவெட்டி பத்மநாதனின் நாதஸ்வர இசை...... நான் காலையில் புது மனிதனாகிவிடுவேன். இப்படி ஒவ்வொருவிடயத்திலும் தானும்வளர்ந்து என்னையும் வளர்த்தவள் அபர்ணா.

"அப்பா, உங்களுக்கு நெஞ்சு நிறையச் சளி, பச்சைத்தண்ணீரில் குளிக்கவேண்டாம். வெந்நீர் வைத்திருக்கிறேன்."

நான் குளிக்கப்போகும் நேரத்தை கணித்தபடியே இருப்பாள்.

"அபர்ணா நீதேநீரில் சீனி கொஞ்சம்கூடப் போடவில்லை. கையில் கொஞ்சமாய் தா! நக்கிக் கொண்டே குடிக்கிறேன்" நான் கெஞ்சுவேன்.

"மூச்சுக் காட்டக்கூடாது. பேசாமல் குடியுங்கோ!"

அபர்ணாவின் கண்டிப்பு என்னை அடக்கிவிடும்.

சாரதா போனபின்பு இரத்த அழுத்தம், நீரிழிவு என்று நோய்கள் என்னிடம் உத்தரவு கேட்காமலே என்னுள் சங்கமமாகிவிட்டனவே.

"அப்பா, பிரஷர் பில்ஸ் போட்டீர்களோ?"

நான் அலுவலகத்துக்குப் புறப்பட முன் கண்டிப்பாய் கேட்பாள்.

"இல்லை அம்மா, இதோ போடப் போகிறன்."

நான் அவசரமாய் மேசையடிக்கு விரைவேன்.

"எனக்குத் தெரியும் நீங்கள் மறந்து போவீர்கள் என்று இந்தாருங்கோ, போடுங்கோ!"

கையில் குளிசைகளையும் தண்ணீர் கிளாசுடன் நீட்டுவாள். நான் மௌனமாக அவற்றை வாங்கிக் கொள்வேன். எனது மறதிகளை என் செல்ல மகள் புரிந்துகொள்வதில் எனக்குள் ஒரு சந்தோஷம், திருப்தி எல்லாமேதான்.

"எந்த நேரமும் கந்தோர் கந்தோர் என்று திரியாமல் உங்களையும்கொஞ்சம் கவனியுங்கள் அப்பா!"

சதா அபர்ணா சிரித்தபடி கூறினாலும் அதில் ஒரு கண்டிப்பு நிச்சயம் இருக்கும். சாரதா கூட தான் மறையுமட்டும் இதைத்தானே சொல்லிக்கொண்டிருப்பாள்?

திருமணப்பேச்சு வந்தபோது ஒரேயடியாக மறுத்துவிட்டாள்.

"அப்பா! இப்ப என்ன அவசரம்?" அவளின் மறுப்பு எனக்குப் புரிந்தது. எங்கே தனக்குத் திருமணமாகிப் போய்விட்டால் நான் தனித்துவிடுவேனோ என்று பயந்தது எனக்கு நன்றாகவே புரிந்தது.

அதற்காக நான் மௌனமாக இருப்பதா? நான் ஒழுங்குகளை மேற்கொண்டபோது எனது தீவிரத்தைக் கண்டு அவள் திகைத்துவிட்டாள்.

"என்ன அப்பா,என்னைக் கலைக்கிறதெண்டு முடிவுகட்டிவிட்டீர்களா?"

அவள் கண்நிறைய கண்ணீருடன் கேட்டபோது நான் ஆடிப்போய் விட்டேன்.

"இல்லை அபர்ணா! ஒரு தந்தையின் கடமையைச் செய்ய நீ என்னுடன் ஒத்துழைக்கவேண்டும். உனக்கு வயதாகிவருகிறது. நான் இல்லாவிடில் நீ தனித்துவிடக்கூடாது. அதுமட்டுமல்ல ஒரு தகப்பனுக்கு தான் தனது கடமைகளைச் செய்யாமல் இருந்துவிட்டானே என்று ஓர் அவப்பெயர் வருவதை நீ விரும்புகிறாயா?"

எனது கேள்விக் கணைகளை அபர்ணாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவளின் மனதை மாற்ற நான் எடுத்த பிரயத்தனங்கள்தான் எத்தனை?

ஒரு சமயம் நான் களைத்துவிட்டேன். சாப்பிடாமல் தூக்கமில்லாமல் சில இரவுகளை நான் மௌனமாகக் கழித்தேன். அவளின் எதிர்காலத்தை எண்ணி நான் கவலைப்பட...... எனது எதிர்காலத்தை, எனது தனிமையை நினைத்து அவள் விசனப்பட..... இப்படியே சில நாள்கள் ஓடிமறைந்தன. இறுதியில் நான் வென்றேன்.

எனது மிக நெருங்கிய உறவுப் பையன் அபர்ணாவின் கணவனாய் அமைந்தபொழுது நான் இறைவனுக்கு நன்றி செலுத்தினேன்.

கம்பியூட்டர் துறையில் பட்டம் பெற்று ஆஸ்திரேலியாவில் நல்ல உத்தியோகத்தில் இருந்தான் கேசவன். கணவனும் மனைவியுமாய் மணவறையில் அபர்ணாவும் கேசவனும் இருந்தபொழுது நான் மனம் நிறைவாகினேன்.

விமான நிலையத்தில் அவளைப் பிரிகிறேன் என்று மனதுக்குள் அழுகின்றேன். அபர்ணா எங்கே நான் அழுதுவிடுவேனோ என்று பயந்து சிரித்தபடியே நிற்கிறாள். அவளின் தவிப்பு எனக்குப் புரிந்தது. என் கைகளை இறுக்கிப் பிடித்துக்கொள்கிறாள். அந்த இறுக்கத்தில் சகலதையும் நான் புரிந்துகொண்டேன்.

"அப்பா! உங்கள் உடம்பைக் கவனித்துக்கொள்ளுங்கள். பில்ஸ் ஒழுங்காகப் போடுங்கோ, காஸ்குக்கரில் தண்ணீர் சுடவைத்துக் குடியுங்கோ,பச்சைத்தண்ணியில் குளிக்க வேண்டாம், வெளியே போகும்போது மறக்காமல் அடையாளஅட்டையைக் கொண்டுபோடுங்கோ....." இப்படி பல விதமான அறிவுறுத்தல்கள் எனக்கு. எல்லாவற்றுக்குமே நான் மௌனமாகத் தலையாட்டினேன். உண்மையில் அபர்ணா இருந்த தைரியத்தில் நான் இவ்வளவு நாள்களாக வாழ்க்கையைக் கழித்துவிட்டேன். என் மனதில் இருந்த வெறுமைநிலையை அவளின் கவனிப்பு அதைக் கலைத்தது உண்மைதான்.

இனி நான் தனிமையாய் விடுவேனா என்ற பயம் என்னை வாட்டியது. ஆனாலும், எத்தனை நாள்களுக்கு என்மகள் தனிமையாக இருப்பது? அவளின் அழகுக்கும், படிப்புக்கும் ஏற்றவிதத்தில் ஒரு கணவனைத் தேடிக்கொடுத்துவிட்டதில் ஒரு மன ஆறுதலும் மகிழ்வும் அடைந்தது தான் உண்மையாக எனக்குத் தெரிந்தது; புரிந்தது. வாரத்தில் இரண்டு முறை வரும் அபர்ணாவின் தொலைபேசி அழைப்புக்கள் என்னை ஒன்றையும்மறக்காத மனுஷனாக வைத்திருந்தன.

அப்படி ஒரு நினைப்பு என்னுள், ஆனால் அபர்ணாவின் பிரிவால் என்னுள் ஒரு வெறுமை வந்து குடிபுகுந்துள்ளதை நான் உணரமுடிந்தது. வீட்டில் வெறுமை, நான் செல்லும் இடங்களில் வெறுமை. ஆண்டாண்டு காலம் ஆண்டு அனுபவித்த மக்கள் எங்கே? உயர்ந்து நின்றும் வெறுமையாகக் காட்சிஅளிக்கும் வீடுகள்...தம்முள் மௌனமாக அழும் வீடுகளில் ஆளில்லாத நிலைமையைப் பயன்படுத்தி ஓடுகளையும் ஜன்னல் கதவுகளையும் கழற்றி தமதாக்கி வயிறு வளர்க்கும் அயோக்கியர்கள்...எங்கும், எதிலும் எல்லாவற்றிலும் வெறுமை! வெறுமை...!

"மிஸ்ரர் எங்கே பாக்கிறது? கெதியில வாறது" சிப்பாயின் கரகரத்த - என் இனிய தமிழ்மொழியைக் கொலைசெய்கிற - குரலைக்கேட்டு மனதுக்குள் திட்டியபடியே நகர்ந்தேன். தினமும் அரச வாகனத்தில் பவனிவரும் என்னை, என்முகத்தை நன்கு அறிந்தவன் அச்சிப்பாய், இன்று ஞாயிற்றுக்கிழமை அரச வாகனம் தேவை இல்லை.

என்னோடு ஒட்டி உறவாடி இருபதுவருட நண்பனாய் விளங்கும் சைக்கிளை நான் ஞாயிற்றுக்கிழமைகளில் எடுத்துத்துடைத்து மெருகூட்டியபின் ஒரு ரவுண்ட் திருநெல்வேலி சந்தைப்பக்கம் போய்வருவதை வழக்கமாக்கி இருக்கின்றேன். அரச வாகனத்தில் போகும்போது, சோதனைச் சாவடியில் நிறுத்துவதில்லை. சிப்பாய் என்னைப்பார்த்து ஒரு மெல்லிய புன்முறுவலை உதிர்த்துக் கையசைப்பது வழமை.

புன்சிரிப்பு உண்மையோ,போலியோ என நான் ஆராயமுற்படுவதில்லை. ஆனால் புன்னகை ஒன்றை முகத்தில் தவழவிட ஒரு சதம் தன்னும் ஒருவருக்கு செலவாவதில்லையே!

நானும் மனமார சிரித்து அவனுக்கு கையை அசைப்பது வழக்கம். அந்த வாகனத்தில் காணப்படும் எனது உத்தியோகத்தின் தன்மையைப் பிரதிபலிக்கும் அறிவிப்புப் பலகை அவனை புன்னகைக்கவைத்திருக்கும் என நான் நினைப்பதுண்டு.

ஆனால் இன்று அவன் புன்னகை செய்யவுமில்லை:கையை அசைத்து என்னைப் போகச் சொல்லவுமில்லை.

சைக்கிளை உருட்டிக்கொண்டு போய் அவனுக்கு முன்னால் நின்றேன். நான் மெல்லிய சிரிப்பொன்றை அவனைப்பார்த்து உதிர்த்தேன். ஆனால் அவன் அதை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

"கோ ஐரெண்டிக்காட்?"

சிங்களத்தில் கேட்டான்.

என்னிடம்தான் அந்த அடையாள அட்டை இல்லையே?

நான் கொண்டுவர மறந்துபோன சங்கதியை அவன் நம்பத்தக்க விதத்தில் எவ்வாறு எடுத்துரைப்பது? நான் அவனைப் பார்த்து முழிக்கின்றேன்.

"அப்பா, அடையாளஅட்டை கொண்டு போறிங்களோ.....?"

அபர்ணாவின் குரல் எங்கோ ஒரு தூரத்தில் ஒலிப்பது என் காதுகளில் விழுந்தது.

*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிறப்பின் இரகசியம் - பிறக்கப்

"பெட்டைக் குழந்தைகளாகப் பெத்துப் போடுகிறாளே படுபாவி" என்று மாமியாரின் திட்டைக்கேட்டுப் பரிதவித்த பெண்கள் பலர். பெட்டைக் குழந்தைகள் பிறப்பதற்கு காரண கர்த்தா ஆணா, பெண்ணா? அது சரி, பெட்டைக் குழந்தைகள் பிறக்காதுபோனால் ஆண் வர்க்கம் நிலைக்குமா? கட்டுரையைப் படித்துப் பாருங்கள் புரிந்துகொள்ளலாம்.

விந்து முட்டையை அடைந்து அதைக் கருக்கட்டச் செய்வது வைக்கோல் போரில் குண்டூசியைத் தேடுவதற்கு ஒப்பான நிகழ்ச்சியாகும். இது உயிரியல் அதிசயங்களில் ஒன்று.

அறிவியல் விரிவடைய, மகப்பேறு தொடர்பான விவரங்களும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. சில காலத்துக்குமுன் நிலவிய மனிதப் பிறப்பைப் பற்றிய கொள்கை 'சிறு மனிதன் கொள்கை' (HOMUN CULUS THEORY) எனப்படும். நுணுக்குக்காட்டி கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்பகாலமது. அக்கால நுணுக்குக் காட்டியின் உதவிகொண்டு மனித சுக்கிலப்பாயத்தில் சில பொருள்கள் அசைந்து திரிவதைக் கண்டார்கள். (வாற்பேய் போன்ற வடிவமுள்ள இவைதான் விந்துகள்). இப்பொருள்களுக்கு ஒரு வட்டத்தலையும் ஒருவாலுமிருப்பதைக் கண்




சிறும்னிதன் கொள்கைக்குரிய விளக்கப் படங்கள்.

டார்கள். இப்பொருளை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆரம்பித்ததுதான் 'சிறுமனிதன் கொள்கை.' இதன்படி, சுக்கிலப்பாயத்தில் மிதக்கும் பொருள்கள் உண்மையில் குட்டி மனிதர்களென்றும், புணர்ச்சியின்போது இவை பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தப்பட்டு, பெண்ணிடமிருந்து உணவைப்பெற்று விருத்தியடைந்து குழந்தைகளாகப் பிறக்கப்படுமென்பதாகும். அதாவது குழந்தைகளைத் தோற்றுவிப்பது ஆண்கள்; ஒரு குறிப்பிட்டகாலத்துக்கு அக்குழந்தைகளைத் தம்மகத்தே வைத்திருந்து, பராமரித்து, பிறக்கச்செய்வது பெண்கள் (ஆணாதிக்கம் எடுக்கும் கோலங்கள் எத்தனை!)

## இன்றைய விளக்கம் - விந்தும் சூழலும்

இன்றைய ஆராய்ச்சியின் பயனாக, கருக்கட்டிய சூலிலிருந்து குழந்தை தோன்றுமென்பது யாவருமறிந்ததே. ஆணின் சுக்கிலப்பாயத்தில் ஆயிரக்கணக்கில் விந்துகளிருக்கும் (விந்துகளின் செறிவு குறைவாகவுள்ளவர்கள் பெரும்பாலும் மலட்டுத்தன்மை உடையவர்களாக இருப்பார்கள்) ஒவ்வொரு விந்தும், ஒரு தலை, கழுத்து, வால் முதலிய 'உறுப்புக்கள்' கொண்டதாயிருக்கும். தலையின் முற்பகுதியில் முட்டையின் போர்வையை (முதலுரு மென்சவ்வு) ஊடறுப்பதற்குத் தேவையான நொதியங்களைத் தோற்றுவிக்கும் புன்னங்கங்கள் இருக்கும்; பிற்பகுதியில் கரு இருக்கும். கழுத்

**அங்கிகள் பலவிதம்**
**ஒவ்வொன்றும் ஒருவிதம்**

துப் பகுதியில் விந்தின் அசைவுக்குத் தேவையான சக்தியைக்கொடுக்கும் புன்னங்கங்கள் இருக்கும். வால் இடப்பெயர்ச்சிக்கு உதவும். விந்து அளவில் மிகிகச்சிறியது; மனிதனின் செங்குருதிக்கலங்களைக் காட்டிலும் சிறியது; மனித உடலிற் காணப்டும் கலங்கள் எல்லாவற்றிலும் சிறியது. சூல், விந்தைக்காட்டிலும் பல மடங்கு பெரியது; மனிதச் சூல் குண்டூசித் தலையின் பருமனுக்கு ஒப்பானதாயிருக்கும்; அதாவது வெற்றுக்கண்ணுக்குத் தெரியும். சூல் பெண்ணின் சூலகத்தால் தோற்றுவிக்கப்படும்; மாதத்துக்கொன்றாக வலது,இடது சூலகங்களினால் மாறி மாறித் தேற்றுவிக்கப்படும். விந்தும் முட்டையும் இணைவதால் கருக்கட்டிய முட்டை தோன்றும். இக்கருக்கட்டிய முட்டை முளையமாக விருத்தியடையும்.

## கருக்கட்டலின்போது பரம்பரை இயல்புகள் இரட்டிப்படையாது தவிர்க்கப்படும் முறை:-

மனித இனத்திற்குரிய குண இயல்புகள் பல. தனிப்பட்ட மனிதருக்கென்ற தனிப்பட்ட இயல்புகளுமுண்டு. தோல்நிறம், கேசத்தின் தன்மை, கண்ணின் நிறம், உயரம், பல்லின் தன்மை, நடத்தைபோன்ற பல குணஇயல்புகளுண்டு. இந்த இயல்புகளுக்குரிய செய்திகளைத் தாங்கியிருக்கும் அமைப்புக்கள் பரம்பரையலகுகள் அல்லது சந்ததிச்சுவடிகள் (GENES) என அழைக்கப்படும். ஓர் இயல்பிற்கு ஒரு பரம்பரையலகு (DNA) காரணமாயிருக்கலாம்; அல்லது ஓர் இயல்பிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பரம்பரையலகுகள் காரணமாயிருக்கலாம்; அல்லது ஒரு பரம்பரையலகு ஒன்றுக்கு மேற்பட்ட இயல்புகளுக்கு காரணமாயிருக்கலாம். பரம்பரை அலகுகள் நூல்போன்ற இழைகளுக்குள் நெடுக்குவரிசையில் அடக்கப்பட்டிருக்கும். இவை நிறமூர்த்தங்கள் (CHROMOSOMES) என அழைக்கப்படும். நிறமூர்த்தங்கள் வேறுபட்ட நீளங்களை உடையவையாகவிருக்கும்; ஒவ்வொரு நிறமூர்த்தத்திற்கும் ஒரு சோடியிருக்கும். நிறமூர்த்தங்கள் கருவினுள் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு உயிரிக்கும் ஒரு குறிப்பிட்ட நிறமூர்த்த எண்ணிக்கை உண்டு மனிதனின் நிறமூர்த்த எண்ணிக்கை 46, அதாவது 23 சோடி. கருக்கட்டல் நிகழும்போது ஆணிலிருந்து பெறப்பட்ட விந்து, பெண்ணினால் தோற்றுவிக்கப்பட்ட முட்டையுடன் இணையுமென அறிந்தோம். இவையிணையும்போது இவற்றின் கருக்களுமிணையும், கருக்களிணையும்போது அவற்றிலிருந்து நிறமூர்த்தங்களும் ஒன்றுசேரும். கருக்களிலிருந்த நிறமூர்த்த எண்ணிக்கை மனிதனின் நிறமூர்த்த எண்ணிக்கையாகிய 46ஆக இருந்தால் - அதாவது சாதாரண உடற்கலங்களின் நிறமூர்த்த எண்ணிக்கையைக் கொண்டிருந்தால் - இவை இணையும்போது நிறமூர்த்த எண்ணிக்கை இரட்டிக்கலாமல்லவா? அதாவது 92ஆக வரலாமல்லவா? இது மனித இயல்புகளில் பெருமாற்றத்தை விளைவித்துவிடுமல்லவா! அதனால், சேருகின்ற கலங்கள், அதாவது புணரிகள், பாதி நிறமூர்த்த எண்ணிக்கையைக் கொண்டிருக்கும் (இதற்காகத்தான் நிறமூர்த்தங்கள் சோடிகளாகவிருக்கின்றன), அதாவது புணரிகளின் நிறமூர்த்த எண்ணிக்கை 23ஆக இருக்கும். இவை இணையும்போது பூரண நிறமூர்த்த எண்ணிக்கை பெறப்படும். அதேசமயம் இயல்புகள் கலபடுவதற்கும் வசதிகளுண்டு. பரம்பரை பரம்பரையாக இயல்புகள் கலபட்டுக்கொண்டே வந்திருப்பதனால் மனித இனம் நன்றாகக் கலக்கப்பட்டதொன்றாகும். மனித இனத்தில் தூய பேதம்(RACE) என்று ஒன்றில்லை. ஆரியர் என்பது வெறும் மாயை.



பிறக்கப்போவது ஆணா, பெண்ணா? வ
சுயாதீனமாகக் குழந்தைகள் பெறுவதற்கு வ
குமா?

## இலிங்க நிர்ணயம்

குழந்தை பிறக்கும்போது ஒன்றில் ஆண் குழந்தையாகவோ அல்லது பெண்குழந்தையாகவோ இருக்கின்றதல்லவா; இயற்கை இதை எப்படி நிர்ணயிக்கின்றதென்பதை ஆராய்வோம். மனிதனின் நிறமூர்த்தங்களில் இரண்டு பால் நிறமூர்த்தங்கள் (SEX CHROMOSOMES) எனப்படும். இதில் ஒன்று நெடியது 'X' நிறமூர்த்தம் எனப்படும், மற்றது குறுகியது 'Y' நிறமூர்த்தம் எனப்படும். ஏனைய 44 நிறமூர்த்தங்களும் உடலுக்குரியவை. தன்மூர்த்தங்கள் (AUTOSOMES) எனப்படும். அமைப்பைக்கொண்டு உடலுக்குரிய நிறமூர்த்தங்களை பால் நிறமூர்த்தங்களிலிருந்து வேறுபடுத்தியறியலாம்; பால் நிறமூர்த தங்கள் வளைந்தவை. ஆணில் ஒன்று 'X', மற்றது 'Y'. பெண்ணில் இரண்டும் 'X'. முட்டையில் தனி 'X' நிறமூர்த்தம் மாத்திரமிருக்கும். விந்தில் ஒன்றில் 'X' அல்லது 'Y' இருக்கும். 'X' நிறமூர்த்தமுள்ள விந்து முட்டையுடன் இணையும்போது தோன்றுவது பெண். 'Y' நிறமூர்த்தமுள்ள விந்து இணையும்போது தோன்றுவது ஆண். இப்படியே கருக்கட்டல் நிகழும்போதே இலிங்கம் நிர்ணயமாகிவிடும். இதன்படி ஆண், பெண் நிர்ணயத்தை ஏற்படுத்துமியல்பு ஆணுக்குத்தாணுண்டு. இயற்கை நியதிப்படி ஆண், பெண் நிர்ணய விகிதாசாரம் 50/50 ஆகத்தானிருக்க வேண்டும்.

## தொடர்ந்து ஒரே இலிங்கத்துக்குரிய குழந்தைகள் ஒருவருக்குப் பிறப்பது தலைவிதியா, தற்செயலா?

சனத்தொகை அடிப்படையில்தான் விகிதாசாரத்தைப் பார்க்கவேண்டும்; தனிப்பட்டவர்களின் விடயத்தில் பொருந்தாமற் போகலாம். மேலும் விகிதாசாரத்தைப் பாதிக்கும் வேறு சில காரணிகளுமுண்டு. அத்துடன் இயற்கை ஆண்களைக் காட்டிலும் பெண்களைத்தான் கூடுதலாகப் பேணுவதுண்டு. சந்ததி வழங்குவதற்கும் பெண்கள் அவசியம். கருக்கட்டலுக்கு ஒரு சில ஆண்கள் இருந்தாலேபோதும். இதைச் சற்று விவரமாகப் பார்ப்போம்.




விந்துக்களும், முட்டைகளும், அமைப்பு விளக்கம்.

சிலருக்கு அடுத்தடுத்து ஐந்தாறு பெண்களாகப் பிறக்கின்றன! சிலருக்கு அடுத்தடுத்து ஆண் பிள்ளைகள் பிறக்கின்றன! சிலருக்கு

இரண்டும் கலந்து சமவிகித
றன. இதற்கெல்லாம் காரண
முன்பெல்லாம் கருத்தரித்த ந
குழந்தை பிறக்கும் வரை கா
டியிருக்கும் என்ன பிள்ளை பி
என்பதை அறிவதற்கு.

பாட்டிமார்களின் அனுபவ
எப்பொழுதும் சரிப்பட்டு வரு
திரம் பார்ப்பது போலத்தான்
வத்தின்போது சிலர் எதிர்
பதுண்டு, சிலருக்கோ பெரிய
போவதுண்டு. பின், கருப்பை
சிசு இன்னதென அறிவதற்கு
சில பரிசோ தனைகளை
கையாண்டார்கள். ஆனால் இ
பரிசோதனைகள் எல்லாம் 100க்
100 சரியான விடைகளை
தருவதில்லை. ஆனால் ப
ஆராய்ச்சிகளின் பயனாக இன்
கருப்பையில் இருக்கும் சி
ஆரோக்கியமா னத
பிரச்சினைகளற்றதா? என்
பால்? என்பதையெல்லா
அறிந்துகொள்ள முடியு
பிறப்புரிமைக்குரிய குளறு
கள் ஏதும் இருப்பின் சிசுவை
கலைத்துவிடுவார்கள். (பா
இன்னதென்று தெரிந்தாலு
பெரும்பாலும் பெற்றோர்களு
குச் சொல்லமாட்டார்கள். க
ணம் பெண் குழந்கைளின் பே
உள்ள 'பாசம்' காரணமாக
வைக் கலைத்துவிடலாமல்ல

## 'ஓடருக்குக்' குழந்
## களைப் பெற்றுக்கொள்
## முடியுமா?

என்ன பிள்ளை வேண்டு
அப்பிள்ளையே பெற்றுக்கொள்
முடியும். அதாவது 'ஓடருக்கு
குழந்தைகளைப் பெற்றுக்கொ
ளலாம். (உணவகத்தில் '
நெய்த் தோசைபோடு' என்
ஓடர்போடுவது போலல்ல
போக்குத் தெரிகின்றது). இ
எப்படி முடியுமென்பதைப் பா
போம்.

ஆண் புணரிகள் இ வ
உண்டு என அறிந்தோ ஒ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கப்போவது ஆணா,பெண்ணா?



...பெண்ணா? வருங்காலத்தில் ...பெறுவதற்கு வாய்ப்புக்கிடைக்

...ந்து சமவிகிதத்தில் பிறக்கின் ...லாத காரணம் இன்று தெரியும். ... கருத்தரித்த நாள் தொடக்கம் ...க்கும் வரை காத்திருக்க வேண் ...ன பிள்ளை பிறந்திருக்கின்றது ...வதற்கு.

...ளின் அனுபவ முற்கூற்றுக்கள் ...சரிப்பட்டு வருவதில்லை. சாத் ... போலத்தான் இதுவும். பிரச ... சிலர் எதிர்பார்ப்பது நடப் ...ருக்கோ பெரிய ஏமாற்றமாகப் ... பின், கருப்பையில் இருக்கும் ...ன அறிவதற்குச் ... தனைகளைக் ...கள். ஆனால் இப் ...ள் எல்லாம் 100க்கு ... விடைகளைத் ... ஆனால் பல ... பயனாக இன்று ... இருக்கும் சிசு ...மா னதா? ...ற்றதா? என்ன ...தையெல் லாம் ...ள்ள முடியும். ...குரிய குளறுபடி ...ருப்பின் சிசுவைக் ...வார்கள். (பால் ... தெரிந்தாலும் ... பெற்றோர்களுக் ...மாட்டார்கள். கார ...ழந்கைளின் மேல் ... காரணமாக சிசு ...துவிடலாமல்லவா)

### ...க்' குழந்தை ...ற்றுக்கொள்ள

...ளை வேண்டுமோ ... பெற்றுக்கொள்ள ...வது 'ஓடருக்குக்' ...ப் பெற்றுக்கொள் ...னவகத்தில் 'ஒரு ...சைபோடு' என்று ...து போலல்லவா ...ரிகின்றது). இது ...மென்பதைப் பார்ப் ...

...ரிகள் இவ்வகை ...அறிந்தோம். ஒன்று

'X' நிறமூர்த்தத்தையுடையது, மற்றது 'Y' நிறமூர்த்தத்தை உடையது. இவற்றின் அமைப்பிலும் அளவிலும் கூட வேறுபாடுகள் உண்டு. 'Y' நிறமூர்த்தமுள்ள விந்து சிறிய வட்டத்தலையை உடையது. 'X' நிறமூர்த்த முள்ளவிந்து நீண்ட தலையையுடையது. சிலரின் சுக்கிலப் புடகத்தில் சிறிய வட்டித் தலையையுடைய விந்துகள், நீண்ட தலையையுடைய விந்துகளிலும் மிகக்கூடிய விகிதத்திற் காணப்படும். இந்த 'Y' நிறமூர்த்தமுள்ள விந்து மற்றையதைக் காட்டிலும் சுறுசுறுப்புள்ளதுங் கூட. அதனால் இவருக்கே ஆண் குழந்தைகள் பிறப்பதற்குச் சாத்தியக்கூறுகள் அதிகம். சிலரின் சுக்கிலப்பாயத்தில் 'X' நிறமூர்த்த முள்ள விந்துகள் மிக அதிக எண்ணிக்கையிற் காணப்படும். இவர்களுக்குப் பெண்குழந்தைகளே அதிகமாகப்பிறக்கும்.சிலருக்கு இயற்கை நியதிப்படி விந்துகள் தோன்றும்; அதாவது 'X', 'Y' விந்துகள் சம விகிதத்திலிருக்கும், குழந்தைகளும் அங்ஙனமே பிறக்கும்.

## குகன்

மேலும் 'Y' நிறமூர்த்தமுள்ள விந்து சுறுசுறுப்பானது; ஆயினும் சீக்கிரம் இறந்து போய் விடும். 'X' நிறமூர்த்தமுள்ள விந்து ஆறுதலானது, ஆனாலுங் கூடிய காலத்துக்கு உயிர் வாழும். அது மாத்திரமல்லாது சூல், விந்தைக் கவருமென்பது சந்தேகத்துக்கிட மானதொன்றாகும். அப்படியொரு கவர்ச்சியுமில்லை என்று சில விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். சூலும் விந்தும் சேருவது தற்செயலான நிகழ்ச்சி என்பதே இவர்களின் கருத்து. (குருடன் பெண்டிலுக்கு அடிக்கும் கதை போலும்) அத்தோடு யோனிமடலின் திரவங்களை எதிர்த்துச் சென்று விந்து முட்டையை அடைவது ஆற்றில் ஒரு மனிதன் எதிர்நீச்சல் அடிப்பதற்குச் சமனானதாகும். இத்தனை தடைகளையும் மீறித்தான் கருக்கட்டல் நிகழவேண்டும். அதனால் அதிக அளவு சந்தர்ப்பத்திலும் (CHANCE) தங்கியிருக்கின்றது. இதைத்தான் 'பலன்' என்றும் 'விதி' என்றும் சொல்லுகிறார்கள் போலும்.

விந்துக்களின் வித்தியாசத்தை அறிந்ததோடுமட்டுமல்லாது, இவற்றைப் பிரிக்கவுங் கூடுமென்று சொல்லுகிறார்கள். அதாவது, ஒரு தம்பதிகளுக்கு ஆண்குழந்தை வேண்டுமாயின், கணவனின் சுக்கிலப்பாயத்தைப்பெற்று அதிலிருந்து 'X' நிறமூர்த்தமுள்ள விந்துக்களை அகற்றிவிட்டு, மனைவிக்குச் செயற்கை விந்தூட்டம் (ARTIFICIAL INSEMINATION) கிடைத்த சுக்கிலப்பாயத்தினால நிகழ்த்தி, கருகட்டல் நிகழச்செய்து, ஆண்குழந்தையைப் பெற்றுக் கொள்ளமுடியும். அல்லது முட்டையை அகற்றி 'Y" நிறமூர்த்தங்கள் உள்ள விந்தினால் கருக்கட்டச் செய்தபின் தாயின் கருப்பையில் வைத்து விடலாம்.




கருப்பையினுள் முழு வளர்ச்சியடைந்த சிசு பிறப்பதற்கு முன் இருக்கவேண்டிய நிலையில் சிசுவின் தலை யோனிமடலை நோக்கியிருக்கவேண்டும். கைகள் முகத்தை மூடியிருக்கும். முதுகுப்புறமோ பிற்புறமோ (குன்றி) யோனி மடலை நோக்கியிருந்தால் குழந்தை பிறக்கமுடியாது போகும். படத்தில் சிசுவின் அளவீடுகளைப்பாருங்கள் இதைப் புரிந்துகொள்ளலாம். கால்கள் முதலில் வெளிவர முற்பட்டாலும் பிறப்பதில் பிரச்சினைகள் ஏற்படும். கருப்பையில் சிசு புரளுவதற்கு உதவும் வகையில் தொப்புள் கொடி நெடியதாயிருக்கும். அதனால்தான் அது சில சமயங்களில் சிசுவின் கழுத்தைச் சுற்றிவிடுவதுண்டு இதைத் தான் சாதாரணமாக குழந்தை மாலையுடன் பிறந்தது எனக் குறிப்பிடுவார்கள் (இது தாய் மாமனுக்குக் கூடாது ஏன் பார்கள் விளக்கம் சொல்பவர்களைத்தான் கேட்க வேண்டும், எமக்குத் தெரியாது)

### குழந்தை விருத்திக்குத் தாதியர்கள்

குழந்தை பிறந்தபின் அதை வளர்ப்பதற்குத் தாதியர்களை நியமிப்பது போல, கருவை வளர்த்துக்கொடுப்பதற்கும் தாதியர்களை




நிறமூர்த்த எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படும் முறை.

நியமிக்கலாம். தாயின் கருப்பையில் குழந்தை வளரமுடியாதிருந்தால், அல்லது வேறு காரணங்களினால் தாயினால் கருவைச் சுமக்க முடியாதிருந்தால், அக்கருவை சுமப்பதற்கு தாதியை ஏற்படுத்தமுடியும். மனைவியின் முட்டையை எடுத்து கணவனின் விந்தினால் கருகட்டச்செய்து, ஏற்ற ஊடகத்தில் முளையத்தை வளரச்செய்து (TEST TUBE BABY) முளையம் ஒரு குறிப்பிட்ட பருவத்தை அடைந்ததும் (எட்டுக்கலநிலை ஏற்றதாகக் கருதப்படுகிறது) முளையத்தை தாதியினது கருப்பையில் புகுத்தி வளரச்செய்யலாம். இது மாற்றான் தாயின், உடலில் விருத்தியடைந்து பிறந்தாலும், இவர்களின் குழந்தையல்லவா, இவர்களின் தசையும் இரத்தமுமல்லவா? (பத்துமாதம் சுமக்காமல் பெற்ற சொந்தக் குழந்தை).

### விந்துவங்கிகளும், முட்டை வங்கிகளும் - ஆபத்து சாதாரண ஆண்களுக்கும் பெண்களுக்கும்.

மேதைகள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களின் விந்துக்களையும் முட்டைகளையும் பாதுகாத்து வைத்திருக்க முடியும். விந்துவங்கிகளிலும் (SPERM BANKS), முட்டை வங்கிகளிலும் (EGG BANKS) கடைகளில் துணி மணிகளைத் தேர்ந்தெடுப்பது போல, விந்தையும் முட்டையையும் தேர்ந்தெடுத்து (தெரிவுக்கு உதவும் வகையில் இவற்றுடன் பயோடேற்றா இருக்கும்) கருக்கட்டச்செய்து, சொந்தக் கருப்பையிலோ இரவற்கருப்பையிலோ வளரச் செய்து குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வசதிகள் பெருகும் போது அடிவயிற்றைக் கலக்கும் பிரச்சினைகளும் ஏற்படவாய்ப்புண்



பத்து மாதம் சுமக்காமலேயே கையில் குழந்தை!

டல்லவா? சில விஞ்ஞானிகளின் விபரீதக்கருத்துக்கள் எம்போன்ற சாதாரணங்களின் அடித்தளத்தையே கலக்கும் கருத்துக்களாகவுள்ளன. இவர்களின் கருத்துப்படி நடக்குமாயின் ஒரு காலத்தில் உலகத்தில் 'மேதைகள்' மாத்திரம்தானிருப்பார்கள். மனித இனத்திலேயே தேர்வு விருத்தி நடத்த நினைக்கிறார்கள். (சீதனத்தின் அடிப்படையில் தேர்வும் இத்தகைய ஒரு வகை 'செலக்ஷன்'தான்). இவர்களின் கருத்து என்னவென்றால் மேதைகளின் சுக்கிலப்பாயத்தைச் சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும்மேதைகளின் முட்டைகளையும் சேமிப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். காலத்துக்காலம், மேதைகள் தேவைப்படும்போது,தேவைக்கு ஏற்ப 'பயோடேற்றா' அடிப்படையில் தேர்வு நிகழ்த்தி, சேமிப்பிலுள்ள முட்டைகளிலிருந்தும் விந்துகளிலிருந்தும் மாதிரிகளைப் பெற்று பரிசோதனைக் குழாய் முறையில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிறக்கும் குழந்தைகள் மேதைகளாகவிருக்கும் (பிறப்புரிமையியலின் அடிப்படையில் முட்டாள்களும் முரடர்களும் தோன்றலாம்).

மற்றவர்களையெல்லாம் என்ன செய்வது? சுலபமான வழி அவர்களையெல்லாம் மலடுகள் ஆக்குவது, முக்கியமாக ஆண்களை - இவர்களையெல்லாம் தொழிலாளர்களாக வைத்திருக்கலாம். றோபோக்கள் (ROBOTS)




இலிங்கநிர்ணயம் - ஆண், பெண் இலிங்கம் நிர்ணயமாகும் முறை.

பெருகினால் இதிலும் வாயிலை மண்விழலாம்!

போகிறபோக்கைப் பார்த்தால் அடுத்த நூற்றாண்டில் என்னென்னவெல்லாம் நடக்குமோ! பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்; வாழ விட்டால்!!.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளை றோஜா முள்

## பாகம் II

**4** எமிலியின் சிநேகிதி தான் வஸி. கரோலுக்கும் அவள் அறிமுகமாகி விட்டாள். நாளை விடிந்ததும் அவளது திருமணம் மிக ஆரவாரமாக நடைபெற இருக்கிறது.

திருமணம் நடைபெறவுள்ள ஹோட்டல் கரோலின் பங்களாவிலிருந்து சுமார் முப்பது மைல்கள் தொலைவில் மலைப்பக்கமாகச் சற்று உயரத்தில் இருக்கிறது. மிகவும் அழகான சூழல்.

கொஞ்சம் அமைதியான இடம் என்றாலும் ஹோட்டலின் முகப்பில் ஆரவாரத்துக்குக் குறைவு இருக்காது. இருபத்தைந்து மாடிகளையும் இதர வசதிகள் பலவற்றையும் அது கொண்டிருந்தது. முகப்பில் பரந்த வாகனத் தளமும், வரவேற்புக் கூடங்களும் அமைந்திருந்தன. எப்போதும் கணிசமான கூட்டம் அங்கே இருக்கும். கலகலப்புக்குக் குறைவு இருக்காது.

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் உல்லாசம் தேடிவருபவர்கள் அதிகம். அத்தோடு நாளை நடைபெறவுள்ள திருமணத்திற்காக நெருக்கமானவர்கள் இன்றே வந்து குவிந்துவிடுவார்கள். பெரிய ஆள்கள் வருவதால் கண்காணிப்பும் தீவிரமாகவே இருப்பது வழமை.

எமிலி இரண்டு அறைகளை புக் பண்ணி இருந்ததை மேன் உறுதிப் படுத்திக்கொண்டான். எனவே இன்று மாலை கரோல், டானியலை அங்கு எதிர்பார்க்கலாம். அவனும் அங்கே ஓர் அறையை புக்பண்ணிக்கொண்டான்.

**மு.சிவநேசன்**

ஞாயிற்றுக்கிழமைகளில் போல்றூம் டான்ஸ் பிரமாதமாக இருக்கும்; குடிவகைகள் ஆறாக ஓடும்; ஆட்டமும் பாட்டும் வானைப் பிளக்கும்.

எமிலி கரோலுக்கும் டானியலுக்கும் இரவு விருந்துகூட கொடுக்கிறாள். நாளை திருமண விருந்தோடு மதியம் கடக்கமுன் அவர்கள் திரும்பி விடுவார்கள்.

எல்லோரும் தத்தமது தரப்பு ஒழுங்குகளைச் சரிபார்த்துக்கொண்டனர். எல்லாம் ஓ.கே. ஞாயிறு மதியம் கடக்கிறது.

* * *

மலை ஏற்றத்தில் பொருத்தமானதோர் இடத்தைத் தெரிந்து கொண்டான் மேன். அங்கிருந்து பார்த்தால் கரோலின் பங்களாவின் ஆகாயத் தோற்றம் அழகாக இருக்கிறது. அதிலிருந்து புறப்பட்டால் மலைமீது ஏறும் வீதியும் பெரும்பாலும் தெளிவாகத் தெரிகிறது.

இவன் இருக்குமிடத்தைக் கடந்து ஏறித்தான் அவர்கள் காரில் ஹோட்டலுக்குச் செல்ல வேண்டும். இங்கிருந்து அவர்களைத் தொடர்வதுதான் அவனது திட்டம். வழியிலோ ஹோட்டலிலோ வசதியான இடத்தில் வைத்து கூடியவிரைவில் நெக்லஸ்ஸை அப்பிக்கொண்டு மாறிவிடல் வேண்டும்.

அதிசக்திவாய்ந்த பைனாகுலர் (தொலைநோக்கி) ஒன்று அவன் கையில் இருந்தது. கீழேவரும்வாகன இலக்கங்களை அது தெளிவாகக் காட்டிற்று.

இவனது காரில் சாரதி ஆசனத்தில் ஒருவன் எப்போதும் புறப்படத் தயாராக இருந்தான். வீதியில் கணிசமான வாகனப் புழக்கம் இருந்தது. இன்றும்கூட தணியவில்லை.

பைனாகுலர் ஊடாக பங்களாவைத் துருவியபடி இருந்தன மேனின் விழிகள். உள்ளே நடப்பது எதுவும் தெரியாது. வளவு மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அங்கிருந்துதான் கணிசமான றோஜாப் பூக்கள் திருமணத்திற்கு வந்து சேரும். அவற்றைப் பறிப்பதில் வேலையாட்கள் மும்முரமாக இருப்பது தெரிகிறது.

எமிலியின் கார் பங்களாவுக்குள் நுழைகிறது. அதில் பூப்பெட்டிகள் வைக்கப்படுகின்றன. எமிலியை வரவேற்கக் கரோல் வெளிப்படுகிறாள். அவள் கழுத்தில் ஜொலிக்கிறது வைர நெக்லஸ். எமிலி தொட்டுப் பார்த்தபடி ஏதோ கதைக்கிறாள். இருவரும் உள்ளே போய்விட்டனர்.

நீண்டநேரம் வெளியே எந்த நடமாட்டமும் இல்லை. பார்த்துப் பார்த்துப் பூத்துப்போயின மேனின் விழிகள். அருகே இருந்த விஸ்கிப் போத்தலை எடுத்து நேரே வாய்க்குள் ஊற்றினான். நிதானம் தவறக்கூடாது என்பதில் குறியாக இருந்தான்.

இந்தச் சௌகரியமான மறைவிடத்தை மைக்தான் ஒரு முறை சொல்லிக்கொடுத்திருந்தான்.

* * *

பங்களாவின் வரவேற்புக் கூடத்தில் எமிலியும், கரோல் டானியலும் கலகலப்பாகப் பேசிக்கொண்டனர்.

நெக்லஸ்ஸை இப்பவே மாட்டியாயிற்றா? என்றாள் எமிலி.

எத்தனை நாளைக்கு அது என் கையில் இருக்கும்? லொக்கருக்குப் போகும்வரை கழுத்தில் இருக்கட்டுமே. ஏதோ ஒளித்துக்கொண்டுபோனாற் போல் என்னிடம் 'ஒன்றும் இல்லை என்று விட்டுவிடவா' போகிறார்கள் சுழியன்ஸ் என்று ஜோக்கடித்தாள் கரோல்.

இரவு டான்ஸ், விருந்து எல்லாம் பிரமாதம்தானே என்றான் டானியல். இப்படிப் பொதுஇடங்களில் கூடிப் பல காலம் ஆச்சே. எனவேதான் மூவரும் உற்சாகமாக இருந்தனர்.

இருள் கௌவ முன்னமே புறப்பட்டுவிடுவது நல்லது என்று அவசரப் படுத்தினாள் எமிலி. கரோலின் கார் - வெண்புறா - தயாரானது. அது முன்னே புறப்பட எமிலியின் கடும் நீல கடிலக் பின்னால் தொடர்கிறது.

இரண்டு வாகனங்களும் வீதிக்கு வந்து மலையேற்றம் நோக்கித் தம் முகப்புகளைத் திருப்பிக்கொண்டன.

கரோலின் காரைக்கண்டதும் அதன் இலக்கத்தை மேன் உறுதிசெய்து கொண்டான். உள்ளே இருப்பவர்கள் விவரம் தெளிவாகத் தெரியவில்லை. இருளும் கௌவிக்கொள்ளத் தொடங்குகிறது.

இப்போது மேன் தனது சிவப்பு நிற பியட்டின் ஆசனத்தில் இடம் பிடித்துக் கொண்டான். அவனது சாரதி எந்நேரமும் புல்லட் போல வாகனத்தை வீதிக்கு இறக்கத் தயாராகிவிட்டான்.

இவ்விடத்துக்கு கரோலின் வாகனம் வந்துசேர இன்னும் சுமார் அரை மணி நேரம் எடுக்கலாம். அவன் எல்லாவற்றையும் சரிபார்த்துக்கொண்டான்.

அவனது காரில் மயக்கமருந்து ஊசி, மயக்க மருந்து ஸ்பிரே, கைத்துப்பாக்கி, கத்தி, குறடு என்று ஏகப்பட்ட சாதனங்கள் இருந்தன. தேவைக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தலாம்.

காரியத்தை எப்படிமுடிப்பது என்று அவன் இன்னமும் சரிவரத் திட்டமிடவில்லை. மாற்றுத்திட்டங்கள் பலவற்றையும் அவன் தயாராக வைத்திருந்தான்.

வசதியானால்வழிப்பறிக்கொள்ளை - வாகன இடைமறிப்பு. தப்பினால் ஓரங்கட்டி மலைச்சாரலில் சறுக்க வைக்கலாம் - விபத்தில் சிக்கவைக்கலாம். ஆனால் கரோலுக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது என்பது மைக்கினது நிபந்தனை.

ஹோட்டலில் என்றால் நோகாத சந்தர்ப்பங்கள் நிறையக்கிட்டும். ஏற்கனவே ஹோட்டல் ஊழியர்களின் உடுப்பை ஒத்த கோலத்தில் அவன் மாறி இருக்கிறான். ஆள்மாறாட்டம் கூடச் செய்யும் உத்தேசம்.

எப்படியும் விடிவதற்குள் நெக்லஸ்ஸுடன் மாறிவிடல் முடியும் என்ற நம்பிக்கை அவனிடம்.

பொருத்தமானதோர் சாரதியை அவன் தெரிந்து வைத்திருக்கிறான். இப்போது எதிர்வுகூறமுடியாது. உத்தரவு போடப்பட்டதும் அப்படியே செயற்படல் வேண்டும் என்று சொல்லி வைத்திருக்கிறான். தான் செய்யப் போகும் காரியம் என்னவென்று கூட அவன் சொல்லிவைக்கவில்லை.

விருட்டென்று எமிலியின் நீலக் கார் கடந்துவிட்டது. பின்னே நான்கு வாகனங்களின் பின்னால் கரோலின் கார் வந்துகொண்டிருக்கவும் இடையில் சரியாக மூக்கை நுழைத்தது மேனின் கார். இயல்பாக வந்த அதை சந்தேகமின்றி இடையில் புகவிட்டது அந்த வெண்புறா.

இருளிலும் வெண்புறா புறாத்தான். அழகுஅழகுதான் என நினைத்துக் கொண்டான் மேன். உள்ளே விவரம் விளங்கவில்லை. நெக்லஸ் தவிர வேறெதற்கும் இப்போது ஆசைப்படக் கூடாது.

என்றாலும் பாழும் மனது பலதுக்கும் அலைபாய்ந்தது. கண்ணாடிக்குள் பின்னால் தொடரும் வெண்புறாவின் ஹெட்லைட் ஒளியை ரசித்தபடி முன்னால் போய்க்கொண்டிருந்தான் மேன்.

எதிரே வந்த சிக்னல் லைட் சிவப்பு சமிக்ஞையில் முதலாவதாக மேனும் பின்னால் வெண்புறாவும் மாட்டிக்கொள்ள பின்னாலே வாகன அணி நீண்டு நின்றது. முன்னேசென்ற எமிலியின் நீலக்கார் வெகுதூரம் போய் விட்டது.

குறுக்குவழியில் நின்ற வாகனங்கள் வீதியைக் கடக்கலாயின. இந்தச் சந்தியில் எப்போதும் பெரும் பாடுதான் என்று அலுத்துக் கொண்டான் சாரதி. எல்லாம் நன்மைக்கே என நினைத்தான் மேன். எமிலி வேளாவேளைக்கு ஹோட்டலுக்குள் போய்ச் சேரட்டும் என்ற அவன் எண்ணமோ - பின்னால் வரும் புறாப் பிடிக்க இவன் மனம் வட்டமிடுவதோ எங்கே சாரதிக்குப் புரியப்போகிறது?

மைக் என்ன மயிரைப் பிடுங்கவா முடியும்? எனக்கு நெக்லஸ் மட்டுமா வேண்டும்? அவளும்தான் என நினைத்தான் மேன்.

சிக்னல் மஞ்சளாக மாறவும் புலட் போலப் பாய ஆணையிட்டான் மேன். இரண்டு கார்களுக்கும் இடைப்பட்ட இடைவெளி அதிகரித்து மேனின் கார் மறைந்து விட்டது.

* * *

ஹோட்டல் முகப்பில் வர்ணமின் விளக்குகள் கோலாகலமாகக் கோலமிட்டுக் கண்சிமிட்டின. வருகின்ற வாகனங்கள் தரிப்பிடத்தை நோக்கி வழி காட்டப்பட - வரவேற்பு ஊழியர்கள் கதவுகளைத் திறந்துவிட - வந்தவர்கள் இறங்கிநடக்கிறார்கள்.

எமிலியின் கார் வரவும் வரவேற்பாளர்கள் அந்தக் கருநீல வண்டை நோக்கி நடக்கிறார்கள். பின்னே வரும் வெண்புறா வந்தடையச் சில நிமிடங்கள் பிடிக்கும்.

புல்மெத்தை பரப்பிய வாகனத் தரிப்பிடத்திலே எல்லைகளை வரையறுக்கும் மலர்ச்செடிகளின் செழுமையும் குளிர்மையும் சொல்லி மாளாது. செழித்த இலையழகும் பூத்தபூவழகும் மின்னொளியில் கண்ணைப் பறித்தன.

வாகனங்களில் வந்தவர்களெல்லாம் சூழலை ரசித்தபடி ஹோட்டலின் வரவேற்புக் கூடத்துக்குள் நுழைந்து கொண்டார்கள். தத்தமது மாடிகளுக்குச் செல்வதற்காக லிப்டைப் பிடிக்கவும் தொடங்கிவிட்டார்கள்.

மேன் காரைத் தரிப்பிடத்தில் விட்டபோது ஹோட்டலின் வரவேற்பாளர்கள் கடமை மாறும் நேரமாகிவிட்டது. அதையொத்த உடைகளில் இறங்கிய அவன் தனது அடியாட்களின் சமிக்ஞைகளை சரிவரப் பெற்றுக்கொண்டு திருப்திப்பட்டான்.

வாகன நுழைவாயிலை அண்டிச் சற்றே மங்கலான வெளிச்சம் கொண்ட இடமொன்றைத் தெரிவு செய்து அவ்விடத்தே நின்றுகொண்டான். கொஞ்சம் தொலைவில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவனும் ஏதோ கடமையில் நிற்கும் ஹோட்டல் ஆள் போலத்தான் தெரிகிறது.

வெண்புறா வாசலில் நுழையவும் அவனது படபடப்பு உச்சமடைந்தது. அவனுக்கு வேண்டிய கணம்நெருங்கி விட்டது. வெற்றியோ உள்ளங்கையில் எட்டப்போகிறது.

அவனது சாரதி காரைத் திசை திருப்பிப் புறப்பட்டுப் பறக்க மீண்டும் தயாராகி விட்டான். எல்லாம் ஓ.கே ஆனதும் அந்தச் சிவப்பு நிறமான பியட் வீதித்தாரைக் கிழித்துக் கொண்டு சிட்டாய்க் கிளம்பிவிடும்.

வெண்புறாவைச் சற்று மேலும் இருளான பகுதியில் தரிப்பிட வழி காட்டினான் மேன். அவனது ஆணைக்குக் கட்டுப்பட்டு அந்த அப்பாவிக்கார் இருளில் வந்து ஓய்ந்தது. அதன் வெளிச்சம் நின்று போனது.

மேனின் கையில் தயாராக இருந்தது அந்த மயக்க மருந்து ஸ்பிரே. அதை மறைத்துப்பிடித்தபடி சாரதிப் பக்க கதவைத்திறந்து வரவேற்பது போலப் பாசாங்கு பண்ணினான் அவன்.

எப்போதும் கரோல்தான் வாகனத்தை ஓட்டுவாள் என்பதை அவன் அறிந்துவைத்திருந்தான். டானியலின் பக்கக் கதவைத் தாமதப்படுத்தித் திறக்கவும் ஆள் ஒழுங்கு செய்திருந்தான்.



இவன் கதவைத் திறக்கவும் சரியாக ஹோட்டல் முழுவதும் இருளில் ஆழ்ந்து போயிற்று. முற்றமும் முற்றிலும் இருண்டு போயிற்று. பவர் கட்! அது மேனின் வேலைதான்.

அவள் ஸ்டெயரிங்கை விட்டு இறங்கவும் ஒருகையால் அவளை அணைத்துப்பிடித்தபடி ஸ்பிரேயை விசிறினான் மேன். அவள்துவண்டு விழவிடாமல் பிடித்தபிடி இருக்க - மறுகையில் இருந்த ஸ்பிரேயை பொக்கெட்டில் வைத்துவிட்டு, அவளது கழுத்தைத் தடவித் துளாவத் தொடங்கினான்.

மேனின் கார் எஞ்சின் உறுமியது. அதன் ஹெட்லைட் வெளிச்சம் போட்டது. சிலகணம் தடைப்பட்ட மின்சாரம் திட்டப்படி மீண்டும் பளிச்சிட்டது.

(தொடரும்)

**திடீர் திருப்பங்கள்!**
**இரத்தத்தை உறையவைக்கும் திகில்!**
**விளங்காத தொழில்நுட்பம்!**
**அதிஉச்ச விறுவிறுப்பு!**
**மேலும் பல நவீன உலக நடப்புகள்...**

## குறள்வெள்ளம்

உனக்கு வல்லமை இருக்கும்; செல்வாக்கு இருக்கும்; சொல்வளம் இருக்கும்; அப்பாவிகளையும் எளிதாகச் சுண்டியிழுக்கும் தந்திரேபாயம் கைவந்த கலையாக இருக்கும்.

எளிதுதான். நினைத்தவளை நினைத்த நேரம் அடைவதோ சுலபம்தான். நவீன உலகில் வரவர வாய்ப்புகளோ மிக மிக அதிகம்தான்.

தனித்திருக்கும் பெண்களும் ஏராளம். தவித்திருக்கும் பெண்களும் தாராளம். ஆடவர் மனதிலோ ஆசைகள் ஆயிரம். பஞ்சும் நெருப்பும் பக்கத்தில் என்றால் படிப்பினைகள் பொசுங்கிவிடும்.

இதனால் பிறப்பது காதலாகாது; சாதலின் கொடிய மனஅழுத்தமே பிறக்கும். உலகோர் காதிலே நீ பூ சுற்ற முடியாது. அவர்கள் கண்களிநின்றும் தப்பிவிடல் இயலாது.

எஞ்சுவதோ பழிதான்; உலகம் உள்ளவரை அழியாப்பழி; குடும்பத்தைக் கெடுத்த பழி; குழந்தைகளை அலைத்த பழி; இல்லறத்தைக் கொல்லிய பழி.

இந்தப்பழி என்றும் அழியாது - எஞ்ஞான்றும் விளியாது நிற்கும். அகலிகையிடம் வந்த இந்திரன் போல் உன் வரலாறும் எழுதப்படும்.

எனவே எளிதென்று - சுலபம் என்று கண்டு - அடுத்தவனுக்குரியவளிடம் ஆசை வைத்து அலையக்கூடாது.

**எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ்**
**- ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி** - 0145

- பிறனில்விழையாமை -

- *அம்பிகைபாகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்

பழைய நூற்றாண்டு விடைபெற்று
புதிய நூற்றாண்டு ஜனனித்தாலும்,
மறுபக்கத்தில் மலையேறிவிட்ட
மர்ம சாகசங்கள் - என்றும்
மரணிக்கப் போவதில்லை....!

- சா. இரஞ்சினி -
மட்டுவில் வடக்கு.

புதிய நூற்றாண்டாம்
அதன் முன்னே
தேர்தலும் வருகிறதாம்?
அப்பாவிப் பொதுமகன் நான்
'மப்போடு' கேட்கவில்லை.
யுத்தம் தந்த என் - இந்த
மொத்தச் சின்னங்கள்
இவை எவற்றாலும் மறைந்திடுமா...?

- சௌஜன்யா -

இனிவரும் நூற்றாண்டில்
இப்படித்தான் மனிதம்.
பொய்(க்) காலில் கையூன்றி
புதைந்து சுருண்ட வயிற்றோடு
ஆப்பிழுத்த குரங்காக
அங்காந்து பார்த்தபடி...
இப்படித்தான் மனித(மு)ம்
இனிவரும் நூற்றாண்டில்...!

- சைதன்யனி -

மௌன ராத்திரியின்
ரகசியக் கனவுகளாய்
இவர்களின் உள்ளங்கள்
அழுதுகொண்டிருக்கின்றன...
உள்ளத்தில் ஊனமற்ற
இவர்களையும் பேசவிடுங்கள்;
இனிதாய் வாழவிடுங்கள்!

- எம். சுயர்சன் -
கோண்டாவில்.

ஆண்டு பிறப்பினிலே
ஆண்டியாய் இருக்கின்றாய்...
கால்களை இழந்த பின்பு
கல்வாரி படிப்பது ஏன்?
எழுந்து நடை போடு!
ஏந்தி விடை தேடு!!

- ஜெ.டிமெல் -
துறையூர்.

விஞ்ஞானம் வளர்ந்தது
அஞ் 'ஞானம்' அகன்றது
மாடிகள் உயர்ந்தன
மனிதங்கள் குறுகின
வேர்களும் அறுந்தன
விழுதுகள் கருகின
ஒன்று மட்டும் உண்மை
'கைத்தடி' உள்ள மட்டும்
என்னுயிர் பிரியாது?!

- சுதன் -

மலரப்போகும் புதிய ஆண்டும்
மறு அரசும் வந்தென்ன
எங்களின் நிலையோ....
எம் தேசத்தின் விடியலுக்காய்
அங்கங்களை இழந்து
அங்கவீனர் ஆனாலும்
ஊன்றுகோலைக் காலாக்கி
ஊறுதியோடு எதிர்பார்க்கிறேன்.
என் புதிய தேசத்தை!

- முல்லைப் பிரியா

தன் மகனைத் தொலைத்திட்ட
தாயுள்ளம்...
ஆலயத்துள் அழிபட்ட
ஆருயிர்கள்...
பட்டினியால் பரிதவிக்கும்
பாலகர்கள் - இவைவிட
புத்தாயிரம் ஆண்டென்ன
புகுத்திவிடப் போகிறது - புதிதாக!

- கோபி -
நெல்லியடி.

தேர்தல்
திகதிகளை
எண்ணிக்கொண்டிராதே!
வாக்குறுதிகளைக் கேட்டு
வாய் பிளக்காதே!
உன் -
ஒட்டிய வயிறும்,
உடைந்த கால்களும்,
இழந்த உன் கையும்...
இவைதான் உன் நிரந்தரம்!

- சகி -

புலரவிருக்கும் புத்தாயிரமாண்டில்
மலரவிருக்கும் புது ஜீவனே!
உண்மையை மறந்து
பெண்மையைக் கொல்லும்
வஞ்சகர் வாழும் ~ எம்
வளமான தேசமதில்...
நெஞ்சத்தில் உறுதியோடு
பெண்மையின் பெருமையை
உணர்ந்த உத்தமியாய்
உலகம் நோக்கிய
உன் உன்னத பயணம்
உறக்கமின்றித் தொடரட்டும்.

-எஸ். கௌசி
கோவையூர்.

இருபதாம் நுற்றாண்டை முடித்து,
இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி
எடுத்து வைக்கக் காத்திருக்கும் மனிதா!
நீ எடுத்து வைப்பது காலடி அல்ல;
கொடிய அரக்கரின் சதிச்செயலால் நீ
இழந்த காலுக்கு ஒப்பாக நீ எடுத்து வைப்பது
மிண்டுகோல்!

- த. பூஜி -
கரவெட்டி.

முடிவடையும் மிலேனியத்திலும்
முடிவடையாத யுத்தம்!
ஊனங்களை ஊரூராய் விதைத்து
புது நூற்றாண்டாண்டுக்குள்ளும் பாய்வதால்
பிறப்புக்கள் இனி – ஊன்றுகோல்களுடன்
பிறக்கட்டும்!

- அல்வை சிவா -

விடம் கட்டியவன்
விடுதலை பெறுவான்!
நடக்கும் நூற்றாண்டில்
படைச்சது புதுமைகள்!
தொடரவிருக்கும் நூற்றாண்டிலும்
கொடாக் கண்டர்களினால்
போர் தொடரின்...!
சுடலையில் புதைக்கும்
உடல்களின்
தடந்தான் மிஞ்சும்!!
வளையாத மனங்களின்
நினைவுச் சின்னமிது!
ஊன்று கோலாக
எமக்கு உதவலாம்!

- மாருதி -
ஆவரங்கால்.

புத்தாண்டு புலர்கையில்
புதிய கண்டுபிடிப்புகளுக்காக
உலகம் காத்திருக்கிறது.
நம் நாட்டில்!
புதைகுழிகளைக் கண்டுபிடிப்போம்!

- கனகராயனுாரான் -



மிலேனியத்தை
வரவேற்க அகிலம்
தயாராகையில்
'இடுக்குத் தடி'
தேடுகிறான் ~ இவன்
'கண்ணி' விதைத்த
மண்ணில்
பிறந்தவன் ~ இவன்!

- மோஷா -

இழப்புகள் எல்லாம்
இருபதுடன் முடியும் - என்று
இனியதாய் கனவுகள்...?
திக்கெட்டும் இணைந்து
"திசை ஒன்று" என்றாலும்
தீராது தொடரும்
இனவெறி இம்சைகள்!
இருபத்தொன்றுக்கும்
இரையாக்கும் தமிழனை - என்று
இலகுவில் எடுத்துரைக்கும்
எளியதொரு 'சின்னம்' இது.

-க.வாணி-
கச்சாய்.

மின்னிடும் தங்கம் போல்
தரத்தினில் குறையாதவர்களை
அங்கம் இழந்தாலும்
அன்பு குறையாதவர்களை
புறம் தள்ளி வைக்காதீர்கள்
அவர்களுக்கும் - ஒரு
சந்தர்ப்பம் அளியுங்கள்
நாளைய மிலேனியத்தை
வென்று தருவார்கள்!

- எம். பிருந்தா -
கோண்டாவில்.

"நீ" உடலாலும் உள்ளத்தாலும் - மட்டும்
ஊனமாகவில்லை!...
உனது உரிமைகளினாலும் ஊனமாகியுள்ளாய்!...
உனது பிறப்பு ஊனமானது அல்ல - அது
ஊனமாக்கப்பட்டது!

- சு. கோபி -
வதிரி.

## மௌனமொழி - 65



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. வரைந்தவர் மானியூர் ரட்ணேஸ்.

புத்தாயிரத்தின்
பூபாளம் பாடும்
இவ்வேளையில்
பழையதை 'இரைமீட்கும்'
'அரிய' சந்தர்ப்பம்
எனக்கு மட்டுமே!

- ரவி -

இராணுவத் தொப்பியினுள்
இரட்டை முகம் தெரிகிறது.
இருபதாம் நூற்றாண்டின்
இனிய இலட்சினைகளாக,
மண்டையோடுகளும் ஊன்றுகோல்களுமே
புதிய புத்தாயிரமாமாண்டில்
புதுமைகள் பல நிறைந்து
புதுத்தேசம் உருவாகும்.
அந்நாள் வெகுதூரமில்லை!

- சண்டியூர் சங்கர் -

என் விழுதுகள்
என்னைத் தாங்கமறந்து
விருட்சங்களாகி....
விண்ணை நோக்கும் போது
ஊன்றுகோலின் உதவியுடன்
'மிலேனியத்தை'
எதிர்கொள்ளும் - எனது
முகாரி உங்கள்
செவிகளுக்கு கேட்கிறதா?

-ப. பிறேமலதா-

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலே
"வெற்றி உறுதி" யின் தோல்வியினால்
மனமுடைந்த யுத்தமாமா
கைத்தடியுடன் கண்டிவீதியில்
சஞ்சீவிக்கு 'போஸ்" கொடுக்கிறாரோ?

- ஷோபா -
உசனூர்.

போகிறாள் பார்!
போர் தந்த வடுக்களுடன்
இருபதாம் நூற்றாண்டுக் கிழவி...
இடுகாடு நோக்கி...
புதிய நூற்றாண்டுக்
குழந்தையே வா...குதுகலமாய்.
ஆசியாவுக்குன் ஆசியைக் கூறு!
கணனியும் ஆங்கிலமும் - உன்
கட்டாயக் கணவர்களாம்...
என்னவோ...எப்படியோ...
என்புக் குவியல் போதும் - இனி
அன்புக் குளிரே வேண்டும்!

- இ.ஜெயக்குமார் -

மனிதா!
இயற்கையாலும் மேலாக
எனக்கு இடர் தந்தாய்...
மலரும் புதிய நூற்றாண்டை
மகிழ்வுடன் வரவேற்க முடியுமா?

-சி. இன்பராஜ்-
மீசாலை மேற்கு.

ஊனங்களைப் பிரசவித்த
ஈனக்காலம்
இத்தோடு ஒழியட்டும்.
அடங்கா மனிதா ~ இந்த
முடங்களின் முகம்பார்!
விடங்களைக் கக்கியதுபோதும்
தடங்கலை நீக்கத் தயாராகு
இனிவரும் நூற்றாண்டில்
இனிமை சேரட்டும்.

- மானியூர் ரட்ணேஸ் -

இருபதாம் நூற்றாண்டில் இழந்தவற்றை - நீ
இருபத்தியோராம் ஆண்டில் பெறலாம் என நினைக்காதே!....
இருப்பதற்கு ஓர் தனியிடம் கிடைக்கும் வரை - என்றுமே
இடம் பெயருகின்ற 'நொண்டியன்' தான்!

- சு. சுதர்சன் -
வதிரி.

அடி உதவுவது போல்....
அண்ணன் தம்பி உதவமாட்டார்
தடி உதவுவது போல...
தன் பிள்ளை தாங்க மாட்டார்
முதுமைப் பருவத்தில் நான் கண்ட
அனுபவ உண்மை இது!

- ந. அர்சனா -
சங்கத்தானை.

சிங்கத்தின் வாளினால்
சேதமானதென் உறுப்புக்கள்
இனிவரும் நூறினில்
எஞ்சிய உறுப்புக்களாவது
காக்கப்படுமா?
அல்லது
அவற்றுடன்
சிரமும் சேர்த்துச்
சேதப்படுத்தப்படுமா...?

- இராஜகிருபன் -
அல்வாய்.

விதை விதைத்தவன்
விளைவு பெற்றான்...
வினை விதைத்தவன்
வினை அறுக்கிறான்

- சிகரன் -

அட அடுத்த நூற்றாண்டு!
இனியாவது
ஊர் செல்வோமா...?
ஊனமாகிப் போன எம் வாழ்வு
விடிவு பெறுமா?

- ந. சிறீதரன் -
கிளிநொச்சி.

கையிழந்தேன்;
காலிழந்தேன்;
பல்லிழந்தேன்;
சொல்லிழந்தேன்;
உணவோடு
உடையுமிழந்தேன்;
இதோ ஓர் விடியல் - என
இழக்க விரும்பாத நம்பிக்கையுடன்
நான்!

- கி.ஜெனி:.பர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சந். | வியா. சனி | | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| செவ். கே | | | |
| சூ | புத. | வெ | |

# இந்த வார இராசி பலன்

**18 - 12 - 1999 இலிருந்து 24 - 12 - 1999 வரை**

மாற்றம்: 18-12-99 இல் ரேவதி 4 ஆம் பாதம் - சந்திரன் மீனம் இராசியில் நிற்கும்.

23-12-1999 இல் கும்பம் - இராசியில் செவ்வாய் மாறும்.

23-12-1999 இல் தனுசு இராசியில் புதன் மாறும்.

அரசியல் தேர்தலால் பதற்றநிலை ஏற்பட்டபடி இருக்கும். எதிர்த் தரப்பு செல்வாக்குப் பெற்றாலும், பழையபடி முன்னைய அரசு உறுதிநிலை அடையும். அரசியல்வாதிகளின் ஏமாற்று வார்த்தைகளுக்கு மக்கள் எடுபட மாட்டார்கள். வோட்டு கேட்டுப் பெறுவதில்லை என மக்கள் சிந்தித்தாலும் திருமதி சந்திரிக்காவின் செல்வாக்கு தொடர்ந்து இருக்கும். மாணவர்கள், தொழிலாளர்களின் உரிமைக் குரல்கள் கேட்டபடி இருக்கும். இந்தியாவின் சாணக்கியத் தன்மையால் அயல்நாடுகளில் அழுத்தங்கள் ஏற்படலாம். உலகில் வடமேற்கு, மத்தி-கிழக்கு நாடுகளில் அணுஆயுதப் பயமுறுத்தல்கள், இயற்கை, செயற்கை அழிவுகள் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

## மேடம்

உண்மை வேறு: சட்டம் வேறு. சட்டத்தால் மட்டும் உண்மைகளை அறியவோ - அடையவோ முடியாது. நீங்கள் சட்டதிட்டங்களுடன் வாழத்தான் முயற்சிப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் குழந்தைப்பிள்ளைத்தனமாக

# மகாதேவா ஜோதிடம்

நடந்து ஏமாற்றப்படுவீர்கள். நம்பிய சிலருடன் பகைமை ஏற்படும். அடிக்கடி அலைச்சல், குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் வாக்குக்கலகம், வீண் பயம் என்பன ஏற்படும். சளி, வாய்வு, கைகாலில் கடிகள், ஆயுதபயம், விஷபீடை என்பன ஏற்படலாம். மருந்துத்துறை, வியாபாரம், பத்திரிகை, அச்சுத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் இலாபங்கள் அடைவார்கள். எதிர்பாராத பிரச்சினைகள், கௌரவக்குறைவான சம்பவங்கள் என்பன ஏற்பட இடம்உண்டு. தனிவழியில் போகிறவர்கள் ஏன் மற்றவர்களைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டும்?

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## இடபம்

மார்கழி மாதம் தெய்வீகமாதமாகும். இந்துக்களுக்கு திருவெம்பாவையும், கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்மஸூம் வரும் காலமாகும். இறைவனின் ஒளி, ஒலி பூவுலகத்திற்கு அதிவேகத்துடன் பரவும் காலமென்று கூட நாம் சொல்லலாம். எனவே நல்லதை தொழில் பீடத்தில் செய்து இலாபங்களை அடைய முயற்சி எடுங்கள். தன்நம்பிக்கையுடன் தொழிற்படுங்கள். விரயம் வந்து சோகம் தொடரலாம். பிரயாணம் செலவுகள் அதிகரிக்கும் எதிர்பாலாருடன் கலகம், அலைச்சல், பலவீனம், படபடப்பு, வாய்வுத்தொல்லை என்பன ஏற்படும். கண்ணில் கலக்கம் வரலாம். நீதித்துறை, குருத்துறை, பிரயாணத்துறை, விவசாயத்துறை சம்பந்தமானவர்கள் இலாபங்கள் அடைவார்கள். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## மிதுனம்

கொம்பியூட்டரில் திருமணப் பொருத்தம் பார்ப்பதில் தவறில்லை. ஆனால் ஒரு குறிப்பு - 4இல் செவ்வாய் உள்ள குறிப்புக்கு - ஆண்,பெண் இருவருக்கும் பொருத்தம் என குறித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தகுதிவாய்ந்த சோதிடரிடம் காட்டி முடிவு எடுக்கும்படி ஆலோசனை கூறப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த சோதிடர் - பொருந்தவில்லை என முடிவு சொல்லுகிறார். அதனால் செலவு முன்னூறுக்கு மேல் எனக் கலங்கினார் ஒருவர். 2000 ஆம் ஆண்டில் கொம்பியூட்டரே கலங்கப் போகிறது என்பதை எவரும் மறக்கக்கூடாது. எதிர்பாலாரின் ஆதரவு, இழந்தபொருள் வரவு, வாகனம், வீடு, நிலம் செலவுகள் அதிகரிக்கும். வாய்வு, அடிகாயம், வயிறு - நெஞ்சு எரிவு, விஷபீடைகள், ஆயுதபயம் என்பன ஏற்படலாம். வியாபாரத்துறை, சட்டத்துறை, ஆசிரியத்துறை போன்ற தொடர்புடையவர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## கடகம்

பெற்றவர்கள் பிள்ளைகளை நடுவீதியில் விட்டுவிட்டால் அதற்கு பிள்ளை என்ன செய்யமுடியும்? ஆனால் ஆண்டவன்எவரையும் தவிக்க விடமாட்டார். கூட இருப்பவர்கள் தவிக்க விடமாட்டார்கள் என நம்பமுடியாது. தொழில் ஸ்தானத்தில் கூட இருப்பவர்களால் காட்டிக்கொடுக்கப் படுவீர்கள். அடிக்கடி பயம், மனச்சோர்வுகள் ஏற்ப்டும், வாய்வுத்தொல்லை, கைகால் விறைப்பு, அடி வயிற்றுநோ என்பன ஏற்படும். செய்தித்துறை, வாகனத்துறை, இரும்புவேலை, விவசாயத்துறை, அரசியல் துறையினர்கள் அதிக இலாபங்களும் மாற்றங்களும் அடைவார்கள். கவலைகளை மறக்க குடும்பத்தினருடன் கலகலப்பாக இருங்கள். யாத்திரைகளை பின் தள்ளிப் போடுங்கள். ஆசிரியத்துறை, செய்தித்துறை, ரீவித்துறையினருக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்நாள்:- சனி, புதன்.*

## சிங்கம்

ஒன்றுக்கு ஒன்று இரையாகவும், ஒன்றுக்குள் ஒன்று அடக்கமாகவும், ஒடுங்கியும், விரிந்தும் உலக அமைப்பு உள்ளது. மனிதர்கள் ஓர் எல்லைக்கு அப்பால் போகவோ - உணரவோ முடியாது. இந்த நியதிகளுக்கு ஏற்ப எமது தொழில் நிலைப்பாட்டை அமைத்துக் கொள்ளவேண்டும். இதை அறிந்து செயற்படுவீர்கள். உஷ்ணவியாதிகள், படபடப்பு, வாய்வுத் தொல்லை, முதுகுவலி என்பன ஏற்படச்செய்யும். மின்சாரத்துறை, மருத்துவத்துறை, ஆசிரியத்துறை, விவசாயத்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள். அதிக மாற்றங்களை எதிர்பார்க்க முடியாவிட்டாலும் நன்மையான பலன்களை ஓரளவு எதிர்பார்க்கலாம்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன்.*

## கன்னி

மனிதர்கள் பிற மனிதர்கள் செய்யும் சிலசெயற்பாடுகளால் ஆத்திரம் கொள்ளுவது இயற்கைதான். ஆயினும் பொறுமையுடன் சமாளித்து செயற்பட்டு வெற்றி கொள்வதிலேதான் உங்களின் உண்மைத்தன்மை வெளிப்படுகின்றது. உங்கள் உண்மைத் தன்மையை உங்கள் தொழில் ஸ்தானத்தில் காட்டுங்கள். இலாபங்கள் அதிகரிக்கும். அதிக பிரயாணம்செய்து நல்லவற்றைச் செய்வீர்கள். கைகால்வலி, வாய்வுத்தொல்லை, வயிற்றுவலி, தலைவலி என்பன வந்து தொல்லை தரும். எதையும் தியாகம் செய்து வாழும் நிலையில் உங்கள் வாழ்வு அமையும். பழைய பாக்கிகள் வர வாய்ப்புக்கள் ஏற்படும். கிரக தோஷத்திற்கு பிரீதி செய்யுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன்.*

## துலாம்

உள்ளத்தில் நல்ல உள்ளம் கொண்ட நீங்கள் எதையும் சீர்தூக்கிப் பாப்பீர்கள். ஆனால் எவரும் உங்களை இலேசில் முகஸ்துதி செலுத்தி நன்மை பெறமுடியாது. தொழில் ஸ்தானத்தில் கருத்தறிந்து, அளவறிந்து செயற்படுவீர். இடமாற்றங்கள் ஏற்படும். பொருள் தவறுதல், உரசல்காயங்கள் வரலாம். புதிய பொறுப்புக்கள், புதிய நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.. சளி, வாய்வுத்தொல்லை, தலைவலி, வயிற்றுக்கோளாறு என்று வரலாம். நகைவியாபாரம், மருந்துத்துறை,குருத்துறையினர், ரீவி, சினிமாத் துறையினர், பத்திரிகை செய்தித்துறையினருக்கு மாற்றங்களும், நன்மைகளும் கொடுக்கும். பொருள் விஷயங்களில் கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, புதன.*

## விருச்சிகம்

தெய்வீக அருள், சக்தி பெற்ற யேசு போன்ற புனிதமானவர்களால் தான் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியும் என்பதல்ல. மனிதகுலத்தவர்கள் ஒருவரை ஒருவர் மன்னித்து, மதித்து நடக்கவேண்டும் என்பதையும் அவர் போதனைகளிலிருந்து அறிய முடிகின்றது. நீங்களும் தொழில் ஸ்தானத்தில் ஏற்படும் தில்லுமுல்லுகளைப் பெரிதுபடுத்தாது பொறுமையாக இருக்கவும். மேலதிகாரிகள் உதவிசெய்வார்கள். பொருள் தவறலாம். உரசல் காயங்கள் வரலாம். உடல்நிலையில் கவனமாக இருக்கவும்.அடிவயிறுநோ,வாய்வுத்தொல்லை, குளிர், உஷ்ணபீடைகள் கொடுக்கும்.

# சோதிட சஞ்சீவி

விவசாயம், தோட்டக்கோயில் போன்ற துறையினர்,சட்டத்துறையினர், இரும்பு, நிர்வாகத்துறையினர் நன்மைகள் அடைவார்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, புதன்.*

## தனுசு

எந்த ஒரு சமயத்தவர்களையும் - மற்றய சமயத்தவர்கள் மதித்து, கௌரவித்து நடக்கவேண்டும். அதனால்தான் நாம் அன்பு நிறைந்த பண்பாளர்களாக இருக்கமுடியும். போட்டிகள் வாழ்வில் தொழில் ஸ்தானத்தில் வரச் செய்யும். நிதானமாக நடந்து கொள்ளவும். எதிர்ப்பாலார் எதிர்ப்பார்கள். பாசத்தவர்கள் நேசமாக உதவி செய்வார்கள். காணி, வீடு அல்லது வாகனசுகம், செலவும் மாறி மாறிக் கொடுக்கும். எதிர்ப்புவந்தால் சமாளித்து வெற்றி அடைவீர்கள். வயிற்றுக்கோளாறு, நடுக்கம், குளிர் காய்ச்சல், படபடப்பு, வாய்வுத் தொல்லை, சளி என்பன வரலாம். எண்ணெய்த் துறை, சட்டத்துறை, பத்திரிகைத் துறை, குருத்துறை சம்பந்தமானவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, புதன்.*

## மகரம்

அதிகம் கதைப்பவர்களும், அதிகம் எப்பொருளையும் செலவு செய்பவர்களும் தம்மைத்தாமே அழித்துக் கொள்ளுகின்றார்கள். இதைத் தொழில் ஸ்தானத்தில் அவதானிப்பீர்கள். ஊக்கத்தால் உயர்வு பெறுவீர்கள். கல்வி, தொழில் துறையில் கவனமாகவும் ஊக்கமாகவும் இருந்தால் வெற்றி வருங்காலத்தில் கிடைக்கும். மந்திர, தந்திரம் தெரிந்தவர்களுடன் பழகாதீர்கள். இறைபக்தியானவர்களுடன் பழகினால் நன்மை கிடைக்கலாம். பொருள் செலவு அதிகரிக்கும். நரம்புப்பிடிப்பு, மனக்கவலை, சளி, வாய்வுத்தொல்லை என்பன வருத்தலாம். செய்தித்துறை பத்திரிகைத்துறை, போன்ற துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி.*

## கும்பம்

தோட்டத்துப் பூவைப் பறிப்பது போல வோட்டுக்களைப் பறித்துக் கொடுப்பதற்கு மக்களிடம் மனமிருந்தால் நாட்டிலும் சரி - வீட்டிலும் சரி சமாதானம் தானாக வரும். ஆனால் பொருள்களில் இமிற்ரேஷன், தரம், மினுக்கம், விலைஏற்றம் எல்லாம் ஒரு கலக்கம். உலக வேகத்தின் விளைவுகளுக்கு மனிதர்களின் சக்தி கலக்கமுற்று தன்னை அழித்துக்கொள்கின்றது. எதற்கும் அதிகம் யோசித்துத் திட்டமிட்டு, ஊன்றி அத்திவாரம் இட்டிருக்கும் உங்களை தொழில் ஸ்தானத்திலிருந்து எவரும் அசைத்து விட முடியாது. வெளிநாட்டுச் செய்தி, பணவரவு, எதிர்பாலாருடன் கலகம், வீட்டுச் செலவுகள் எனக் கொடுக்கும். சளி, நரம்புச் சோர்வு, நாரி, வயிற்றுநோ, நெஞ்சுப் படபடப்பு என்பன கொடுக்கும். பிரயாணத்துறை, விவசாயத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை, சட்டத்துறை போன்றவர்களுக்கு பல நன்மையான பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி*

## மீனம்

முன்னுக்குப் போகிறவர்கள் பின்னுக்கும் - பின்னுக்கும் போகிறவாக்ள் முன்னுக்கும் மாறிமாறிச் செல்வது இயற்கை விதி என்ற வரம்பிற்கு உட்பட்டே நடக்கின்றது. உலகெங்கும் சாப்பாட்டுப் பொருள்களில் கலப்படம் கூடி நாம் நச்சு உலக சக்திக்குள் எம்மை இரையாக்கிக்கொள்ளும் அவலநிலை ஏற்பட்டபடி இருக்கின்றது. இதையறிந்து உங்கள் தொழில் ஸ்தானத்தில் நல்லதைச் செய்வீர்கள். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். தொழில் கிடைக்கும். குடும்பத்தில் பொருள் ஒன்றினால் கலக்கம் சிலருக்கு ஏற்படலாம். சளி, நரம்பு வருத்தம், கை கால் விறைப்பு, வாய்வுத் தொல்லை, நெஞ்சுப் படபடப்பு, முட்டு என்பன கொடுக்கும். குரு, ரீவி, செய்தி, பத்திரிகைத்துறை, விவசாய, வியாபாரத்துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இடமாற்றங்களால் இழப்புக்களைச் சந்திக்க வேண்டி நேரிடலாம். வீண் பிரச்சினைகளை விலக்கி நடக்கப் பாருங்கள். சனீஸ்வரன் - ஏழரைச் சனியாகப் பலன் செய்வதனால் 'கம்பு கொடுத்து அடிவாங்கும் நிலை' சிலருக்கு ஏற்படலாம்.

*அதிர்ஷ்டநாள்: சனி.*

---

# என் பிரிய பூமிக்காக...

**விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்**

**ச.குமுதினி**
(சங்கத்தானை)

**4**

சிசிலியாவால் யூலியனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தான் வரும் போது அரை மயக்கம் போல நிலத்தில் கிடந்தவன், பிறகு ஆழ்ந்த தூக்கத்தில் அமிழ்ந்திருந்தவன் இப்போது தூங்கியதையே அறியாதவனாய்ச் சொல்கிறானே? அவள் அவன் உணர்வுகளை அறிய விரும்பி உற்று நோக்கினாள்.

அந்த விழிகளும், பால் வடியும் வதனத்தில் பரவியிருந்த உணர்வுகளும் பொய்யாக இருக்கமுடியாது. அவளின் இயல்பான ஆற்றல்களும் அறிவும் அவளை வேறுதுறையில் ஈடுபடுத்தியிருந்தாலும் அவள் இந்தக் கற்பித்தல் பணியினுள் தற்காலிகமாக வேனும் ஈடுபட விரும்பியிருந்தமைக்குக் காரணமே சின்னஞ்சிறுவர்களின் இத்தகைய தூய இயல்புகள் அவளைக் கவர்ந்திருந்தமையே.

அவன் தூக்கத்தில் உரையாடியதைப்பற்றிக் கேட்க நினைத்தவள் சட்டெனத் தன் எண்ணங்களை மாற்றிக் கொண்டாள்.

"இல்லை யூலி... நான் வரும்போது நீ தூங்கிக் கொண்டிருந்தாய்... அதனாலென்ன... சிறுவர்கள் அதிகம் தூங்குவது இயல்புதானே" மென்மையான குரலில் சொன்னாள் சிசிலியா.

"இல்லை... நான்... எனக்குத் தூக்கம் வரவில்லை. இதில் நின்று பூக்களைப் பறித்துக்கொண்டிருந்தேன்... பிறகு... பிறகு..."

தான் சொல்வதைச் சிசிலியா நம்ப வேண்டுமே என்ற ஏக்கம் அவனில் படர்ந்திருந்தது அவன் விழிகளில் தெரிந்தது. கண்களைத் தாழ்த்திக் கொண்டு மௌனமாய் நின்றான் யூலியன்.



"பிறகு... பிறகு என்ன நடந்தது யூலி..."

"....."

"தூக்கம் வர உன்னையறியாமல் நீ தூங்கிவிட்டாய் போல..."

"இல்லை... நான் உட்கார்ந்திருந்தேன். பிறகு தூங்கிவிட்டேனா...? அப்படித்தான் இருக்கவேண்டும்..."

விழிகளை மூடிக் கைகளால் தலையைத் தாங்கியபடி நிலத்தில் உட்கார்ந்தான் நிற்க இயலாதவன் போல. முகம் இரத்தமாயச் சிவந்துவிட்டிருந்தது. சுருளான கேசம் நெற்றியெங்கும் அலையுண்டு இருந்தது.

மேலும் அவன் துன்பப்படுவதைக் காணச் சகிக்காமல் அவனை ஆதரவாய் அணைத்தபடி அவன் தலையை வருடினாள் சிசிலியா. அவன் சேகரித்துவைத்த பூக்களைக் கையில் எடுத்தாள்.

"என்ன அழகான பூக்கள்... என் யூலி... உன்னைப்போல... அருமையான பூக்கள்..."

யூலியனின் கண்களில் குழப்பம் நீங்கி குழந்தைத்தனமான மகிழ்வு தெறித்தது.

"உங்களுக்காகத்தான் சேகரித்தேன்... அதோ... அங்கெல்லாம் சென்று உங்களுக்காய்ச் சேகரித்தேன்..." குரலில் பெருமிதம் வழிந்தது.

"நன்றி யூலியன்... நன்றி என் சிறுவனே.. எனக்காக எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறாய்... வா... அந்தப் பொய்கையிலுள்ள மீன்களுக்கு உணவு போட்டு வருவோம்..."

எழுந்து அவன் சின்னக்கரங்களைப் பற்றியபடி மெல்ல நடந்தாள் சிசிலியா. உள்ளே விடை தெரியாமல் எழுந்த குழப்பங்களை வெளிக்காட்டாமல் மௌனமாய் நடந்தாள்.

'என்ன நேர்ந்து விட்டது யூலியனுக்கு...?'

பூதாகாரமாய் நெஞ்சினுள் கேள்வி எழுந்தது.

நீண்ட தன் நீலநிறமான நீளக் கால்சராயை இழுத்துச் சீராக்கிய படி உற்சாகமாய்த் துள்ளி நடந்தான் யூலியன். சற்று முன்னே நடந்த எல்லாவற்றையும் முற்றாய் மறந்துவிட்டது போலிருந்தது அவன் செய்கை. அவர்கள் பொய்கையை அண்மித்திருந்தார்கள்.

அவள் கைகளைப் பற்றியவாறே அவள் முகத்தை அண்ணாந்து பார்த்துக்கூறினான் அவன்.

"என்ன அழகான மீன்கள்...! ஆனாலும் எனக்குப் பொன்னிறமான மீன்களைத்தான் பிடிக்கும்... சின்னக் கறுப்புநிறக் கண்கள் அவைகளுக்கு..."

அவன் குரலில் உற்சாகம் அவள் பதிலை எதிர்பார்த்திருப்பதை அவள் புரிந்து கொண்டாள்.

"ஆம் யூலி...எனக்கும்தான்... என்ன அழகான கண்கள் அவைகளுக்கு..."

யூலியனின் செயல்களில் அவன் மகிழ்ச்சி தெரிந்தது. மீன்களைப் பற்றிச் சொன்னவுடன் மகிழ்கின்ற இந்த யூலியன்தானா சற்றுமுன் மர்மங்கள் நிரம்பியவனாய்க் காட்சியளித்தவன்... அவளால் நம்புவதற்குக் கடினமாயிருந்தது.

'வெண்பஞ்சு போன்ற அவன் சின்னக்கரங்களைப் போலவே மென்மையானது யூலியனின் உள்ளமும்' அவள் தன்னுள் சொல்லிக்கொண்டாள். ஆனால் அடுத்தகணமே தரையில் கிடந்த யூலியனின் தோற்றமும் செயல்களும் கண்களுள் தோன்ற எதுவும் யோசிக்க முடியாமல் குழம்பி நின்றாள்.

யூலியன் மீன்களுக்கு உணவு போட்டுக்கொண்டிருந்தான். சிசிலியா அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள். பளிங்கு முகத்தில் களங்கமற்ற குழந்தையுள்ளம் பிரதிபலிக்க விளையாடுகின்ற இந்தச் சிறுவனிடம் புதைந்துகிடக்கும் மர்மம் என்ன? இவன் சாதாரணச் சிறுவன் என்பது மட்டும் உண்மையல்ல.

எட்னா கூறியதும்உண்மையாகவே இருக்கவேண்டும். எட்னா அவனைப் பற்றிச் சொன்னபொழுது சிசிலியாவால் அவளை நம்பமுடியவில்லை. ஆனால், இப்போது... நம்பித்தானாகவேண்டிய நிலைமை. அவ்வாறெனின், எட்னா சொன்னவை பற்றி யூலியனிடத்தில் நேரடியாகக் கேட்பதே சரியானது. இல்லாவிட்டால் சிலவேளைகளில் பூமிக்கிரகத்துக்கே தீங்கு விளைவிப்பதற்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய் காட்டும் பெண்ணை திருமணம் செய்யலாமா?

**கொட்டடி. கபிலன்.**
ஆவலுக்குக் காவல் போடலாமா?
☺**காவல் இல்லாத ஆவல் - அணையில்லாத ஆறு. பெருக்கெடுத்தால் ஆபத்து!**

❀ ❀ ❀

**பளை. வேலு.**
என் மனைவி கோபம் வரும்போது 'வீட்டை விட்டு வெளியே போ' என்கிறாளே!



☺**சுதந்திரம் தானாகக் கிடைத்தால் பெற்று மகிழ வேண்டியதுதானே?**

❀ ❀ ❀

**ஆவரங்கால். கணா.**
எனக்குத் திருமணப் பதிவு முடிந்துவிட்டது. உறவினர் ஒருவர் எனது திருமணத்தைக் குழப்புவதற்கு முயற்சிக்கின்றார். அச்சமாக உள்ளதே?
☺**அஞ்சாதீர்கள். உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?**

❀ ❀ ❀

**தட்டாதெரு. சுமதி.**
எனது குழந்தையின் பல்ன் எனக்குக் கூடாது என்கின்றாரே சோதிடர்?
☺**எய்தவன் இருக்க அம்பை நோகலாமா?**

❀ ❀ ❀

**விளான். சசி.**
மருந்து இல்லாத நோய் எது?
☺**எத்தனையோ நோய்கள் இருக்கின்றனவே. அந்த வகை கொடிய நோய்களில் ஒன்றுதான் 'ராகிங்'.**

❀ ❀ ❀

**அச்சுவேலி. ராஜ்.**
'வீட்டைக் கட்டிப்பார்; கலியாணத்தைக் கட்டிப்பார்' என்கின்றார்களே! எதற்காக?
☺**இரண்டும் கட்டுவது சுலபம். ஆனால் பராமரிப்பது கஷ்டம் என்பதாலோ?**

❀ ❀ ❀

**இளவாலை. செல்வம்.**
சீதனம் கேட்பவர்கள் கூட, கூடவே அழகும் எதிர்பார்க்கின்றார்களே?

# சந்திரிகா - முஷாரப் இருவரையும் ஒப்பிடுக!

☺**சீதனம் பூட்டிவைப்பதற்கு; அழகு கூட்டிச் செல்வதற்கு.**

❀ ❀ ❀

**அராலி. கோகலே.**
பஞ்சாங்கம் பார்த்துச் செய்த திருமணமும் குழம்புகின்றதே?
☺**பஞ்சாங்கம் என்ன செய்யும் பாவம். பிரதான அங்கமே பொருந்தாதபோது...?**

❀ ❀ ❀

**நீர்வேலி. மாது.**
வித்தூ! உம் மீது நம்பிக்கை வைக்கலாமா?



☺**ஐயோ! வேண்டாம். நம்பியும் வைக்க வேண்டாம்; நம்பாமலும் வைக்கவேண்டாம். நான் சம்சாரி அம்மணி!**

❀ ❀ ❀

**களபூமி. நிரோஷன்.**
உளவியல் படித்த விற்பன்னர்களின் குடும்பங்களிலும் சண்டை வருகின்றதே?
☺**ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது உமக்குத் தெரியாதா?**

❀ ❀ ❀

**நெல்லியடி. வரன்.**
கரும்பு தின்னக் கூலியா? - என்ற பழமொழி எங்கு பொருந்தும்?
☺**சீதனம் கேட்பவர்களுக்கு நன்கு பொருந்துமே!**

❀ ❀ ❀

**ஊரெழு. கு.சூரியர்.**
நடை, உடை எதைக் காட்டும்?
☺**நடை பணிவை, உடை பண்பை!**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. சந்திரன்.**
வாய் காட்டும் பெண்ணைத் திருமணம் செய்யலாமா?
☺**குரைக்கின்ற நாய் வேட்டைக்கு உதவாது.**

❀ ❀ ❀

**அல்வாய். நாதன்.**
விவாகரத்து எடுத்த சிலர் மறுமணம் செய்து சந்தோஷமாக வாழ்கின்றார்களே?
☺Training **எடுத்த ஆசிரியருக்கும் எடுக்காத ஆசிரியருக்கும் வேற்றுமை இருக்கத்தானே செய்யும்.**

❀ ❀ ❀

**அரியாலை. கீதா.**
திருமணத்திற்கு முன்பா, பின்பா வாழ்க்கை இன்பமானது?
☺**மணம் முடித்தவர்கள் திருமணத்திற்கு முன்பு மகிழ்ச்சியாக இருந்ததாகக் கூறுகின்றார்கள். மணம் முடியாதவர்கள் திருமண வாழ்க்கையே இன்பமானது என்று கூறி அதை நாடுகின்றார்கள்!**

❀ ❀ ❀

**எழுதுமட்டுவாள். பகீ.**
இரண்டு மனைவியர் உள்ள ஒருவரின் குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கும்..?



☺**'ஒருபுறம் நாகம்; மறுபுறம் வேடன்' என்ற நிலைமைதான்!**

❀ ❀ ❀

**அரியாலை. சரஸ்.**
யாரை நம்பலாம்? யாரை நம்பக் கூடாது?
☺**கொண்டவனை நம்பலாம்; கண்டவனையும் நம்பக் கூடாது.**

❀ ❀ ❀

**விளன்புரம். மதி.**
கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்று சொன்னது யாருக்கு?
☺**அழகுக்கும் ஆசை; சீதனத்துக்கும் ஆசை கொண்டிருக்கும் ஆண்களுக்கு.**

❀ ❀ ❀

**சங்கானை. சுரேஷ்.**
காதலிப்பது தவறா?
☺**காதலிப்பது தவறல்ல; காதலித்து நட்டாற்றில் விடுவதுதான் தவறு.**

❀ ❀ ❀

**வட்டுக்கோட்டை. மூர்த்தி.**
கேட்கும் கேள்விகளுக்கு நேரடியாய்ப் பதில் கூற உமக்குத் தைரியம் இல்லையா?
☺**நான் என்ன இந்நாட்டு ஜனாதிபதியா? - செயற்கைக்கோள் மூலம் 'நேரடியாக' (மழுப்பல்) பதில்களைக் கூற.**

❀ ❀ ❀

**கொக்குவில். சிவராசா.**
விளக்கில் வீழும் விட்டில் பூச்சிகள் யார்?
☺**திருமணத்தை நாடி ஓடும் ஆடவர்கள்!**

❀ ❀ ❀

**பாஷையூர். றெனி.**
எனக்கு வயது 32. திருமணம் செய்யலாமா?
☺**...லாமாவா? காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும். இல்லாவிட்டால் பின்னர் அணில் ஏறவிட்ட நாய் மாதிரி கீழே நின்று 'மிலாந்த' வேண்டி நேரிடும்.**

❀ ❀ ❀

**நல்லூர். வி. சுதா.**
எனது மனைவியிடம் காதல் விவகாரம் ஒன்றைக் கூறலாமா?
☺**பழையது என்றால் முழுங்கி விடும். தற்போதையது என்றால் மூடி மறையும்.**

❀ ❀ ❀

**நவாலி. கிருஷ்.**
தற்காலப் பெண்களுக்கு உயர் கல்வி அவசியமா? அவசியமில்லையா?
☺**கலவிக்கே ஆண், பெண் என்ற பேதம் பார்க்காத காலம் இது. இப்போது போய் கல்வியில் பேதம் பார்க்க முடியுமா?**

❀ ❀ ❀

**நல்லூர். ஜெகன்.**
எந்த விதமான பூட்டையும் திறக்கவல்ல 'திறவுகோல்' குறித்து....?
☺**அத்தகைய 'மாயக்கோலை' வைத்துக் கொண்டுதானே சிலர் மாயக் கண்ணனின் லீலைகளைச் செய்ய முற்படுகின்றார்கள்!**

❀ ❀ ❀

**வியாபாரிமூலை. குமாரி.**
திருமணத்தின் போது பெண்கள் ஏன் தலை குனிகிறார்கள்?
☺**பின்னர் வாழ்க்கை முழுவதும் எதிர்த்தரப்பு தலைகுனிய அவர்கள் தலை நிமிர்ந்து நிற்கப் போகின்றார்கள் அல்லவா? அதற்காக!**

❀ ❀ ❀

**நெல்லியடி. ஜீரா.**
நகப்பூச்சுப் பூசும் ஆண்கள் குறித்து...?
☺**முகப்பூச்சுப் பூசும் பெண்கள் போன்றவர்கள்!**

❀ ❀ ❀

**உரும்பிராய். ஆனந்த்.**
மனைவியின் வீரத்தை அறிவது எப்படி?

# வித்துவான் பதில்கள்

☺**அந்த வித்தை தெரியாதவன் கணவனே அல்லன்!**

❀ ❀ ❀

**கட்டுடை. சுதர்ஸன்.**
அடிக்கும் அலையால் விடிவு பிறக்குமா?
☺**தைபிறந்தால் வழி பிறக்காமலா போகும்?**

❀ ❀ ❀

**கொழும்பகம். ரஜனி.**
செல்வியிடம் மயங்காத மனம், திருமதியிடம் மயங்குகின்றதே?
☺**'பழகிய குதிரையில் சவாரி சுலபம்!' என்பதாலோ?**

❀ ❀ ❀

**கும்பளாவளை. ச.பவன்.**
வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட என்ன செய்ய வேண்டும்?
☺**ஒன்றைப் 'பிடித்துக் ' கொள்ளுமே! (பிறகு பிடியைத் தளர்த்த என்னிடம் வழி கேட்காதீர்!)**

❀ ❀ ❀

**துறையூர். ஐயதீஸ்.**
இம்முறை கிறிஸ்மஸ் தாத்தாவாக நீர் வருவீரா?



☺**இளைஞனாக இருக்க விரும்பும் என்னைத் தாத்தாவாக்கப் பார்க்கின்றீரே! இது நியாயமா ஐயா?**

❀ ❀ ❀

**யாழ். தேவகி.**
வித்து ஸேர்! என் காதலர் துடிப்பாக இருக்க வேண்டிய வயதில் சோம்பலாக இருக்கின்றாரே...?
☺**'துடுப்பாட்டத்தில்' அதிகமாக ஈடுபடுகின்றாரோ?**

❀ ❀ ❀

**இருபாலை. றிஸ்.**
முகம் தெரியாத கழுதை தினமும் கடிதம் போடுகின்றானே!



☺**'என் முகம் தெரிந்திருந்தால் கடிதம் போட்டிருக்கமாட்டான். அப்படித் தெரியாமல் போடுவதால் அவன் கழுதை' என்று கூறவருகிறீரா?**

❀ ❀ ❀

**நெல்லியடி. ஜீன்.**
விடாப்பிடியாக நிற்கும் பெற்றோருக்காக காதலனை இழப்பதா? அல்லது அடம்பிடிக்கும் காதலனுக்காகப் பெற்றோரை இழப்பதா?
☺**அது நீங்கள் உங்களை இழந்து விட்டீர்களா என்பதைப் பொறுத்தது!**

❀ ❀ ❀

**இருபாலை. சுதா.**
சில இளைஞர்கள் வீதிகளில் 'ஹோர்ண்' அடிக்கிறார்களே...?
☺**சன நெரிசல் என்றதால்தான் அடித்திருப்பார்கள்!**

❀ ❀ ❀

**நவாலி. கொன்ஸ்தி.**
உங்கள் பதிலுக்காக உங்களுக்குக் 'காம' ராசு என்ற பட்டமளிக்கலாமா?
☺**பெருந்தலைவர் காமராஜரின் பெயரை இப்படி நீங்கள் மண்ணாக்கலாமா?**

❀ ❀ ❀

**அச்செழு. சங்கரி.**
துடுப்பாட்டத்தில் நீர் வல்லவராமே?
☺**ஆம். திருமணமாவதற்கு முன்னர்!**

❀ ❀ ❀

**மயிலங்காடு. தயாளன்.**
சந்திரிகா - முஷாரப். ஒப்பிடுக.
☺**ஒருவர் அரசியலை நடத்தும் இராணுவவாதி. மற்றையவர் இராணுவத்தை நடத்தும் அரசியல்வாதி.**

❀ ❀ ❀

**நல்லூர். பாபு.**
அந்தக் காலத்துக் கிழவர்களுக்கும் இந்தக் காலத்துக் கிழவர்களுக்கும் என்ன வித்தியாசம்?
☺**வயதில்தான் வித்தியாசம். அந்தக் காலத்தில் எண்பது வயதிலும் முறுக்கோடு நின்றார்கள். இந்தக் காலத்தில் ஐம்பது வயதிலேயே அடங்கிப்போய் விடுகிறார்களே!**

## இவ்வார ஜோக்

**ஒரு சட்டத்தரணி தன் மனைவியோடு வெளியில் சென்றார். வழியில் அழகான பெண் ஒருத்தி அவரைப் பார்த்துப் புன்னகை செய்தாள். மனைவிக்குச் சந்தேகம் வந்துவிட்டது.**

**'இதற்கு முன்பு அந்தப் பெண்ணைச் சந்தித்தது உண்டா? - என்றாள்.**

**'பல தடவைகள் உண்டு. தொழில் ரீதியாக!'**

**மனைவி மீண்டும் கேட்டாள் :- 'அவளுடைய தொழிலிலா? உங்கள் தொழிலிலா?'**

# காதல் விவகாரத்தை மனைவியிடம் கூறலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விமானத்தின் கறுப்புப் பெட்டி: துப்புத்துலக்கும் முக்கிய கருவி கையை விரித்து விட்டது.

# வானில் ஒரு குத்துக்கரணம்?

விமான விபத்துக்கள் இன்று சர்வசாதாரணமாகிவிட்டன. சுமுகமாகப் புறப்படும் பயணங்கள் கணப்பொழுதில் கண்ணீர்க் கதைகளாக மாறிவிடுகின்றன.

மீண்டும் ஒரு விபத்தைத் தவிர்ப்பதற்காக ஏற்பட்ட அனர்த்தங்களுக்கான காரணம் ஆழமாக ஆராயப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் மர்மங்கள் துலங்குவதில்லை.

துலங்கினாலும் துலங்காவிட்டாலும் மீண்டும் மீண்டும் விபத்துக்கள் ஏற்படுவதைத்தான் ஏனோ தடுக்க இயலுவதில்லை.

தற்போது பரபரப்பாகப் பேசப்படும் விமானவிபத்து அண்மையில் அத்திலாந்திக் சமுத்திரத்தினுள் அமிழ்ந்துகொண்ட எகிப்து விமானம் - இலக்கம் 990 பற்றியது.

'Egypt Air 990' என்ற அந்த விமானம் போயிங் 767 ரகத்தைச் சேர்ந்தது. விமானத்தில் இருந்த 217 பயணிகளில் 30 பேர் எகிப்திய இராணுவ அதிகாரிகள்.

அனுபவம் மிக்க இரண்டு விமானிகளான கப்டன் அகமட் எல் ஹபாஷி, பைலட் அடேல் அன்வர் ஆகியோர் விமானத்தை நெறிப்படுத்தி இருக்கிறார்கள். இவர்களைவிடவும் நீண்டதூர பறப்பு என்பதால் மேலதிகமாக இரண்டு விமானிகள் விமானத்தில் இருந்திருக்கிறார்கள். நால்வருக்குமான ஆசனங்கள் விமானி அறையிலேயே இருக்கின்றன.

எவரும் உயிர்பிழைக்கவில்லை. விபத்து நடைபெறமுன்னர் எந்தச் சிறுதகவலும் தரைக்கட்டுப்பாட்டாளர்களுக்குத் தரப்படவில்லை. விமானம் திடீரென நடுவானில் அவகாசம் இன்றி வெடித்துச் சிதறவும் இல்லை. மர்மமான இச்சூழ்நிலையில் பயணிகள் மரணத்தைச் சந்திக்க முன்னர் மிகப் பயங்கரமான அனுபவங்களைப் பெற்றிருப்பர் என்ற ஊகம்தான் வேதனைகளைக் கிளறிவிடுகிறது.

விசாரணைகள் மர்மத்தைத் துலங்கவைப்பதற்குப் பதிலாக விரிவடைய வைத்திருக்கின்றன. கறுப்புப் பெட்டி கிடைத்ததும் எல்லாம் சரியாகிவிடும் என்று தவித்த நிபுணர்களுக்கோ அது சொல்லிய தகவல்கள் மேலும் ஏமாற்றத்தையும் மர்மத்தையுமே தந்திருக்கின்றன. ஏதும் விளங்காத நிலையில் அதிகாரிகள் குழம்பிப்போயுள்ளனர்.

முதலில் ராடர் திரைகள் சொல்லிய கதைகளைக் கறுப்புப் பெட்டிக் கதைகள் ஓரளவுக்கு ஊர்ஜிதம் செய்தே இருக்கின்றன. எனினும் இதுவரை வரலாறு கண்டிராத மர்மமான முறையில் காரணகாரியம் ஏதும் இன்றியே சம்பவங்கள் நடந்தேறி இருக்கின்றன.

பயணிகள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்று ஊகிக்க 15 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு விபத்துத்தான் கைகொடுத்திருக்கிறது. சைனா ஏர்லைன்சின் போயிங் 747 ரக விமானமொன்று நடுவானில் தலைகீழாக 10 ஆயிரம் அடி கீழ்நோக்கி விழுந்தபோது ஏற்பட்ட அனுபவங்கள் இங்கு மீண்டும் கருத்தில் எடுக்கப்பட்டன.

அத்தருணத்தில் பயணிகள் அனைவரும் ஆசனத்தோடு பிணைக்கப்பட்டிருந்ததால் தப்பிக்கொண்டனர். இருவர் மட்டும் படுகாயங்களுக்கு ஆளாகி இருந்தனர். யன்னலூடாக வெளியே பார்த்த பயணியொருவர் தான் சூரியனைக் கீழேயும் கடலை மேலேயும் பார்த்ததாக வர்ணித்து இருந்தார்.

தலைகீழாகப் புரண்டாலும் விமானம் வேகமாகக் கீழ்நோக்கி விழுந்த அந்த 30 செக்கன்களும் பயணிகள் பாரமற்ற நிலைமையையே உணர்ந்து இருந்தார்கள். தமது நிறை சோளப் பொரி(பொப்கோண்) போல இருந்ததாக அவர்கள் விவரித்தனர்.

விமானிகள் தமது சாதுரியத்தால் மேலும் இரண்டு நிமிடங்களுக்குள்- மேலும் இருபதினாயிரம் அடிவரை பூமியை நோக்கி விழுந்த விமானத்தைச் சமநிலைக்குக் கொண்டுவந்து இயங்கச் செய்து விட்டார்கள். எனவே பயணிகள் அனைவரும் பிழைத்தார்கள்.

ஆனால் இந்த விபத்திலோ விமானம் தலைகீழாகப் புரளாமல் இருந்தும் - போதிய அவகாசம் இருந்தும் விமானிகள் ஏனோ செயற்படவில்லை. காரணங்கள் துலங்குவதற்கான அறிகுறிகள் கறுப்புப் பெட்டியினும் இருக்கவில்லை.

முப்பத்து மூவாயிரம் அடி உயரத்தில் சீராகப் பறந்துகொண்டிருந்த விமானம் திடீரென 16ஆயிரம் அடிக்கு குத்தியது. மீண்டும் அதனை 24 ஆயிரம் அடிக்கு உயர்த்திய விமானிகள் தரைக்கு எந்தத் தகவலையும் தரவில்லை. அத்துடன் கறுப்புப் பெட்டியிலும் அவர்கள் மௌனமாகவே செயற்பட்டது ஊர்ஜிதமாகியுள்ளது. எந்த உரையாடலும் பதிவாகவில்லை.

'யேசுவே' என்று விமானிகள் கத்துவதாவது பல கறுப்புப் பெட்டிகளில் பதிவாகி இருப்பதே வரலாறு. இங்கு விமானிகள் ஏன் ஊமையானார்கள்?

மீண்டும் விமானம் ஒரு குண்டு வீச்சு விமானத்தைப் போலக் குத்திக் கடலினுட் புகுந்துவிட்டது. நீருக்கு அடியில் 250 அடி ஆழத்தில் அதன் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. சிதைவுகள் சொல்லும் கதைகளும் போதவில்லை.



எகிப்திய விமானத்தின் சிதைவுகளை கடலின் ஆழத்தில் அமெரிக்கக் கரையோரக் காவல் படையினர் மீட்டு எடுக்கின்ற காட்சி.

விமானம் குத்திய கோணமும் வேகமும் ஆய்வாளர்களைப் பிரமிக்க வைத்திருக்கிறது என்றால் பயணிகள் என்ன பாடுபட்டிருப்பார்கள்?

ஒலியின் வேகத்தை மிஞ்சும் வேகமுடைய சிறியரகக் குண்டுவீச்சு விமானமொன்று குத்தும் வேகத்தை இந்தப் பிரமாண்டமான பயணிகள் விமானம் எட்டிக் குத்தியிருக்கிறது.

இதன் அலுமினியத் தகடுகள் வேகம் தாங்காது தீய்ந்து பொரிந்திருக்கவேண்டும். ஏனோ அப்படி நிகழவில்லை.

மு.சிவநேசன்

சாதரணமாக ஒரு விமானம் கிடையாகப் பறக்கும்போது 9 பாகை அளவுக்கே சரிந்து தரையிறங்குவது வழக்கம். ஒரு ஆபத்தான கட்டத்தில் அது 20 பாகைவரை சரிந்து தரையிறங்க அனுமதிக்கப்படுகிறது. அதை மிஞ்சிய சரிவை பயணிகளோ பயணிகள் விமானமோ சமாளிக்க இயலாது.

ஆனால் இந்த விமானமோ 40 பாகைவரை குத்திச் சரிந்திருக்கிறது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு பயணிகள் பதறாமலா இருந்திருப்பர்? தப்பிப் பிழைத்திருந்தால் அவர்களின் அனுபவங்கள் வரலாறு கண்டிருக்கும். ஆனால் பரிதாபம் அதிர்ச்சி நீங்கு முன்னே நீரில் மூழ்கி அனைவரும் மடிந்து விட்டார்கள்.

தேடுதலின்போது முதல் வாரத்தில் சதைத் துண்டங்களே அகப்பட்டன. எவரும் விமானத்தை குண்டு வைத்துத் தகர்த்ததாக உரிமை கோரவில்லை. விமானத்தில் இருந்த 30 இராணுவ அதிகாரிகளை இலக்கு வைத்து ஏதாவது நடத்திருக்குமோ என்றும் சந்தேகம் எழுந்திருக்கிறது.

விமானம் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் விமானநிலையத்திலிருந்து புறப்பட்டு அத்திலாந்திக் சமுத்திரத்தின் மேலாக வெகுதூரம் வந்திருக்கிறது. அதிகாரிகளோ விமானநிலையம், விமானநிறுவனம், பயணிகளின் உறவினர்கள் என்று பலரையும் சந்தித்தும் விசாரித்தும் தகவல்களையும் துப்புக்களையும் திரட்ட முனைகிறார்கள்.

போயிங் 767 ரக விமானங்கள் சந்தித்த விபத்துக்கள் எந்த ரகத்தவை என்றுகூட ஆய்வுகள் நடத்தப்பட்டன. இது போயிங் நிறுவனம் தயாரித்த 767 ரகத்தைச் சார்ந்த 282வது விமானம் ஆகும். 283வது விமானம் அதாவது இதற்கு அடுத்ததாக தயாரிப்பு வரிசையில் நின்றிருந்த விமானம் 1991ல் தாய்லாந்துக் காட்டினுள் விழுந்து நொருங்கிவிட்டது.

ஆனால் காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. விமானம் தரையிறங்கத் தயாராகும்போது பிரயோகிக்கப்படவேண்டிய thrust reverser என்ற பொறிமுறை நடுவானில் செயற்பட்டதால் விமானம் சுழன்று, புரண்டு விழுந்திருக்கிறது. வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடனடியாக ஏனைய எல்லா போயிங் விமானங்களிலும் thrust reverser பரிசீலிக்கப்பட்டன.

இந்த எகிப்திய விமானத்திலும் கூட அது சரிபார்க்கப்பட்டது. அந்தக் கோளாறினால் விமானம் விழுந்திருந்தால் இப்படி சீராக குத்தி எழும்பி விழுந்திருக்க முடியாது.

இதே ரக விமானமொன்று 1996ல் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்காவை நெருங்கும்போது கணனிகள் குளறுபடி செய்திருக்கின்றன. விமானிகள் தரைக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். விமானத்தின் தானியங்கிப் பொறிமுறையும் (Auto pi-lot) வேறுசிலவும் பிசகிப்போயின. காட்டிகள் மிகவும் தவறான வாசிப்புக்களைக் காட்டி நின்றன.

எச்சரிக்கை மின்விளக்குகள் கண்சிமிட்டின. பயணிகளை ஆசனப்பட்டிகளால் பிணைக்கும்படி கேட்கும் அறிவுறுத்தல்கள் தரப்பட்டன. ஆனால் விமானிகள் மிகவும்சாதுரியமாக விமானத்தைத் தரையிறக்கி விட்டார்கள்.

கணனிக்கோளாறுக்குக் காரணம் பற்றரித் தொடர்பு ஆட்டம் கண்டமைதான் எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

பைலட்டுகள் சிலவேளைகளில் விநோதமாகச் செயற்பட்டு விடுகிறார்கள். ஒரு விமானி தான் தற்கொலை செய்ய நினைத்து 104 பயணிகளுடன் விமானத்தை ஆற்றில் இறக்கிய சம்பவம் இந்தோனேசியாவில் 1997ல் நிகழ்ந்திருக்கிறது. அந்த விமானி மீது ஏற்கனவே சில ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுமிருக்கின்றன.

சம்பவத்துக்கு முதல் நாள் விமானி பெரிய தொகைக்குத் தன்னைக் காப்புறுதி செய்துகொண்டது தெரியவந்தது.

இந்த எகிப்திய விமான விபத்திலும் விமானிகள் மீது கூடச் சந்தேகம் எழுகிறது. வேறு எக்காரணத்தையும் கண்டுபிடிக்க இயலாதநிலையில் அப்படி முடிவெடுப்பதும் சரியாகாது. இனி விமானத்தின் பராமரிப்புப் [illegible] பட்ட வரலாறுகள் என்றெல்லாம் ஆராய்ச்சி விரிவடையவேண்டும்.



விபத்துக்குள்ளான விமானத்தின் விமானிகள் அறை: கடைசி நிமிடங்களில் மர்மம்.

விமானங்களின் கறுப்புப்பெட்டியை சிதைவுகளில் இருந்து அடையாளம் காண வசதியாக pingers எனப்படும் நுண்ஒலி எழுப்பிகள் அவற்றில் பொருத்தப்பட்டிருக்கும். இவ்வொலியை இனங்காணும் எலக்ரோனிக் கருவிகள் கறுப்புப்பெட்டியைக் கண்டுபிடிக்க உதவும்.

இந்த விமானம் சிதைந்தபோது pinger கறுப்புப் பெட்டியை விட்டுப் பிரிந்துவிட்டது. எனினும் கடும் பிரயாசையால் கறுப்புப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.

விமானிகள் மொத்தமாக 4 பேரில் ஒருவருக்குத்தான் தற்கொலை செய்ய நினைவு வந்திருக்கும். ஏனையவர்கள் ஏன் மௌனமானார்கள்? வேறு யாராவது விமானி அறைக்குள் புகுந்து இயக்கினார்களா? அப்படியானால் எவரும் ஏன் குரல் கூடக்காட்டவில்லை? இரகசியச் செய்தியை விமானிகள் தரைக்குத் தரவில்லை?

33 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த விமானத்தில் தானியங்கிப் பொறிமுறை (Auto pi-lot) எக்காரணமும் தரப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. பொறிமுறையில் எக்கோளாறும் இருக்காத நிலையில் விமானிகளே அதைச் செய்திருக்கவேண்டும். தொடர்ந்து விமானம் அதிவேகமாகக் கடலை நோக்கி குத்தியிருக்கிறது. கணனிக்கோளாறு எதையும் கூட கறுப்புப்பெட்டி பதியவில்லை. விமானிகளே மீண்டும் சில இயக்கங்களைச் செய்தமைக்கான ஆதாரங்களைக் கறுப்புப்பெட்டி காட்டி நிற்கிறது. விமானத்தை அவ்வாறு குத்தி இறக்கியதும் இயந்திர வேகங்களைக் கட்டுப்படுத்தியதும் கையால் இயக்கும் கருவிகளால் ஏவப்பட்டுள்ளன.

விமானிகள் ஏன் இப்படிச் செயற்படுகிறார்கள் என்று அனுபவமான பல்வேறு விமானிகளிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. அவர்களால் இவ்வியக்கங்களுக்கும் சந்தேகங்களுக்கும் விடை பகரமுடியவில்லை.

அதிவேகத்தில் விமானம் கடலை நோக்கிக் குத்திய வேளை தடுப்பு நடவடிக்கைகள் எதையும் எடுக்காமல் விமானிகள் ஏன் வாளாவிருந்தார்கள் என்ற கேள்வி அடுத்து எழுகிறது.

மேலும் சில செக்கன்கள் நகரவும் கையால் விமானத்தின் இரண்டு இயந்திரங்களை இயக்கும் சாவிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. விசமத்தனமான இச்செயலைச் செய்தது யார்? ஏன்? நிபுணர்களால் விடைகாண இயலவில்லை.

கறுப்புப்பெட்டி மேலும் நுணுக்கமாக ஆராயப்படலாம். விமான நிறுவனங்கள் பொறிமுறைக் கோளாறுகளை இலேசில் ஒத்துக்கொள்ளமாட்டா. அது அவர்களின் வியாபாரத்தைப் பாதிக்கும்.

விடைகாணாது விரியும் மர்மங்களால் அல்லற்படுவதோ அப்பாவிப் பயணிகள்தானே.

*

## முதியரை எள்ளல் வேணாம்

கற்பழித்தல், கன்னியைக்
காமுறுதல், காதலில்
வற்புறுத்தல், வஞ்சியர்
வாழ்வழித்தல், சீதனப்
புற்றுநோய்க்குள் ளாக்குதல்,
பூட்டிவீட்டில் வைத்திடல்,
அற்பரது செய்கையே
ஆனபோதும் வாழ்விலே....

கள்ளருந்தல், போத்தலைக்
காலிசெய்தல், காசினை
வெள்ளமாக வீசுதல்,
வேகவெறி கொள்ளுதல்,
துள்ளுகின்ற போதையில்
துர்நடத்தை யேகுதல்,
'புள்'வெறியில் வாழுதல்,
பூதபாவம் ஆயினும்.....

பல்லுடைத்தல், பல்கலைப்
'பகிடிவதை' செய்குதல்,
வில்லராக மாறுதல்,
விற்பனரைக் கொல்லுதல்,
வல்லவரைச் சீண்டியே
'வரப்பிரகாஷ்' ஆக்குதல்
சொல்வதைக ளூட்டுதல்,
சோர(ர்)நெறி யாகினும்...

புறக்கணித்தல், சாதியின்
போதனைகள் போற்றுதல்,
நிறங்களாலே மக்களை
நிறையளந்து நோக்குதல்,
பிறப்பினாலே எளியரைப்
பிறரெனவே தூற்றுதல்,
அறப்படித்த மாந்தரின்
ஆக்கினைகள் ஆயினும்.....

முந்தையரைத் தூற்றலும்
முதியவரை ஏசலும்
சிந்தையவர் நோகவே
சிறுமைகளை ஆற்றலும்
கைங்கரியம் ஆகவே
'கைதடி'யிற் சேர்த்தலும்
'மந்தி'யரின் செய்கையே
மனிதரவர் இல்லையே!

- த.தர்மேந்திரா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரத்தின் புதிய...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் தமது சுயவிருப்பபடி வாக்களிக்கலாம் என்று அறிவித்துள்ளது.

ஈ.பி.டி.பி. கட்சியோ ஆளும் கட்சி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கவையே ஆதரிக்க வேண்டும் என மக்களைக் கேட்டுள்ளது.

அடுத்த பக்கத்தில் ரெலோ கட்சி எதிர்க்கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதே போன்று, குமார் பொன்னம்பலத்தைச் செயலாளராகக்கொண்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவையே ஆதரிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுள்ளது.

### புளொட் மதில்மேல் பூனையாக

புளொட் கட்சியோ பல காரணங்களைக் காட்டி தான் சந்திரிகாவையே ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளபோதிலும், அவரை ஆதரிக்குமாறு தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் கேட்கவில்லை. இது மதில் மேல் பூனையாக இருந்துகொண்டு சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு எந்தப்பக்கமும் தாவிப்பாயும் புத்திசாலித்தனமான உத்தியுடன் வகுக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் தமிழ்க்கட்சிகள் தமிழ்மக்களின் உரிமைகள், நலன்களைப் பேணுவதைவிட தத்தமது நலன்களைப் பேணுவதிலேயே அக்கறை கொண்டுள்ளன என்பது மிக வெளிப்படையாக உள்ளது.

இந்தவாரத்தில் ஷெல்வீச்சும், பதில் ஆட்லறி வீச்சும் உக்கிரமாக நடந்துகொண்டிருந்தவேளையில், - மக்கள் மிகவும் பதற்றமுற்றும் பீதியுற்றும், என்னநடக்கப் போகின்றதோ என மனம் குழம்பி சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் - இரு தமிழ்க் கட்சிகள் பச்சைக்கொடியையும், நீலக்கொடியையும் கட்டுவதில் போட்டி போட்டுக்கொண்டு இருப்பதைக் கண்ட தென்மராட்சிப் பகுதியில் இருந்து வந்து கோண்டாவிலில் தங்கி நின்ற மூத்தவர் ஒருவர் பின்வருமாறு சொன்னார்.

"இந்த இரண்டு கட்சிகளின் ஆதரவாளர்களும் ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளரினதும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரினதும் சுவரொட்டிகளை மழையின் மத்தியில் ஒட்டுவதில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இங்குள்ள தமிழ்க் கட்சிகள் தாம் வாழ்வதற்காக ஜனாதிபதித் தேர்தலில் யாரை வெற்றிபெறச் செய்யலாம் என்பதில் ஓடித் திரிந்து காட்டும் அக்கறையை, இடம் பெயர்ந்துள்ள மக்களாகிய எங்களுக்கு ஏற்ற வசதி எதனையும் செய்துதர முன்வரவில்லை. ஒரு கட்சிதானும் எங்களுக்கு உதவ முன்வரவில்லை. பாருங்களேன்"! - என்றார்.

அந்த மூத்தவரின் மேற்கண்ட கூற்று குடாநாட்டுமக்கள் தமிழ்க்கட்சிகளைப் பற்றி எவ்வித அபிப்பிராயம் கொண்டுள்ளனர் என்பதைப் பிரதிபலிக்கின்றதல்லவா? இதற்குமேல் விளக்கமோ விமர்சனமோ தேவைப்படாது.

*

---

## தன்னினத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்களை வலியுறுத்தவே இப்பாட்டுடைச் செய்யுளை யாத்துள்ளேன் என விளம்பியுள்ளார்.

ஆனால் கம்பனோ இராமகாதையைப் புனைந்ததற்கான காரணம் எதனையும் கூறினானில்லை. மாறாக, 'நொந்த மனங்கொண்டு வையகம் என்னை இகழுமோ? மாசுவந்தெய்துமோ? என ஐயுற்று அவன் நெஞ்சங் கலங்குகின்றான். இவ்வாறு கம்பன் கலங்குவதற்குக் காரணம் யாது? பொய், புனைந்துரைகள், முரண்பாட்டுக் கருத்துக்கள் என்பன மலிய, ஆரியர் புகழ்பாடும் கதையைப் புனைந்து தன்னினத்தை இழிவுபடுத்தி, அதன் தன்னம்பிக்கையைத் தகர்க்கத் தன் புலமையைப் பயன்படுத்தியமை பண்பற்ற அடாதசெயல் என அவனது மனச்சான்று இடித்துரைத்தமையே எனலாம். இந்நிலையிலும் இக்கதையை அவன் புனைய முற்படுவதற்குக் காரணமாய் அமைந்த பின்னணி யாது? இயல்பாகவே செயற்பட முடியாவொரு சூழ்நிலையுள் கம்பன் சிக்கியிருந்தானா?

### கலையின் ஊடுபொருள்

ஒரு கலைப்படைப்பில் மண் வாசனை ஊடுருவி நிற்றல் வேண்டுமென்பர். ஓரின மக்களின் பண்புடைமை, அறிவுப்பரம்பல், வீரம், காதல், தலைமுறைதோறும் போற்றப்படும் வாழ்க்கை விழுமியங்கள் முதலியனவற்றால் மெருகூட்டப்படும் வாழ்க்கைப் பாங்கே அவ்வினத்தின் தன்மையைப் புலப்படுத்தும் மண் வாசனை எனப்படும். இனவளர்ச்சியின் தன்மைக்கு ஏற்ப காலந்தோறும் இதில் மாற்றம் ஏற்படுதல் இயல்பு. அவ்வினத்தின் மேம்பாட்டுக்குப் பலவற்றாலும் தூண்டுதலாயமைவதாகவே அதனிடத்தே மலரும் கலைப்படைப்பு இருத்தல் வேண்டும். அவ்வாறன்றி அவ்வினத்தைச் சிறுமைப்படுத்துவதாகவும் அதன் தன்னம்பிக்கையைத் தகர்த்தெறிய முற்படுவதோடு அமையாது மற்றோர் இனத்தைப் போற்றிப் புகழ்ந்து அவர்களது மேலாண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்துவதாக இலக்கியம் புனைதல் எவ்வகையில் ஏற்புடைய செயல்? கலைஞனின் புலமை எத்துணை போற்றத் தக்கதாக இருப்பினும் அப்புலமையின் வழிப்பிறந்த ஒரு கலைப்படைப்பு எந்த மக்களை நிலைக்களனாகக் கொண்டு பிறந்ததோ, அவர்களது சிறப்புக்கு உறுதுணையாக அமையாவிடின் அப்படைப்பால் அம்மக்கள் எய்தவல்ல நற்பயன் யாது?

கம்பராமாயணத்தில் ' பரந்து காணப்படும் அணிநயம்,உவமையழகு, சொல்லாட்சித்திறன் முதலியவற்றை முறைப்படி துய்த்து மகிழவல்ல புலமை மிக்கோர் நம்மிடையே எத்தனை பேருளர்? கம்பராமாயணம் என்றதும் நம் மக்களுள் பெரும்பாலோருள்ளத்தெழும் உணர்ச்சி எத்தகையது? இராமனைத் தெய்வமாகக் கருதிக் கை கூப்புவோரும் அநுமன் பேராற்றலின் உறைவிடம் என மறுகி நிற்போருமே நம்மிடையே மிகுதி. குறைபாடுகள் பல மலிந்த ஆரிய இளவலை இந்நிலைக்கு உயர்த்திய பணி யாருடையது? உண்மையை உணரமறுக்கும் நம் மக்கள் தம்மைத்தாமே தாழ்வாக நினைப்பதனூடாக பல தலைமுறையினரைத் தன்னம்பிக்கையற்றவர்களாக மாற்றும் இழிசெயலில் ஈடுபட்டு வருகின்றனர். நம்மக்களைப் பகட்டு ஆரவரத்தால் மயக்கி அவர்களது சிந்தனைத்திறனை மழுங்கச் செய்யும் முயற்சி நம்முட் சிலரால் இடையறாது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இனத்தின் இழிவுக்கு, அதன் சிதைவுக்கு வித்தூன்றும் செயலில் ஈடுபட்டுள்ள 'இப்பெருமக்கள்' எத்தகையர்? எத்திறத்தர்? தமிழுலகு ஆய்ந்து தெளியுமாக!

---

## சில வட்டங்களும்...

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் வராததுமாய்.... அவன் மனத்துச் சினம் முழுதும் பிள்ளை உடலில் தழும்புகளாய்ப்போயின.

*　　*　　*

வேதனை நிறைந்த மனத்தோடு, இனம்புரியாத குற்றவுணர்வோடு, தேநீரும் கொண்டு மகனுக்குக் கிட்டப் போகிறாள். பிள்ளையின் முன் மேசை மீது வெள்ளைத்தாள்கள் முழுதிலும் நிரம்பிய வட்டங்களும்...சதுரங்களும்...

"ஏன் தம்பி! ஏன் இத்தினை வட்டத்தையும் சதுரங்களையும்....?"

தனித்தனிப் பேப்பரில் அருகருகே வட்டங்கள்; சதுரங்கள்; பிறகு சில வட்டங்களைச் சதுரமாக்க எடுத்த முயற்சிகள்.

மகன் நிமிர்ந்தான். ஆண்டு ஐந்துக்குரிய வயது கடந்ததாய், ஓர் ஒளி முகத்தில் இருப்பதாய் இவளுக்குத் தோன்றிற்று.

"அம்மா? ஏனம்மா வட்டத்துக்கு மூலைகள் இல்லை சதுரத்தைப் போல...?"

"அது அப்பிடித்தான் அப்பன்; வட்டத்துக்கு மூலை இருந்திருந்தால் அது வட்டமாய் இருக்காதப்பன். அது சதுரமாய் போயிருக்கும்." கொஞ்சம் தெளிவாய்ச் சொன்னாள்.

மகன் சடுதியாய்க் கேட்டான். "வட்டம் வட்டமாயும் சதுரம் சதுரமாயும் இருக்கேக்குள்ளை நான் நானாயும் இளையவன் இளையவனாயுந் தானே அம்மா இருக்கமுடியும்?"

வியப்பாய் மகன் முகம் பார்த்தாள். புலமைப்பரிசில் முடிவுகளோடு மகனை முழு மொக்காகத் தீர்மானித்திருந்த கணவனை நினைக்கக் குழப்பமாக இருந்தது. அன்போடு மகனின் தலை வருடியபோது மனதில் தீர்மானம் எழுந்தது. இதை ஒரு சந்தோஷமான சூழ்நிலையில் கணவனிடம் கேட்டுப் பார்க்கவேண்டும். ஒருவேளை அவன் திருந்தக்கூடும். மகன் கணவனது கணிப்புப்படி வாழ்விலும் தோற்றுவிடப் போவதில்லை என்பதில் அவளுக்குப் பெரிய நம்பிக்கை வந்திருந்தது.

சிந்தனைக் கரு:- **சில சமூகக் கருத்துகளாலும் தேவையற்ற ஒப்பீடுகளாலும் தம்மையறியா[illegible]களை வருத்தும் பெற்[illegible]**

---

## சிறுவர் சுடர் விடைகள்

XVIஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள்:-

### 'கு'வில் தொடங்குபவை

குரங்கு, குழந்தை, கும்பம், குதிரை, குல்லா, குடை, குருவி, கும்பல், குப்பை, குடிசை.

### கண்டுபிடியுங்கள்

34

$(10+7)\times(16-14)=34$

### உருவம்



---

## என் பிரிய.....

(XII ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் அவள் காரணியாய் அமைந்துவிடக்கூடும்.கூடாது. அவனை நேரடியாக விசாரிப்பதே சரியானது...'

சிசிலியா உறுதியாய்த் தீர்மானித்தாள்.

*　　*　　*

பூமியின் உயிரினக் கட்டமைப்பைச் சீர்குலைக்கின்ற நாசகாரிகளின் செயலைப் பற்றி அறிவதற்காகச் செயலாளர் யுவான்ரின் கூறியபடி திரையில் காட்சிகள் காண்பிக்கப்படத் தொடங்கின.

முதலாவதாக விரிந்த காட்சியில் பெரிய பசுமையான மலைப்பிரசேதம் தெரிந்தது. வான்தொட வளர்வதான உயரமான அகன்ற பெரிய விருட்சங்கள் அப்பிரதேசத்தை நிறைந்திருந்தன. பின்னணியில் செயலாளர் யுவான்ரினின் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

"இது உலகின் தற்போது காணப்படும் மிகப்பெரிய மழைக்காடான 'மேய்கு' காட்டுப்பிரதேசம். ஏறக்குறைய பதின் மூன்று ஆண்டுகளின் முன்னான காட்சியே இது..."

விஞ்ஞானிகள் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"ஆனால் இன்றைய 'மேய்கு' பிரதேசத்தின் காட்சி இது..." திரையில் முன்னரைப் போன்ற ஒரு காட்டுப் பிரதேசமே காட்சியாக விரிந்தது. மண்டபத்தில் சிறு சலனம். 'வித்தியாசம் ஏதுமில்லாது இருக்கிறபோது இங்கு அழிவு என்று எதைச்செயலாளர் குறிப்பிடுகிறார்?' எல்லோரதும் நெஞ்சில் வினா எழுந்தது.

"உங்கள் சந்தேகம் நியாயமானது தான்..." யுவான்ரின் தொடர்ந்தார். "தொலைவில் இருந்து பார்க்கும்போது ஒரேமாதிரித் தோன்றினாலும் இரண்டிலும் நிறையவேறுபாடுகள் உண்டு தோழர்களே. இப்போது இந்தக் காட்சியை அவதானியுங்கள்..."

இப்போது திரையில் மரங்களை அருகேயிருந்து படமாக்கிய காட்சி விரிந்தது. முன்னரைப்போல பூரணத்துவம் நிரம்பிய காடாக அது தோற்றமளிக்கவில்லை. மாறாக இடையிடையே மண்ணில் சாய்ந்திருந்த பெருமரங்கள் கருகிப்போய் இறந்த நிலையில் காட்சியளித்தன. அருகே வெளிறிய இலைகளுடனும் அனேகமாய் இலையுதிர்த்த் படியுமாய் சோபையிழந்த மரங்களுடன் காடு காட்சியளித்தது.

விஞ்ஞானிகள் மனத்தில் எண்ணற்ற கேள்விகள் எழுந்தன.

"இன்னும் சில பிரதேசங்களில் இருந்து எடுத்த காட்சிகளையும் நீங்கள் தொடர்ந்து பார்க்கமுடியும்..."

விஞ்ஞானிகளின் கேள்விகள் பற்றி ஏதும் சொல்லாமல் யுவான்ரின் தொடர்ந்து படங்களுக்கு விளக்கமளித்துக்கொண்டிருந்தார்.

தொடர்ந்து விரிந்த காட்சிகளில் உலகின் வேறுமுக்கிய காட்டுப் பிரதேசங்கள் காட்டப்பட்டன.

'நிஷாரா' காட்டுப்பிரதேசம்...

'மிங் - சான்' காட்டுப்பிரதேசம்...

'கரீதியா' காட்டுப்பிரதேசம்...

விஞ்ஞானிகள் வைத்த கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒன்றே ஒன்று மட்டும் அவர்களுக்குத் தெளிவாய்ப் புலனாகியிருந்தது. அது - எல்லாப் பிரதேசங்களிலும் நிகழ்ந்திருந்த பெருமரங்களின் அழிவு ஒத்தவகையில் நிகழ்ந்திருந்தது என்பதேயாகும்.

திரையில் காட்சிகள் மறைந்தன. செயலாளர் யுவான்ரின் திரையில் தோன்றினார். "தொடர்ந்து தலைவரின் விளக்கம் உங்களுக்குக் கிடைக்கும். வந்தனங்கள்..." என்று சொல்லி விடைபெற்றார். விஞ்ஞானிகள் கூர்மையானார்கள். ஒலிப்பானில் எழுந்த தலைவரின் குரல் காற்றில் கலந்து செவிகளை அடைத்தது.அக்குரலின் செய்தி எது குறித்தும் அச்சமில்லாத அந்தக் கடமை வீரர்களைக் கூட ஒரு கணம் சிலிர்க்கவைத்தது. பல கணம் சிந்திக்க வைத்தது. சிந்திக்க சிந்திக்க [illegible] புரிந்தது.

(தொடரும்)

---

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.133



### சொற்சிலம்பம் இல. 133

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............இங்கே வெட்டுக..............

முடிவுத் திகதி:- 24 - 12 - 1999

### இடமிருந்து வலம்

1. தமிழர்களின் திருநாள். 4. முன்னிலையில். 7.சில சமயங்களில் வளர்ந்து முதலையும் மிஞ்சும். 8. திருடன். 9. வாயும் பல்லும் சேர்ந்து செய்யும் தொழில். 11. இதன்படிதான் நடக்கும் என்பர். 14. ஜயம் கொள். 15. சைவ சமயத்தவன். 17. பெண் ஆடு. 18. ரக. 20. கோபமுறு. 21. வஞ்சகத் திட்டம். 23. முஷ்டியால் தருவது. 24. இலகு.

### மேலிருந்து கீழ்

1. குடாநாட்டின் நான்கு பிரிவுகளுள் ஒன்று. 2. பேத்தி உறவானவள். 3. திரவத்தைப் பிரித்தல். 4: இது குத்தும். 5. மைதானம்/தளம். 6. மமதைக்குக் காரணம் இந்த நினைப்பு. 8. வித்தை. 10. முகம் குனி. 12. திக்கு. 13. சுயநலம். 14. போதையால் வருவது. 16. வாழ். 17.முட்டாள். 19. மரவேலை. 21. வஞ்சகம். 22. பல அல்ல.

### சொற்சிலம்பம் 131 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. நக்காசு. 4. தவசி. 7. கரும்பு. 9. குத்தி. 11. மாரடித்தல். 13. பிதா. 15. வராது. 16. தாம்பூலம். 18. கனா. 19. பர்ணர். 20. கண். 21. மாளல். 22. ஆண்டகை. 24. தாம். 25. புதுடில்லி.

### மேலிருந்து கீழ்

1. நகரபிதா. 2. காடு. 3. சும்மா. 5. வகுத்து. 6. சித்த. 8. புரவலர். 10. தில்லானா. 12. டிராம். 14. தாம்பாளம். 17. பூணல். 18. கண்டல். 20. கண்டி. 21. மாதா. 22. ஆது. 23. கைலி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு**:- க.செல்வராசா, சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

**இரண்டாம் பரிசு**:- பாலசிங்கம் அருணன், ஆண்டு . 8, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி. மானிப்பாய்.

**மூன்றாம் பரிசு**:- பா.ஜெப தர்சிக்கா, 113(38), பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 132 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கழுதை கேட்ட நண்பர்



ஒரு தடவை முல்லாவின் கழுதையை அவரது நண்பரொருவர் கடனாகக் கேட்டார். அந்த நண்பருக்குத் தனது கழுதையைத் தரவிரும்பாத முல்லா, 'இப்போது என்னிடம் கழுதை இல்லையே' என்று கூறினார்.

முல்லா அவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போது வீட்டின் பின்புறத்திலிருந்து கழுதை கத்தும் சத்தம் கேட்டது.

கழுதையை வைத்துக் கொண்டு இல்லை என்று கூறிய முல்லாவின் மேல் நண்பருக்குக் கோபம் வந்தது. 'கழுதை இப்போது உம்மிடம் இல்லை என்று நீர் கூறுகிறீர். ஆனால் வீட்டின் பின்புறத்திலிருந்து கழுதையின் குரல் கேட்கிறதே!' என்று கோபமாக முல்லாவைப் பார்த்துக் கேட்டார் அவரது நண்பர்.

நண்பர் கூறியதைக் கேட்டதும் முல்லாவுக்கும் கோபம் வந்து விட்டது. 'நண்பரே! படித்த குணவானாகிய நான் கூறுவதில் உமக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், கேவலம் ஒரு கழுதையின் குரலில் நம்பிக்கை வைக்கிறீரே' என்று கூறிவிட்டு வீட்டினுள் சென்று விட்டார் முல்லா.

## வரமருள்வாய்

பச்சைக் கிளியே பழம் தருவாய்
பாடும் குயிலே குரல் தருவாய்
மல்லிகை மலரே மணம் தருவாய்
மங்கா நிலவே ஒளி தருவாய்.

ஆடும் மயிலே கலை தருவாய்
அழகுப் பசுவே பால் தருவாய்
கடலே கடலே வளம் தருவாய்
கரும்பே இனிமை எனக்களிப்பாய்

நன்றி மறவா மனத்தினையே
நானும் பெற்றுப் பெருமையுடன்
தென்றல் போல மகிழ்வளிக்க
தெய்வமே எனக்கு வரமருள்வாய்!

## உருவாக்குவது எப்படி?



இரும்பு வேலை செய்யும் மாணிக்கத்திடம் வந்த அவரது வாடிக்கையாளர் ஒருவர் தனது வீட்டில் அலங்காரம் செய்வதற்காகப் படத்தில் உள்ள உருவத்தைக் கம்பிகளைக் கொண்டு உருவாக்கித் தரும்படி கேட்டுக்கொண்டார்.

அதே நேரம் அவர் சில நிபந்தனைகளையும் விதித்தார். இந்த உருவை ஒரேயொரு கம்பியை மட்டுமே பயன்படுத்தி உருவாக்கவேண்டும். எந்த இடத்திலும் கம்பி ஒன்றன்மேல் ஒன்றாக குறுக்கிடவோ, ஒரு தடவை சென்ற இடத்தின் மேலாக மீண்டுமொரு முறை செல்லவோ கூடாது என்பனவே அவர் போட்ட நிபந்தனைகள்.

அவரது நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு இந்த அலங்கார வடிவத்தை உருவாக்க முடியாது தவிக்கிறார் மாணிக்கம். அவரது வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தும் வகையில் இந்த அலங்கார உருவை வடிவமைக்க நீங்கள் அவருக்கு உதவுங்களேன்!

(விடை XV ஆம் பக்கத்தில்)

## உங்களுக்குத் தெரியுமா?



**கானல் நீர் என்றால் என்ன? அது எப்படி ஏற்படுகிறது?**

வெயில் காலங்களில் உச்சி வெயில் நேரத்தில் நீண்ட தார்ச் சாலையில் நீர் ஊற்றி வைத்திருப்பதுபோல போலியான தோற்றம் தெரியும். இதற்குக் கானல்நீர் என்றுபெயர். சாலைக்கு அருகே இருக்கும் காற்று, வெப்பத்தால் மேலெழுந்து செல்லும். சாலைக்கு அருகில்உள்ள காற்றின் அடர்த்தி குறைந்தும் அதற்குச் சற்று மேல் உள்ள பகுதியின் அடர்த்தி அதிகமாகவும் இருப்பதால் காற்று ஊடகத்தில் வேறுபாடு ஏற்படுகிறது. அதனால் ஏற்படும் பிரதிபலிப்பின் காரணமாகச் சாலையில் நீர் மிதப்பது போல தோற்றமளிக்கிறது. பாலைவனங்களில் இது போன்ற கானல்நீர்க் காட்சிகளை சகஜமாகக் காணலாம்.

**சூரிய உதயத்தின்போதும் அஸ்தமனத்தின்போதும் கிழ்வானம் சிவந்து காணப்படுகிறதே. ஏன்?**



இந்த நேரங்களில் சூரியன் நம் பார்வைக்குக் கிடை மட்டமாகத் தோன்றுகிறது. அப்போது சூரியனின் கதிர்கள் அதிகபட்சமாக வளிமண்டலத்தில் பயணம் செய்கின்றன. இந்நேரத்தில் சூரியனில் இருந்து வெளிப்படும் கதிர்களில் சிவப்பு நிறக் கதிர்கள் காற்றில் உள்ள தூசுகளில் அதிக அளவுக்குப் பிரதிபலிக்கின்றன. வானம் சிவந்து காணப்படுவதற்குக் காரணம் இதுதான்.

சந்திரனில் இருந்து சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் பார்க்கும்போது இத்தகைய சிவந்த வானத்தைப் பார்க்கமுடியாது. ஏனென்றால் அங்கு வளிமண்டலம் இல்லை.

## கண்டுபிடியுங்கள்

முதலிரு தொகுதிகளிலும் எண்கள் அமைந்துள்ள ஒழுங்கை அவதானித்து, மூன்றாவது தொகுதியில் வினாக்குறியிட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடியுங்கள்.

| | | |
|---|---|---|
| 9 | | 19 |
| | 276 | |
| 7 | | 14 |

| | | |
|---|---|---|
| 18 | | 14 |
| | 216 | |
| 6 | | 9 |

| | | |
|---|---|---|
| 10 | | 16 |
| | ? | |
| 14 | | 7 |

(விடை XV ஆம் பக்கத்தில்)

## விடுகதைகள்

1. இடியும் மின்னலும் இங்கே உண்டு; ஆனால் முடிவில் வருவது மழையல்ல; புகை. அது என்ன?
2. உயிரில்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம். அது என்ன?
3. ஒரே ஜாடியில் இரண்டு தைலம். அது என்ன?
4. எந்த எழுத்து மணக்கும்? எந்த எழுத்து எழுதும்? எந்த எழுத்து சுடும்?
5. காலும் கையும் இல்லாதவன் ஆடி, ஆடிப் பாடுகிறான். அவன் யார்?
6. ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல். அது என்ன?
7. ஐந்து ஊர்களுக்கு ஒரே மந்தை. அது என்ன?
8. ஓடுகின்ற குதிரைக்கு விலாவெல்லாம் ஓட்டை. அது என்ன?
9. பந்தக்கால் நாலு; பவளப்பல் பத்து; வெள்ளித்தடி இரண்டு; வெண்சாமரம் ஒன்று. அது என்ன?
10. ஒட்டிப் பிறந்த இரட்டையராம். போனவன் ஒருவன்; வந்தவன் ஒருவன். அவர்கள் யார்?

### விடைகள்

1. பட்டாசு 2. தராசு 3. முட்டை 4. பூ, கை, தீ. 5. இசைத்தட்டு 6. மூக்கு 7. உள்ளங்கை 8. புகைவண்டி 9. பசு 10. நெல், உமி.

## 'கு'வில் தொடங்குபவை எத்தனை?



இந்தப்படத்தைப் பாருங்கள். இது ஒரு கோவில்தேர் வெள்ளோட்டம் விடப்படும் காட்சி. இந்தப்படத்தில் 'கு' என்ற எழுத்தில் தொடங்கும் பெயர்கள்/பொருள்கள் பல உள்ளன. குறைந்த பட்சம் அவற்றில் ஆறையாவது கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

(விடை XV ஆம் பக்கத்தில்)

## வீடு கட்டும் குருவி



தூக்கணாங்குருவியை ஆங்கிலத்தில் 'வீவர் பேர்ட்' என்று சொல்கிறோம். மரங்களில் தொங்கிக் கொண்டிருக்கும் தூக்கணாங்குருவிக் கூடுகள், பார்ப்பதற்கு அழகாக இருக்கும். பெரும்பாலும் இக்கூடுகள் நெற்பயிர்களின் தாள்களை நார் நாராகக் கிழித்துப் பின்னி, இழுத்துக் கட்டப்படும். இக்கூடுகள் எப்படிப்பட்ட காற்றையும் தாங்கிக் கொள்ளும் தன்மையுடையவை. இது இயற்கையின் அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## வட்டத்திலிருந்து வரையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: இருபத்தெட்டு

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9: வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 03 சனிக்கிழமை (18-12-1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:29

# பரந்தன் பகுதியில் கடுஞ்சண்டை!

# எம்.ஐ.24 ரக ஹெலி வீழ்த்தப்பட்டது!!

## முன்னேறும் முயற்சியில் புலிகள்

கொழும்பு, டிசெம்பர்18

**பரந்தனில் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அங்கு கடுஞ்சண்டை மூண்டுள்ளது.**

**இந்தச் சண்டையின்போது படையினருக்கு உதவி வழங்கிக்கொண்டிருந்த ரஷ்யத் தயாரிப்பு எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டர் ஒன்று நேற்று புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.**

பரந்தன் பகுதியிலுள்ள படையினரின் தென்பகுதி முன்னணி நிலைகளைத் தாக்கி அழித்துக்கொண்டு முன்னேறுவதற்கான அதிரடிப்பாய்ச்சல் ஒன்றை நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு புலிகள் ஆரம்பித்ததோடு உக்கிரச்சமர் மூண்டது.

பரந்தனில் உள்ள படைகளின் முன்னணி நிலைகள் மீது மனித அலைஅலையாக விடுதலைப்புலிகள் வந்து வீழ்ந்து தாக்குதல் தொடுத்ததாகவும் -

இதனால் படையினர் முன்னணிக் காவலரண்களைக் கைவிட்டுப் பின் வாங்க நேரிட்டதாகவும் - தெரிகின்றது.

புலிகளின் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் உக்கிரமடையும் சந்தர்ப்பங்களில் தந்திரோபாய நடவடிக்கையாக தமது முன்னரங்க நிலைகளை படையினர் மாற்றி அமைப்பது வழக்கம்

( 12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி கொம்படியில் வீழ்ந்தது! 4 விமானப்படையினரும் பலி!!

ஆனையிறவுக்குக் கிழக்கே வெற்றிலைக்கேணியை அண்டிய பகுதியிலேயே எம்.ஐ.24 ரக ஹெலி சுடப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கொம்படிப் பகுதியில் அது வீழ்ந்து நொருங்கியது. அதிலிருந்த இரு விமானப்படை அதிகாரிகள் உட்பட நான்கு விமானப்படையினரும் கொல்லப்பட்டனர்.

"பறக்கும் டாங்கி" என வர்ணிக்கப்படும் இந்த ஹெலி நேற்றுக்காலை 9 மணியளவில் சுடப்பட்டது.

ஆனையிறவுக்குக் கிழக்குப் பகுதியில் புலிகளுடன் எதிர்ச்சமரில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினருக்கு உதவி வழங்கும் வகையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் இந்தக் ஹெலி விடுதலைப்புலிகளால் சுடப்பட்டது.

அதனையடுத்து அதனைப் பாதுகாப்பாக தரையிறக்க முற்பட்ட சமயம் அது நிலத்தில் வீழ்ந்து நொருங்கியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஹெலியில் இருந்த நான்கு விமானப்படையினரின் சடலங்களும் பின்னர் படையினரால் மீட்கப்பட்டன.

விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்புப் படையணி ஹெலியைச் சுட்டு வீழ்த்தியதாகப் புலிகள் அறிவித்தனர்.

விமானி ஸ்குவாட்ரன் லீடர் சில்வா பிள்ளை, இணை விமானி பிளையிட் லெப்டினன்ட் எச்.சி.பி.சொய்ஸா, சுடுநர் கோப்ரல் அத்துள ரோஷா மற்றும் துஷார ஆகியோரே இச்சம்பவத்தில் உயிரிழந்தனர். (உ-3-7)

## தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு இரு சர்வதேச அவதானிகள் இன்று யாழ் வருவர்

யாழ்ப்பாணம்,டிசெ.18

டிசெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கான சர்வதேசக் குழுவின் இரு பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளனர்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிம்ஸ்நவ், நேபாளத்தைச் சேர்ந்த சுமண்டகால் ஆகியோரே தேர்தலைக் கண்காணிப்பதற்கு யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளனர்.

இவர்கள் வாக்குச்சாவடிகளுக்கு நேரில் சென்று வாக்களிப்பு நடைபெறுவதை அவதானிப்பர். (உ-3-5)

## யாழ்.திணைக்களங்கள் நேற்றுடன் மூடப்பட்டன

### மீண்டும் 23 ஆம் திகதி பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.18

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளை மேற்கொள்ளும் பொருட்டு இன்று முதல் யாழ். செயலகத்திலுள்ள அரச திணைக்களங்கள் யாவும் மூடப்படவுள்ளன.

தேர்தல் கடமைகளில் அரச திணைக்கள ஊழியர்கள் ஈடுபடவுள்ளதுடன் திணைக்கள அலுவலகங்களும் இதற்கென ஒதுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் பணிகளின் பொருட்டு இன்று மூடப்படும் திணைக்கள வேலைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இம்மாதம் 21ஆம் திகதி காலை 7மணிக்கு ஆரம்பமாகும் தேர்தல் வாக்களிப்பு மாலை 4மணிவரை நடைபெற்று வாக்குப்பெட்டிகள் யாவும் மாலை 6 மணிக்கு யாழ்.செயலகத்துக்கு எடுத்துவரப்படவுள்ளன.

அன்றையதினம் மாலை4 மணிக்கு தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. திட்டமிட்டபடி வாக்குப் பெட்டிகள் யாவும் அன்று மாலை 6 மணிக்கு யாழ்.செயலகத்துக்கு வந்து சேர்ந்ததும் இரவு எட்டு மணிக்கு வாக்குகள் எண்ணும் வேலைகள் ஆரம்பமாகும் என்று யாழ்.அரசஅதிபர் தெரிவித்தார். (உ-5)

## ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகள்:-

## 4 பாடங்களிலும் 'A' பெற்றோர் யாழ் இந்து -8; சாவ.இந்து -6

கொழும்பு.டிசெ.18

நேற்று முன்தினம் வெளியான ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகளில் யாழ். இந்துக் கல்லூரியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளன.

யாழ்.இந்துவில் எட்டுப்பேரும் சாவகச்சேரி இந்துவில் ஆறுபேரும் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தியடைந்துள்ளனர்.

குடாநாட்டுப் பாடசாலைகளுக்கான முடிவுகள் எதிர்வரும் புதன்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

( 12 ஆம் பக்கம் பார்க்க)

## எரியக் கூடிய பொருள் ஹெலியில் இருந்து வீழ்ந்தது?

சாவகச்சேரி,டிசெ.18

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் எரியக்கூடிய மர்மப்பொருள்கள் ஹெலியில் இருந்து நேற்றுக் காலை 11 மணியளவில் வீழ்ந்தன என்று அந்தப் பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர்.

சங்கத்தானை கந்தசுவாமிகோயில் வாசல் மற்றும் சாரதா வீதிப் பகுதியில் இந்தப் பொருள்கள் வீழ்ந்தன என்றும்-

வீழ்ந்த பகுதிகள் எரிந்தன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சாரதா வீதிப்பகுதியில் ஓலையால் வேயப்பட்ட வீடு ஒன்றின் மீது இந்தப் பொருள் வீழ்ந்ததால் அந்த வீட்டின் கூரை எரிந்தது என்றும் -

பொதுமக்கள் கூடி அந்தத் தீயை அணைத்தனர் என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-31-15-139)

## ரணிலின் கொடும்பாவி எரிப்பு

ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் கொடும்பாவி நேற்று யாழ். நகரில் எரிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் யாழ்.கிளை அலுவலகத்திலிருந்து ஆஸ்பத்திரி வீதியூடாக இழுத்து வரப்பட்ட இந்தக்கொடும்பாவி மணிக்கூட்டு வீதி - ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் வைத்து தீமூட்டி எரிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா இந்தக் கொடும்பாவிக்குத் தீமூட்டினார். (உ-3-15-51)

## குருநகர் மக்கள் இடம்பெயர்வு

குருநகர் பகுதியிலிருந்து நேற்றுக் காலை தொடக்கம் பெட்டி படுக்கைகளுடன் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்துகொண்டேயிருந்தனர்.

ஏற்கனவே குருநகர் கரையோரப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தேவாலயங்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்த மக்களும் நேற்று இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

பொதுமக்கள் இடம்பெயர்வதைத் தொடர்ந்து குருநகர் பகுதியில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது.

இடம்பெயர்ந்த மக்கள் ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய பகுதிகளை நோக்கிச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது. (உ-3-5-17-5)

## உரும்பிராயில் கிரனேட் வீச்சு

உரும்பிராய்ப் பகுதியில் சென்றுகொண்டிருந்த இராணுவவாகனம் மீது நேற்று முன்தினம் பி.ப 1.25 மணியளவில் கிரனேட் வீசப்பட்டதாக பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன. அந்த [illegible] (உ-3)

## கரையோரப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றை மாற்ற முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.கரையோரப் பகுதிகளில் தொடர்ந்து நிலவும் பதற்றமான சூழ்நிலையையடுத்து அங்கு அமைக்கப்படவிருந்த வாக்களிப்பு நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தப் பகுதியில் அமைக்கப்படவிருந்த 12 வாக்களிப்பு நிலையங்களையும் இடமாற்றம் செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் தேர்தல் ஆணையாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அரியாலை சனசமூகநிலைய வாக்களிப்பு நிலையத்தை யாழ். கனகரத்தினம் (ஸ்ரான்லி) மகாவித்தியாலயத்திற்கும் -

கிளாலி,வேம்பொடுகேணி, சோரன்பற்று ஆகிய இடங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களை பளை மகாவித்தியாலயத்திற்கும் -

மறவன்புலவு சகலகலாவல்லி பாடசாலை வாக்களிப்பு நிலையத்தை நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கும்-

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கும் -

மந்துவில் ஸ்ரீ பாரதி பாடசாலை வாக்களிப்பு நிலையத்தை வரணி மகாவித்தியாலயத்திற்கும் -

குடத்தனை, அம்பன், நாகர்கோயில், செம்பியன்பற்று, மருதங்கேணி ஆகிய இடங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்களை வல்லிபுரம் ஆலயத்திற்கும் -

இடமாற்றம் செய்யவுள்ளதாக யாழ். தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-5)

## கெருடாவிலில் உயிரிழந்தவர் வீதி அபிவிருத்தி அதிகாரி

சாவகச்சேரி கெருடாவில் கிராம்புவில் பகுதியில் கடந்த புதன்கிழமை படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட இருவரில் மற்றவரின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

வீதி அபிவிருத்தித் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் சவரிமுத்து பேரின்பநாயகத்தின் சடலம் அது என அவரது உறவினர் தெரிவித்தார்.

சம்பவதினம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டு அச்சுவேலியிலுள்ள தமது வீட்டுக்கு அவர் மோட்டார்சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்த சமயமே சூட்டுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மற்றவரின் சடலம் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டது தெரிந்ததே. (உ-3-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைப்போராட்டத்துக்கு வித்திட்ட தமிழரசுக் கட்சிக்குப் பொன்விழா இன்று

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்ப மாநாடு மருதானையிலுள்ள அரசாங்க குமாஸ்தா சேவைச் சங்க மண்டபத்தில் 18.12.49 அன்று நடந்தபோது, கட்சியின் ஸ்தாபக தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகம், கியூ.ஸி. அவர்கள் அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஆரம்ப மாநாட்டில், அவர் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.**

1948 ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியது பிரிட்டிஷ் ஆட்சி. ஆனால் அந்தச் சுதந்திரம் இலங்கை நாட்டின் தேசிய இனங்களான தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்கவில்லை. கடந்த ஐம்பது ஆண்டுகளாக பெரும்பான்மைச் சிங்கள இனம்தான் இலங்கையில் சுதந்திரம்பெற்றதாக எண்ணிக்கொண்டு ஆட்சிசெய்து வருகிறது.

1948ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இந்திய - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.

"இன்று இந்தியத் தமிழ்மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. நாளை மொழிப் பிரச்சினை வரும்போது இலங்கைத் தமிழ்மக்களுக்கும் இந்தக் கதி நேரிடும். எனவே இன்றே நாமெல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வநீதியை எதிர்க்க வேண்டும்" (பாராளுமன்ற நடவடிக்கை 10.12.1948)என சா.ஜே.வே.செல்வநாயகம் நாடாளுமன்றத்தில் அறைகூவல் விடுத்தார்.

இச்சட்டமூலம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தமிழ்க்காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர். இதிலிருந்து தமிழ்க்காங்கிரஸ் பிளவுபட்டது.

'18.12.1949 அன்று இலங்கைத் தமிழரசுக்கட்சி உதயமாயிற்று. அதன் முதல் தலைவராக சா.ஜே.வே.செல்வநாயகம் முதல் மாநாட்டிலே தெரிவு செய்யப்பட்டார். அம்மாநாட்டில் அவரது தலைமை உரையின் தொகுப்பைக் கீழே படியுங்கள்.

தமிழரசுக்கட்சி தொடங்கி இன்று 50 ஆண்டுகள் ஓடிவிட்டன. 1956 ஆனி 5ஆம் நாள் தனிச்சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் நாடாளுமன்ற முன்றலில் சத்தியாக்கிரகம் தமிழுக்குச் சமஉரிமைப் போராட்டம் தொடங்கியது - சிங்கள ஆட்சியாளர்கள் ஏவிவிட்ட கூலிகள் காவற்படையின் உதவியுடன் சத்தியாக்கிரகிகளை கற்களாலும் பொல்லுகளாலும் தாக்கி இரத்தக்களரியை ஏற்படுத்திவிட்டனர்.

**மாவை சோ.சேனாதிராசா**
(செயலாளர் இலங்கைத் தமிழரசுக் கட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்)

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறிவிட்டநிலை, நாடே இரத்தக்களறியாகவும் மயான பூமியாகவும் மாறிவிட்டது. இன்றும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல், இராணுவ அடக்குமுறை ஆட்சியால் இப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று எண்ணும் ஆட்சியாளர்களுக்கு தமிழ்த் தேசிய இனம் ஒருபொழுதும் அடங்கி அழிந்துவிடப் போவதில்லை.

### உயிரிலும உணர்விலும்

சமஉரிமையுடன் நம்மை நாமே ஆளும்வரை விடுதலைப்போரை நடத்தியே ஆகவேண்டும் என்று தந்தை செல்வாவும், தமிழரசுக் கட்சியும் விதைத்த வித்துக்கள் இன்னும் உயிரோட்டமாய் உயிரிலும் உணர்விலும் நிறைந்து நிற்கின்றன.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படவேண்டுமாயின் அது தந்தை செல்வாவும் தமிழரசுக்கட்சியும் நிறைவேற்றிய தீர்மானங்களும், ஒப்பந்தங்களும்தான் அடிப்படைகளாய் அமைய முடியும்.

தமிழரசுக்கட்சி தொடங்கி 24 ஆண்டுகளின் பின் இனத்தின் ஒற்றுமைக்காய் தமிழர்விடுதலைக் கூட்டணி ஏற்படவும் தந்தை செல்வா வழிவகுத்தார். தமிழரசுக்கட்சி அதன் பிரதான அங்கமாக விளங்குகின்றது.

ஐம்பது ஆண்டுகளில் தமிழ் மக்கள் ஆயுத - இராணுவப்போர் மத்தியில் முகம்கொடுத்துள்ள வேளையில் ஒற்றுமைக்குப் பதில் உட்பகையும் பலவீனங்களும் மலிந்துள்ள வேளையில் தந்தை செல்வாவின் தலைமை உரை எம்மக்களிடம் ஒற்றுமையையும் புதிய வலுவையும் சேர்க்கும் என நம்புகிறேன். தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்படாமல் இருந்திருப்பின் தனிச்சிங்களம் நாடு முழுவதும் முடிந்த காரியமாக இருக்கும். தமிழ்ப்பிரதேசம், தமிழர் தாயகம் என்று ஒன்று உண்டென்பதை எப்பொழுதோ பேரினவாதிகள் அழித்து முடித்திருப்பர்.



### அடிப்படை ஆதாரங்களாக

சாதியினால், சமயத்தினால் பிரதேசத்தினால் கூறுபட்டு பிரிந்திருந்த தமிழ்மக்கள் ஒரு தனியான தேசிய இனம், அவர்களுக்கு தம் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை, அதேபோல முஸ்லிம் தேசிய சிறுபான்மை இனத்துக்கும் உண்டு என்று பிரகடனம் செய்து நிரூபித்தது தமிழரசுக்கட்சி.

பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக தமிழ்த்தேசிய இனத் தத்துவத்தைக் கட்டியெழுப்பி பேரினவாதச் சிங்கள வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி மக்கள் போர்புரிய அடித்தளமாய் அமைந்தது தமிழரசுக்கட்சி.

தமிழரசுக்கட்சி தொடங்கி ஐம்பது ஆண்டுகள் - பொன்விழாக்காலம் - அரைநூற்றாண்டு, தந்தை செல்வா நூற்றாண்டு - நிறைவுக்காலம் இன்றைய அரசியல் வரலாற்றுக்காலத்தில் முக்கிய அத்தியாயம்.

போர்ச்சூழலில் இனப்பிரச்சினைக்கு தீர்வே கிட்டாதா என்ற ஆதங்கத்துடன் அழிந்தே போய்விடுவோமா என்ற ஏக்கத்துடனும் உயிரைப் பணயம் வைத்து வாழத்துடிக்கும் மக்களுக்கும் போராடிகொண்டிருக்கும் விடுதலை வீரர்களுக்கும் தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனமிகு கருத்துக்களும், ஒப்பந்தங்களும் தமிழரசுக்கட்சித் தீர்மானங்களும் போராட்டங்களும் அடிப்படை ஆதாரங்களாக, அனுபவங்களாக இன்றும் விளங்கி நிற்கின்றன என நம்புகிறேன்.

## தந்தை செல்வா அன்று ஆற்றிய தீர்க்கதரிசன உரை

### தந்தையின் தலைமைப் பேருரை

என்னைத் தலைவராகத் தெரிவு செய்ததில் நல்ல நியாயம் - ஒன்று மாத்திரம் இருக்கின்றது. அது இலங்கையில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்கள் அடைந்திருக்கும் பரிதாப நிலைமையினையும், அவர்கள் அதினின்றும் நீங்கிவிடுதலை பெறுவதற்காக ஓர் இயக்கம் அவசியமாகும் என்பதையும் நீங்கள் உணரும் அளவுக்கு யானும் உணர்கின்றேன் என்பதேயாகும்.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள், விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டும் என்னும் தனி நோக்கத்துடன், யாங்கள் எல்லோரும் இன்று கூடியிருக்கின்றோம். இப்போதிருக்கும் நிலைமையில் யாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திர தமிழ் அரசை நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கை ஆகும். பழையகாலச் சரித்திரத்தைத் தெளிவாக, நன்றாக ஆராய்ந்து பார்த்தால், தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டிலே இப்போது எப்படியான நிலைமைகளுக்கிடையே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை கூர்ந்து நோக்கினால், இதுதான் ஒரேயொரு வழி - வேறு எந்தவிதமான பரிகாரமும் கிடையாது - என்பது நன்கு விளங்கும்.

16ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இந்நாட்டு மக்களே தங்களுக்கு என அரசாங்கங்களை அமைத்திருந்தனர். ஆயின் யாங்கள் ஒரு விஷயத்தை மாத்திரம் ஊன்றிப் பரிசீலனை செய்தல்வேண்டும். அதாவது போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன் இங்கு வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம்பேசும் இனம், தமிழ் பேசும் இனம் என இரு தேசிய இனங்களாக பிரிந்து வாழ்ந்துவந்தார்கள்.

சில காலங்களில் இந்நிலைமை மாறியிருந்தாலும், ஐரோப்பியர் வரும் வரை, இச்சிங்கள - தமிழ் இனப்பாகுபாடு பல நூற்றாண்டுகளாக நிலைபெற்று இருந்தது. முதலிலே தமிழ் இராச்சியத்தை அழித்த ஐரோப்பியர், படிப்படியாக சிங்கள இராச்சியங்களையும் ஒழித்துவிட்டார்கள். இதிலிருந்து யாம் பெறக்கூடிய பெரும் படிப்பினை, மக்களின் வாழ்க்கையிலும் அரசியலிலும் மொழி மிகமுக்கியமானதென்பதேயாகும்.

### ஒற்றையாட்சியின் அபாயங்கள்

தமது ஆட்சிச் சௌகரியத்தை மட்டுமே கருதிய பிரிட்டிஷார், சிந்தனைக்குறைவான முறையில், நாடு முழுவதையும் ஒரே குடியேற்ற நாட்டு அரசாங்கத்தின் கீழ் கொண்டுவந்து, பல நூற்றாண்டுகளாக இரு தேசிய இனங்களாக இருந்த பாகுபாட்டினை ஒழித்து விட்டார்கள். ஆயினும், இவ்விரு தேசிய இனங்களும் இயற்கையாகக் கலந்து ஒன்றாகி விடவில்லை. ஆயினும் மக்களுட் பெரும் பகுதியினர் வெவ்வேறான இரண்டு மொழிகளையே பேசுபவராய், வெவ்வேறு நிலப்பகுதிகளுள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

பிரிட்டனிலும் இலங்கையிலும் இருந்து எமது நாட்டின் அரசியல் அமைப்பினை வகுப்பதில் பங்குபற்றியோர், பிரிட்டிஷாரின் ஒற்றையாட்சி அமைப்பினை மாதிரியாகக் கொண்டு அதையே எமது நாட்டிலும் தழுவிக் கொள்ள முயன்றார்கள்.

பிரிட்டிஷ் அரசியல் அமைப்பானது, சிங்கள மக்களுக்கு விசேஷ திருப்தியளிப்பதாயிற்று. ஏன் எனில், சிங்கள மக்கள் பெரும்பான்மையோர். எனவே, வெறும் எண்ணிக்கையினாலேயே அவர்கள் பூரணமான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லாமலும் பழைய காலத்தில் இருந்தது போல ஒரே சிங்கள இராச்சியத்தை அமைத்துக் கொள்ளலாம் என்றும் கனவுகண்டார்கள். சென்ற பத்து நூற்றாண்டுகளாக ஏற்பட்டு இருந்த மாற்றங்களை எல்லாம் ஒரு சிறிதாவது அவர்கள் கருத்திற் கொள்ளவில்லை: பல இன மக்கள் கூடி வாழும் நாட்டிலே ஒற்றையாட்சி அமைப்பை நிறுவுவதனால் ஏற்படக்கூடிய அபாயங்களை தமிழ்பேசும் மக்கள் தெளிவாகக் கண்டார்கள்.

---

## புத்தாயிரம் ஆண்டு உதயத்தைக்காண அழைத்துச் செல்லும் புதிய கப்பல் தயார்

இந்தியாவில் புத்தாயிரம் ஆண்டின் முதல் சூரியஒளிக்கீற்று, அந்தமானில் உள்ள கச்சால் தீவில் படுகிறது. இந்த உதயத்தைக் காண, அமைச்சர்கள் உட்பட முக்கிய சுற்றுலாப் பயணிகளை அழைத்துச்செல்லும் எம்.வி.ஸ்வராஜ் த்வீப் கப்பல் போக்குவரத்துப் பணியில் இணைக்கப்பட்டது.

அந்தமானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த விழாவில், துணைநிலை ஆளுநர் ஐ.பி.குப்தா, இக்கப்பலை தேச சேவைக்குச் சமர்ப்பித்தார்.

விசாகப்பட்டினத்தில் உள்ள ஹிந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'ஸ்வராஜ் த்வீப்' கப்பல் 'பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக் கப்பல்' என்ற வகையில் இந்தியாவிலேயே பெரிய கப்பல். 1,200 பயணிகளையும் 1,500 தொன் சரக்குகளையும்சுமந்து செல்லும் திறன் கொண்டது.

இப் புதிய கப்பல் மூலம், வளைகுடாவில் உள்ள தீவுகளுக்கு கப்பல் போக்குவரத்துச் சேவை அதிகரிக்கும்.

இத்தீவுகளுக்கான போக்குவரத்துச் சேவையில் பல்வேறு வகையான புதிய கப்பல்களைச் சேர்க்க அரசு ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## விண்வெளியில் கிறிஸ்மஸ் கொண்டாடவுள்ள 7 பேர்

வாஷிங்ரன்,டிசெ.17

இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை 7 விண்வெளி வீரர்கள் விண்வெளியில் இருந்தவாறு கொண்டாட உள்ளனர்.

அமெரிக்காவின் 'டிஸ்கவரி' விண்வெளி ஓடத்தில் செல்ல உள்ள 5 அமெரிக்க விண்வெளி வீரர்களும் பிரான்ஸ் மற்றும் சுவிஸர்லாந்து நாடுகளைச் சேர்ந்த ஒவ்வொரு விண்வெளி வீரர்களுமே இவ்வாறு கிறிஸ்மஸ்ஸை விண்வெளியில் கொண்டாட உள்ளனர்.

இந்த பயணம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்றல்ல. கடந்த ஒக்டோபர் மாதம் பயணித்திருக்கவேண்டிய இந்த விண்வெளி ஓடத்தின் பயணம் திடீரென ஏற்பட்ட பழுது காரணமாக பிற்போடப்பட்டது.

விண்வெளி ஓடத்தை இன்று ஏவுவதற்கு 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இம்மாதம் 26ஆம் திகதி இந்த ஓடம் பூமிக்குத் திரும்பி வரும்.

விண்ணில் மிதந்து வரும் 'ஹபிள் டெல்ஸ்கோப்பில்' ஏற்பட்ட பழுதைத் திருத்துவதற்காக இந்தப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இதன்போது விண்வெளி வீரர்கள் 4 முறை விண்ணில் நடந்துசெல்வார்கள். ஒவ்வொரு முறை நடப்பதற்கும் 6 மணி நேரம் தேவைப்படும். (ஐ-6)

## இன்று

வலி.வடக்கு,டிசெ.18

மல்லாகம் மத்திய மகாவித்தியாலய ஒளிவிழாக் கொண்டாட்டம் இன்று சனிக்கிழமை காலை அதிபர் வி.சச்சிதானந்தம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-86)

புதிய நூற்றாண்டு பிறக்கும் போது:

## எழுத வாசிக்கத் தெரியாதோர் உலகில் 100 கோடி பேர்

புதிய நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகில் எழுதப்படிக்கத் தெரியாத மக்களின் எண்ணிக்கை 100 கோடியாக இருக்கும் என்று 'யுனிசெவ்' அமைப்பு வெளியிட்ட 'உலக குழந்தைகள் - இரண்டாயிரம்' என்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையில் சுமார் 35 கோடி மக்கள் இந்தியர்களாக இருப்பர். இந்தியாவில் தற்போது 33 கோடி இந்தியர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். சுமார் 20 கோடி மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வசதிகள் கிடைக்கவில்லை. இந்தியாவில் ஆண்டுதோறும் பிறக்கும் குழந்தைகளில் 30 ஆயிரம் பேர் எச்.ஐ.வி. கிருமியின் தாக்கத்துக்கு உள்ளாகி வருகின்றனர். எய்ட்ஸ் காரணமாக சுமார் 20 ஆயிரம் பேர் இறந்து வருகின்றனர் - என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-9)

## கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் 940 விவசாயிகள் இணைவு

கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரையும் 5 ஆயிரத்து 940 பேர் யாழ். மாவட்டத்தில் இணைந்துள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திட்டத்தில் இணைந்தவர்களில் 205 விவசாயிகளுக்கு கமக்காரர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கையில் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபை தலைமையகம் என்பன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் விவசாயிகளுக்கான உதவு தொகையை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-5-9)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
2002 A/L
கணித, உயிரியல் பிரிவு
* விரைவில் ஆரம்பம் *
(71853) * அனுமதிகள் வழங்கப்படுகின்றன *

நாகம்ஸ்
சுன்னாகம்
ரஜனி, ரோஜா
நடித்த
உழைப்பாளி
காட்சிகள்
11.00, 2.30, 5.15
(புதிய நேரம்)
(71278)

லிபேட்டி
அச்சுவேலி
பிரபுதேவா, சிம்ரன்
நடித்த
டைம்
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30 – 2.30
T.P No. 070-212223
(71687) 070-212678

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய்-ஷாலினி
மற்றும் பலர் நடித்த
காதலுக்கு மரியாதை
10.30, 2.00, 5.00
(C/10223)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மக்கள் இடம்பெயரும் பகுதிகளில்

# அவிழ்த்து விடப்படும் கால்நடைகளால் நெற்பயிர்கள் அழிக்கப்படும் ஆபத்து

தென்மராட்சிப் பகுதியில் உள்ள மறவன்புலோ, தனங்களப்பு, கோகிலாக் கண்டி மற்றும் நாவற்குழிப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருவதால் இப்பகுதிகளில் ஆயிரத்து 500 ஹெக்டேயர் நிலப் பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் நிலவும் பதற்றநிலை காரணமாக அங்குள்ள மக்கள் இடம்பெயரும்போது தமது வீடுகள் மற்றும் பட்டிகளில் வளர்க்கப் பட்ட ஆடு,மாடுகளை அவிழ்த்துவிட்டு வெளியேறியுள்ளதாகவும் -

இதனால் நெற்பயிர்கள் தற்போது கால்நடைகளின் தீவனமாக விடப்பட்டுள்ளதாகவும் -

இந்த நிலை இன்னும் சிலதினங்களுக்கு நீடிக்குமாயின் நெற்பயிர்கள் முற்றாக அழிந்துபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் -

இப்பகுதி விவசாய சம்மேளனங்கள்கமநலசேவைகள் திணைக்களத் திடம் முறையிட்டுள்ளன.(ஜ-9-133-17)

## பாவனைக் காலம் முடிந்த குழந்தைகளுக்கான பால்மா

### விற்பனையாவது கண்டுபிடிப்பு

ஊரெழு, உரும்பிராய் பகுதிகளில் சில வர்த்தகநிலையங்களில் பாவனைக்காலம் முடிவடைந்த குழந்தைக்கான பால்மா வகைகள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் எனவே இவற்றைக் கொள்வனவு செய்வோர் அவதானமாக இருக்குமாறும் பொதுச்சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி உள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இப்பகுதிகளில் வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடத்தியபோது பாவனைக் காலம் முடிந்த குழந்தைகளுக்கான பால்மா பைக்கட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் -

வர்த்தகர்களை எச்சரித்த பின்னர் அவற்றை அழித்துவிட்டதாகவும் -

சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

சில வர்த்தக நிலையங்களில் பரிசோதனையின்போது சிக்காத வகையில் இந்தப்பால்மா வகைகளை ஒளித்துவைத்து விற்பனைசெய்வது தெரிய வந்துள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களான ரி.தயாளனும், பி.கோபாலேந்திராவும் இந்தப் பரிசோதனையை மேற்கொண்டனர். (ஜ-180)

## உடுப்பிட்டி கூ.சங்க வளவில் விரைவில் எரிபொருள் நிலையம்

நெல்லியடி,டிசெ.18

சகல வசதிகளுடன் கூடிய எரிபொருள் நிரப்புநிலையம் ஒன்று, உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளவில் அமைக்கப்படவிருக்கின்றது.

வடமராட்சிப்பகுதியிலுள்ள தொண்டமனாறு தொடக்கம் உடுப்பிட்டி வரையிலான, வாகன உரிமையாளர்கள், கமக்காரர் அமைப்பினர் இது குறித்து, உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை,உடனடியாக, நிறைவேற்றித் தருமாறு உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை, யாழ்.அரசாங்க அதிபர் ஊடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம், தொடர்புகொண்டிருந்தார்.

அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வளவில் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக யாழ்.அரசஅதிபர் உறுதி அளித்துள்ளார்.

இத்தகவலை கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் ஏ.குகதாஸன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான நெல் வயல்கள் இருப்பதனால் வயல் செய்கையாளருக்கு எரிபொருளை இலகுவில் சிரமமின்றிப் பெறுவதற்கு இதன் மூலம் வாய்ப்புக்கிடைக்கும். (ஜ-109)

## இரு துறைமுகங்களிலும் பொருள்களுடன் கப்பல்கள்

### இறக்கும் பணி துரிதம்

யாழ்ப்பாணம்,டிசெ18

யாழ், செயலகம் மற்றும் தனியார் துறையினருக்கான பொருள்களுடன் வந்து சேர்ந்துள்ள கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'லங்கா முடித்த' கப்பலில் இருந்து யாழ். செயலகத்துக்கான அரிசி, பால்மா மற்றும் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டுவருகின்றன.

பருத்தித்துறை துறைமுகத்தில் 'இந்துருவலி', 'கிரிந்த' ஆகிய கப்பல்களில் இருந்து தனியார்துறையினருக்கான பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை -

யாழ்.குடாநாட்டு உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெங்காயம் என்பவற்றை தென்பகுதிக்கு எடுத்துச்செல்வதற்காக ஏற்றிக்கொண்டிருக்கும் 'குமண' கப்பல் பெரும்பாலும் ஓரிருதினங்களில் புறப்படலாம் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஜ-9)

## கலந்துரையாடல்

நெல்லியடி,டிசெ.18

கரவெட்டி மத்திய நிலையத்தில் தொடர் கல்வியை மேற்கொண்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

சகல தொடர்கல்வி ஆசிரியர்களும் சிரேஷ்ட போதனாசிரியர் கு.தருமஸ்ரீராஜா தெரிவித்துள்ளார். (ஜ-109)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

காரைநகர்,டிசெ.18

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் நடராஜப் பெருமானுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகுமிகு சித்திரத் தேரின் வெள்ளோட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ் வெள்ளோட்டத்தை அடுத்து நடைபெறும் வைபவத்தில் வாழ்த்துரைகளை யாழ்ப்பாண அரச அதிபர் க.சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் ஆகியோரும் -

சிறப்புரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் வே.தர்மரத்தினம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், யாழ்.செயலகக் கணக்காளர் க.தணிகாசலம், பொறியிலாளர் ப.கிரிதரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து தேர்நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட சிற்ப ஆசாரியர்கள் பொன்னாடை போர்த்திப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். (ஜ-73)

## நத்தார் ஆராதனை

நெல்லியடி,டிசெ.18

நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையின் நத்தார் கால இன்னிசை ஆராதனை வழிபாடு, நாளை ஞாயிறு மாலை 4.00 மணிக்கு மேற்படி தேவாலயத்தில் முகாமைக்குரு அருட்திரு. பி.ஜே.மேதர் தலைமையில் நடைபெறும்.

இவ்வைபவத்தின் போது இலங்கை காலாசார அமைச்சினால் "கலாபூஷணம்"விருது பெற்ற நவாலியூர் என். செல்லத்துரை, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார். (ஜ-109)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் மருத்துவசிகிச்சை மற்றும் கண்பரிசோதனை இடம்பெறவுள்ளன.

மருத்துவ சிகிச்சையினை லயன் டாக்டர் க.பிரதீப்குமார் தலைமையில் லயன் டாக்டர் அகிலன், லயன் டாக்டர் லோகநாதன் ஆகியோர் நடத்துவர். கண்பரிசோதனையினை லயன் எஸ். எம்.பர்னாண்டோ சகாயராசா மேற்கொள்வார்.

இந்த முகாமில் இலவசமாக கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. (ஜ-க)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறந்த திகதி 28 - 10 - 1950

இறந்த திகதி 07 - 01 - 1998

**பொன்னையா உலோகராசா**

ஈராண்டுகளில் வருவீர்கள் என்று பார்த்திருந்தோம். உங்கள் திதிதான் வந்ததப்பா!

அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்!

அன்புள்ள
இராஜேஸ்வரி (மனைவி)
மயூரன் (மகன்)

மல்லாகம். (71827)

---

பிற்போடப்பட்டுள்ளது

இன்றும் நாளையும் நடைபெறவிருந்த

**வேள்வித்தீ**
(நாடகம்)

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

MSU
(71804)

---

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

மாணவ உலகின் நன்மதிப்பைப் பெற்ற எமது வழமையான யாழ். முன்னணி ஆசிரியர் குழுவுடன்

ஆரம்பமாகின்றது

**A/L 2002**

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்

காலம்: 19-12-99 (ஞாயிறு) மாலை 4.00 மணி.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(71838) - நிர்வாகி

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 - 12 - 1968

மறைவு 28 - 12 - 1998

அமரர்

**செல்லத்துரை கருணைவேல்**

(உரிமையாளர்: விக்கினேஸ்வரா சல்வையகம் நாவலர்வீதி, அரியாலை)

திதி: 18-12-1999

எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி
மறைந்தாலும், எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் இருப்பிடமாய், பாசத்தின் பனிமலராய்
வாழ்வின் வழிகாட்டியாய் விளங்கிய
உன் அன்பு நினைவுகள் எங்களை
விட்டு என்றும் அகலாது!
உனது ஆத்மா சாந்தியடைய
எமது இதய அஞ்சலிகள்!

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தவசிகுளம்,
மிருசுவில். (71840)

---

## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

17-11-99 அன்று இன்பருட்டிக் கடலில் அகால மரணமடைந்த எமது மகனின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் ஆறுதல் கூறியும் எமது துயரில் பங்குபற்றிய மாணவமணிகள் உட்பட கல்விச் சமூகத்தினர், யாழ். மாவட்ட வங்கிமுகாமையாளர் உட்பட வங்கி ஊழியர்கள், ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள், ஞானசம்பந்தர் கலை மன்றத்தினர், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், வர்த்தக சமூகத்தினர்கள் விசேடமாக எம் பிள்ளைகளின் உடலங்களை சுழியோடி மீட்டுத் தந்த இன்பருட்டி, சுப்பர்மடம், மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தினருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.



மலர்வு 02 - 02 - 1981

உதிர்வு 17 - 11 - 1999

**சிவநாதன் ரவிசங்கர்**

20-12-99 திங்கட்கிழமை காலை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் மிகவும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

வீ.சி.சிவநாதன்.
(தந்தை)

வீரப்பதிராயன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (71826)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில்

# குடாநாட்டு மக்கள் யாருக்கு வாக்களிப்பது?

## அன்பான தமிழ் மக்களே!

* தமிழ் மக்கள் இந்த நாட்டின் வந்தேறு குடிகள் என்று வர்ணித்த சிங்களத் தலைவரின் ஆட்சி தொடரவேண்டுமா?
* தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைதாவதும், காணாமல் போவதும், செம்மணிப் புதைகுழி போன்றவற்றின் சரித்திரங்கள் தொடர்வதும் அனுமதிக்கப்படலாமா?
* கிருஷாந்தி குமாரசாமி, ரஜனி வேலாயுதபிள்ளை போன்ற பலநூறு தமிழ்ச் சகோதரிகளின் வழியில் நமது தமிழ்ப் பெண்களின் வாழ்வு அவலமாக முடிய வேண்டுமா?
* சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் வீடுவாசல்கள், வணக்க ஸ்தலங்கள் தரைமட்டமாகி பாரிய அரண்களாக மாறும் நிலைமை நீடிக்க வேண்டுமா?
* நம் கடற்றொழிலாளர் குடும்பங்கள் பட்டினிச் சாவில் அழிவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?
* நட்டுநடுநிசியில் - நித்திரைப் பாயில் - உடுத்த உடையுடன் - கைதுசெய்யப்பட்டு பொலீஸ் நிலையத்தில் அடைபடும் வேதனைகள் தொடர்வதை விரும்புகிறீர்களா?
* பட்டப்பகலில் சந்திக்குச் சந்தி இறங்கி 'சலாம்' போடும் அவலம் தொடரவேண்டுமா?
* சரக்கு கப்பலிலும் சரக்கு விமானத்திலும் பயணம் செய்வதையே விரும்புகிறீர்களா?
* ஐ.ஆர்.ஸிக்கள் போல - பொலீஸ் நிலையத்தில் பதிந்தால்தான் வசிக்கலாம் - என்ற விதிகளுக்கு தமிழர்களைக் கட்டுப்படுத்தும் கொடூரம் தொடரவேண்டுமா?
* வன்னியில் பட்டினிச்சாவு, சுகாதார வசதி இல்லாத அவலம் ஆகியன தொடர்வதை அனுமதிக்கலாமா?
* தமிழ்ப் பொதுமக்களின் உணவையும், மருந்தையும் யுத்த ஆயுதமாகப் பயன்படுத்தும் தலைமையை ஏற்பதா?
* கைதாகிப் பல வருடங்கள் வெஞ்சிறையில் வாடும் நம் தமிழ்ச் சகோதரர்கள் அந்தச் சிறையில் தொடர்ந்தும் அவலப்பட இடம்கொடுக்கப் போகிறீர்களா?
* சிவில் நிர்வாகம் இருக்கவேண்டிய இடங்களில் இராணுவ ஆட்சியே நீடிப்பதை விரும்புகின்றீர்களா?
* உங்கள் வாக்குகளை வைத்து பேரம் பேசும் புல்லுருவிகளுக்கு வாக்களிக்கப் போகின்றீர்களா?
* தமிழ் மக்களின் சாபக்கேடு தொடரவேண்டுமா?

## குடாநாட்டு தமிழ் மக்களே!

**சிந்தியுங்கள்! தீர்மானியுங்கள்!!**

**யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற சரியான ஒரு முடிவுக்கு இப்போது நீங்கள் வந்திருப்பீர்கள்!**

**உங்கள் தீர்மானமே 21ஆம் திகதி இறுதி வெற்றியாகும். அதற்காக முன்கூட்டியே எமது வாழ்த்துக்கள்!**

(10228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**-நியாயம் வேண்டும் தமிழர் அணி-**

# ஜனாதிபதித் தேர்தல் – 1999



## ரணில் விக்கிரமசிங்க



1

## ஐ.தே.கவுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்

- ⊗ தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றினைக்காண,
- ⊗ எமது மண்ணிலேயே எமது மக்கள் புதைகுழிகளுக்குள் புதைக்கப்படுவதை தடுத்து நிறுத்த,
- ⊗ சிறைகளில் சித்திரவதைக்கு உள்ளாகியிருக்கும் எமது இளைஞர்களை சிறைமீட்க,
- ⊗ காணாமல்போன எமது மக்களைக் கண்டுபிடிக்க,
- ⊗ சிதறுண்டு வாழும் எமது தமிழ் சமுதாயத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவர,
- ⊗ எமது பகுதிகளில் பெண்களும் குழந்தைகளும் ஏன் மனித உயிர்கள் சுதந்திரமாக நடமாட,
- ⊗ கண்டவர்களுக்கும் கப்பம் கொடுத்து வாழ்க்கை நடத்தும் யுகத்தை ஒழித்துக்கட்ட,
- ⊗ எமது பகுதி மூலவளங்களைப் பயன்படுத்தி நாமும் தொழில்துறையில் முன்னேற,
- ⊗ போரினால் சின்னாபின்னமாயிருக்கும் எமது நகரை கட்டியெழுப்ப,

## ஐ.தே.கவின் வெற்றி தமிழ்மக்களின் வெற்றி!

(C/10147)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வாக்குகள் அரசியலில் எமது பலத்தை நிரூபிக்கும்!
## (ஈ.பி.டி.பி)



**எம் இனிய தமிழ் பேசும் மக்களே!**
**வாக்குச்சாவடிக்கு செல்ல முன்**
**உங்களோடு சில வார்த்தைகள்.....**

இது ஜனாதிபதித் தேர்தல். ஆகவேதான் தமிழ் பேசும் மக்களிடமும் பெரும்பான்மையினக்கட்சியினர் வாக்குக் கேட்டு வரவேண்டிய நிலை. ஐம்பது வீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெறுபவர்களே ஜனாதிபதியாகமுடியும் என்பது இத்தேர்தலின் விதி. இதுவே தமிழ்பேசும் மக்களுக்கிருக்கும் பலம். எந்தவகையிலும் பலவீனமான நிலையிலிருந்து அரசுக்கு அழுத்தம் கொடுப்பதோ அல்லது அவர்களோடு பேரம்பேசுவதோ முடியாத காரியம். இந்த ஜனாதிபதித் தேர்தலில் எம்மக்களாகிய உங்களுக்கிருக்கும் வாக்குப்பலந்தான் ஆட்சியாளர்களோடு எம்மைப் பேரம்பேச வைத்திருக்கின்றது என்பதை மறந்துவிடாதீர்கள்.

மயிலே மயிலே இறகு போடு என்றால் அது தானாகப் போடுமா? உரிமைகள் போராடிப் பெறவேண்டியவை. போராட்டத்தில் இரண்டு வகை, ஒன்று ஆயுதவழி, இன்னொன்று ஜனநாயகவழி. சில சூழல்களில் இரண்டும் இணைந்த வழி. நாம் ஆயுதப்போராட்டத்தைப் பிழையென்று மறுப்பவர்களல்லர். ஆயுதப்பலத்தைப் பயன்படுத்திய அயர்லாந்து தேசமக்கள் அரசோடு கைகுலுக்கி சமாதானத்தை அனுபவிக்கவில்லையா? சமாதானத்தின் சின்னமாய் ஒரு கையில் ஒலிவ் மரக்கிளையோடும் மறுகையில் ஆயுதத்தோடும் போராடிய பலஸ்தீனமக்கள் ஜனநாயக வரை முறைக்குள் தங்களை நுழைத்து தமது மண்ணைப் பாதுகாப்பதிலும் அரசியல் உரிமைகளைப் பெறுவதிலும் கட்டம் கட்டமாக முன்னேறவில்லையா? அந்த மண்ணிலும் மனிதப் படுகொலைகள் நடந்தன, ஆயினும் சமாதானத்தை நோக்கி தங்கள் முயற்சிகளை நகர்த்தியதால் அவர்கள் அழிவுகளிலிருந்து தம்மைப் பாதுகாத்து உரிமை பெற்றிருக்கிறார்கள். அந்த நம்பிக்கைகளிலிருந்து எழுந்ததுதான் ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு.

### வாய்ப்புக்கள் வருமென்று போராடாது காத்திருப்பதுவும் தவறு. அதே வேளை வாய்ப்புக்கள் வரும்போது பயன்படுத்திக் கொள்ளாதிருப்பதுவும் தவறு.

ஆட்சியாளர்களோடு பேரம்பேசுதல் என்பதும் ஜனநாயகப் போராட்டத்தில் முக்கிய அம்சம் என்பதை மக்களாகிய நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். வடக்கு - கிழக்கின் கடந்தகால அரசியல் தலைமைகள் தமக்கிருந்த பேரம்பேசும் ஆற்றல்களை சரிவர உணரவில்லை. பயன்படுத்தவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தையெல்லாம் தவறவிட்டு இன்று பூச்சியங்களாய்ப் போயிருக்கிறார்கள். ஆனால் ஈ.பி.டி.பியினராகிய நாம் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் சரிவரப்பயன்படுத்தியே வந்திருக்கிறோம். 1994இல் பொதுத்தேர்தலின் போதும், 1998இல் யாழ்.உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் போதும் எம்மீது வசைமாரிகள் பொழியப்பட்டன. அந்த சந்தர்ப்பங்களையெல்லாம் மக்களாகிய உங்களுக்கு விமோசனங்களாக மாற்றித்தந்திருக்கின்றோம்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் எடுத்திருந்த நிலைப்பாடுகள்தான் எம்மை அரசோடு பேரம்பேசும் சக்தியாகவும் இன்று உருவாக்கியிருக்கிறது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும். பலம் இருந்தால் மட்டுமே அரசோடு பேரம்பேச முடியும். எமக்கிருக்கும் இந்தப் பலம் மக்களாகிய நீங்கள் பெற்றுத்தந்தவையே.

தமிழ் பேசும் மக்கள் உரிமை விடயத்தில் பெரும்பான்மையினம் சார்ந்தவர்கள் சிலர் அரசுக்குக் கொடுக்கும் அழுத்தங்களாலும் தீர்வு முயற்சிகள் தவிடுபொடியாக்கப்படுகின்றன. பதிலுக்கு எம்மக்களாகிய நீங்களும் அழுத்தங்கொடுக்கும் போதுதான் ஆட்சியாளர்களை சமநிலைக்குக் கொண்டுவரமுடியும். அப்போதுதான் எரியும் பிரச்சினைக்குத் தீர்வு முயற்சி சாத்தியப்படும்.


**1**

அரைகுறைத் தீர்வுகளால் எங்கள் அபிலாஷைகள் தீர்க்கப்பட முடியாது. வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களின் தாயகக்கோட்பாட்டினை அடிப்படையாகக்கொண்டே எமது தீர்வுத்திட்டம் அமைந்திருக்கின்றது. இதை நாம் அரசுக்கு உறுதியாகவே தெரிவித்திருக்கின்றோம். ஆனாலும் நடைமுறைச்சாத்தியமாக எமது தீர்வுமுயற்சியினை மூன்று கட்டங்களாக அணுகி நகர்த்துவதே எமது நோக்கமாகவுள்ளது.

1. **முதற்கட்டமாக வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தல்.**
2. **அரசின் தீர்வுத் திட்டத்தில் உடன்பட்ட விடயங்களை முதற்கட்டத்தோடு இணைத்தல்.**
3. **எஞ்சியுள்ள ஏனைய விடயங்களுக்கான சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை.**

இத்தேர்தலில் நாம் பேசிய பேரங்களின் அடிப்படையில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் வரைக்கும் அதன் ஓர் அம்சமாகவே இடைக்கால நிர்வாகசபையினை ஏற்படுத்தமுடியும் என வர்த்தமானியிலும் அறிவிக்கப்பட்டுவிட்டது. நடைமுறைப்படுத்துவதற்கான தயார் நிலையில் இருக்கும் இவ்விடைக்கால நிர்வாகசபையினால் அன்றாடப்பிரச்சினைகளில் கணிசமான அளவினை நிறைவேற்ற முடியும். ஓர் அரசியல் தலைமைத்துவத்தை வடக்கு - கிழக்குக்கு ஏற்படுத்த முடியும், தொடர்ந்து சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக பதவிஏற்கும் பட்சத்தில் இரண்டாம் கட்டத்தீர்வும் உடனடியாகவே நடைமுறைக்குத் தொடர்பாக இதுவரை முழுமையான இணக்கம் காணப்படாதபோதிலும் மக்களாகிய உங்களின் பலத்தோடு அதற்கான முயற்சியினை தொடர்ந்தும் முன்னெடுப்போம். நாடாளுமன்றத்தை அரசியல் யாப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கு இத்தேர்தலில் சந்திரிகா மக்கள் ஆணை கேட்டுநிற்பதும் எமக்கு சாதகமான ஒரு வாய்ப்பே.

அன்பான எம் மக்களே! ஜனாதிபதி சந்திரிகா அவர்களுக்கு வெறுமனே வாக்களிக்குமாறு உங்களை நாம் கோரவில்லை. மக்களாகிய உங்களின் நலன்களுக்காக நிபந்தனையின் அடிப்படையிலேயே வாக்களிக்குமாறு கேட்கிறோம். மக்களின் நலன்களை யாருக்கும் தாரை வார்த்துக் கொடுப்பதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லை. உரிமைக்குக் குரலும், உறவுக்குக் கரமும் கொடுப்பவர்கள் நாம்.

யுத்தம் தொடரும் சூழலில் கொலைகளும், கைதுகளும், வதைகளும், காணாமல்போகும் நிலைகளும், பாலியல்வல்லுறவுகளும் யுத்தத்தின் வெளிப்பாடுகளாக என்றும் இருக்கும். எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும், இதே நிலைமைதான். இந்த அழிவிலிருந்து மக்களாகிய உங்களையும் எம் தேசத்தையும் காப்பதற்காகவே நாம் பிரயத்தனம் எடுத்துச் செயற்பட்டு வருகின்றோம். அதன் முதற்கட்ட நகர்வு உங்கள் வாக்குப்பலத்தில்தான் தங்கியுள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.

மருந்துக்கு வலியா? காயத்திற்கு வலியா? பேரம் பேசும் அரசியல் அழுத்தங்களினால் நாம் கோரிக்கை விடாமலிருந்துவிட்டால் யாரும் கூப்பிட்டுத்தருவார்களா உரிமைகளை? கடந்த காலங்களைப் போலன்றி இப்போது கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் சரிவரப் பயன்படுத்துவோம். எமது கடந்தகால நகர்வுகள் சமகால நிலைமைகளைத் தோற்றுவித்திருப்பதுபோல், சமகால நகர்வுகளும் ஆரோக்கியமான எதிர்காலத்தை நிச்சயம் தோற்றுவிக்கும். ஜனாதிபதி சந்திரிகா அவர்களுக்கு வாக்களித்து எமது பேரம் பேசும் ஆற்றலை மேலும் பலப்படுத்துவோம். உங்களுக்காக வாதாடவும் போராடவும் நாம் என்றும் தயாராயிருக்கின்றோம்.

**"தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்"**
**"என்றும் நாம் மக்களுக்காக"**
**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**

---

# ஜனாதிபதித்தேர்தலில்
## சந்திரிகாவுக்கு வாக்களிக்குமாறு ஈ.பி.டி.பி. கோருவது ஏன்?

அன்பார்ந்த மக்களே,

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள ஜனாதிபதித் தேர்தலில் நாம் யாருக்கு வாக்களிப்பது என்ற ஒருமித்த தீர்மானத்திற்கு வரவேண்டிய அவசியம் உள்ளது.

ஜனாதிபதிப் பதவி என்பது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அதிமுக்கியம் வாய்ந்தது.எனவே அதை எமக்குச் சாதகமானதாக ஆக்குவதுதான் விவேகமானது. அவ்வாறான ஜனாதிபதி பதவிக்கும் ஆளும்கட்சிக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அழுத்தம்கொடுப்பதற்காகவும் அதற்கான ஈ.பி.டி.பியின் பேரம்பேசும் சக்தியை அதிகரிப்பதற்காகவும் இத்தேர்தலைப் பயன்படுத்த நாம் முடிவுசெய்துள்ளோம்.

இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினையை கட்டம் கட்டமாகத் தீர்ப்பதே நடைமுறையில சாத்தியமானது என்ற கொள்கையை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

எமது மக்கள் யுத்தத்தால் பெரும் துன்பங்களைச் சுமந்தனர் - சுமக்கின்றனர். ஆனால் அதற்காக சுமந்த துயரங்களுக்கும், கொடுத்த விலைகளுக்கும் ஈடாக அரைகுறைத் தீர்வை எம் மக்கள் நாடிநிற்பவர்களும் அல்லர், ஏற்றுக்கொள்பவர்களும் அல்லர் என்பது உண்மையிலும் உண்மை.

இவற்றைத்தான் ஈ.பி.டி.பி உரத்துக் கூறிவருகிறது, எடுத்துச் சொல்லிவருகிறது. இவற்றுக்காக வாதாடிவருகிறோம். எதிர்காலத்திலும் அரசியல்ரீதியாகப் போராடவும்போகின்றோம்.

அதன் அடிப்படையில் யுத்த நிறுத்தத்தையும் உட்படுத்திய, நடைமுறையில் சாத்தியப்படக்கூடிய வகையிலான மூன்று கட்டத் திட்டமொன்றை இனப்பிரச்சினைக்கான கௌரவமான அரசியல் தீர்வாக நாம் முன்வைத்துள்ளோம்.

முதற்கட்டமாக வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கி புதிய வேகத்துடன் இயங்கவைப்பதனை முன்வைத்துள்ளோம்.

* பொதுஜன ஐக்கிய முன்னணி (PA) அரசாங்கத்தினாலும் ஐக்கிய தேசியக்கட்சியினாலும் (UNP) மாகாணசபை முறை ஏற்றுக்கொள்ளப்பட்டதனால், செயற்படுத்துவது எளிதாக அமையும்.
* இன்று பல்வேறு பிரச்சினைகளாலும் அல்லலுறும் எமது மக்களது பிரச்சினைகளை கணிசமான அளவுக்கு தீர்க்கக்கூடிய களமாக இது அமையும்.
* நகரமுடியாது, முடங்கிப்போய் தேங்கி இருக்கும் அரசியல் தீர்வு முயற்சிகளை நகர்த்துவதற்கான ஒரு முன்னோடியாக இது அமையும்.

மேற்கூறிய காரணங்களுக்காக, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை அடுத்து உருவாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் மூலம் புத்துயிர் அளித்து அதன் அதிகாரத்தினை மக்களிடமே வழங்குவதனை எமது கோரிக்கையாக முன்வைத்துள்ளோம்.

இரண்டாம் கட்டமாக ஏற்கனவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுப்பொதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றை தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலான மாற்றங்களுடனும் திருத்தங்களுடனும் சட்டமாக்கி நடைமுறைப்படுத்துவதில் பல தடைகள் உள்ளனவாகையினால் தடைகள் இன்றி, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் இன்றி, குறிப்பிட்ட அம்சங்களைக் கொண்ட ஒரு சட்டமூலத்தை நிறைவேற்றி, அரசியல் யாப்பைத் திருத்தி அமைத்து மாகாண சபையின் அதிகாரங்களை விரிவாக்கி முன்னோக்கிச் செல்வதற்கான ஒரு திட்டத்தினை நாம் சந்திரிகா அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம்.

அவ் அரசியல் யாப்பு திருத்தத்தில்
* பூரண காணி அதிகாரம், * மாகாண பொலீஸ் அதிகாரம்,
* மாகாண அபிவிருத்திக்கான நிதிமூலங்களை வெளிநாடுகளில் இருந்து நேரடியாகப் பெறுதல்.
போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடங்கியிருக்கும்.

மூன்றாவது கட்டமாக, முன்னைய இரண்டு கட்டங்களிலும் இணக்கம் காணப்பட்டிராத எஞ்சிய விடயங்கள் பற்றி, குறிப்பாக, தமிழ் பேசும் மக்களின் மாகாண சுயாட்சிக்குரிய அம்சங்கள் பற்றி பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளுதல் என்பதை முன்வைத்துள்ளோம். அதற்கான நிபந்தனைகளாக,
* யுத்த நிறுத்தம் ஒன்றினை ஏற்படுத்தல், * வெளிநாட்டு மூன்றாம் தரப்பு மத்தியத்துவம்,
* தமிழ் பேசும் மக்கள் சார்பில் புலிகள் அடங்கலாக ஏனைய அனைத்து தமிழ் பேசும் ஜனநாயகக் கட்சிகளும், சிங்கள மக்கள் சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியாகியன பங்குபற்றுதல். என்பவற்றை முன்வைத்துள்ளோம்.

இக்கட்டத்தில் பேசிமுடிவு செய்யவேண்டிய விடயங்களாக:-
அ) இலங்கையில் ஒற்றையாட்சி முறையை அகற்றல்,
ஆ) வடக்கு - கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கல்,
இ) இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தினை சுயாதிக்கமுடைய "ஈழ மண்டலமாக" பிரகட-னப்படுத்தல்,
ஈ) ஈழமண்டலத்துக்கு விசேஷ அதிகாரங்களை வழங்குதல்,
உ) இலங்கையின் மத்திய அரசில் தமிழ் பேசும் மக்களின் பங்கு,
ஊ) இலங்கையின் பாதுகாப்புப் படையில் தமிழ் பேசும் மக்களின் பங்கு,
என்பவற்றை இனம் கண்டுள்ளோம்.

ஈ.பி.டி.பியினால் முன்வைக்கப்பட்ட நடைமுறை சாத்தியமான மூன்று கட்டத் தீர்வில் முதல் இரண்டு கட்டங்களையும் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் கொள்ளைகஅளவில் ஏற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் எமது முதலாவது கட்டக் கோரிக்கையை சிறிது மாற்றம் செய்து வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறும் வரை அம்மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

இரண்டாம் கட்டத்தை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா வெற்றி பெற்றதும் நடைமுறைப்படுத்துவதாக எமக்கிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

எமது திட்டத்தின் முதலாவது கட்டமான இடைக்கால நிர்வாக சபையை நாம் முன்னின்று நடத்துவோம். இரண்டாவது கட்டத்தையும் மூன்றாவது கட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு சந்திரிகா அவர்கள் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறவேண்டியது அவசியமானது.

எனவே தமிழ்பேசும் மக்கள் அனைவரும் எமது வேண்டுகோளை செவிமடுத்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பதற்கு தமது வாக்குப் பலத்தை பிரயோகிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

உங்களுக்காக வாதாடவும், போராடவும் ஈ.பி.டி.பியின் அரசியல் பலத்தையும், பேரம்பேசும் சக்தியையும் அதிகரிக்கவும் வாக்களிப்பீர்கள் சந்திரிகா அவர்களுக்கு.

**நன்றி.**
**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)**
**யாழ். மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரங்கள்

### வீடு விற்பனைக்கு

மீசாலை தெற்கில் புகையிரத நிலையத்திற்கும் புத்தூர்ச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் 3 1/2, பரப்பில் உள்ள கல்வீடு, மலசலகூட, நல்ல தண்ணீர்க் கிணற்றுடனும் பல பயன்தரு மரங்களுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- த.சிவகுரு, மீசாலை தெற்கு, மீசாலை. (71425)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி(Broilar)கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.(சின்னக்கடை அருகில்) (71761)

Broiler சேவல், பேட்டுக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) (71806)

### சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, சகல யந்திரங்களுக்கும் கிரகதோஷ நிவாரணத்திற்கும் நாடுங்கள். கொழும்பில் 22 வருட சோதிட அனுபவம் பெற்ற விஸ்வ பிரம்மஸ்ரீ மா.தங்கவேல், 9,டச்சு வீதி, சாவகச்சேரி. வலிகாமம் வடமராட்சி அன்பர்கள் முன் அறிவித்து வந்தால் சிரமமிராது. ஞாயிறு விடுமுறை. (71776)


ஜெ

6

?

(C/10183)


## கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஜனவரி முதல் செயற்படும்

கடந்த 16 வருடங்களாக மூடப்பட்டிருந்த யாழ்.கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதியிலிருந்து மீண்டும் செயற்படவுள்ளது.

கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்திருந்த இந்தப் பயிற்சிக் கல்லூரியின் கட்டடம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இக்கல்லூரி ஆரம்பமாகும் தினத்தில் கூட்டுறவுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பயிற்சி வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இரண்டு வகுப்புகளில் 80 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று கூட்டுறவுச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

### உருளைக்கிழங்கு பறிமுதல்

விற்பனை செய்வதற்காக பளைப் பொதுச்சந்தைக்கு நேற்றுமுன்தினம் எடுத்துவரப்பட்ட விதை உருளைக் கிழங்கு விற்பனை செய்யப்படாமல் தடுக்கப்பட்டது. விதை உருளைக் கிழங்கு சந்தையில் விற்பனைசெய்வது கண்டுபிடிக்கப்பட்டால் உணவு சட்டத்தின்கீழ் அவை பறிமுதல் செய்யப்படும் என்று பளை பொதுச் சுகாதார பரிசோதகர் க.கர்ணன் தெரிவித்துள்ளார்.



## 45 ஆம் நாள் கண்ணீர் நினைவலை

மலர்வு 12 - 12 - 1944



உதிர்வு 04 - 11 - 1999

### திருமதி சண்முகம் செல்லம்மா

குடும்பத்தின் குல விளக்காய்
இல்லத்தின் ஒளிச்சுடராய்
சுடர்விட்டுப் பிரகாசித்த - அம்மாவே!
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்?
கண்ணை இமை காப்பது போல்
ஐவீரையும் காத்த அன்னையே...எம்மை
அனாதையாக விட்டுப் பிரிப்பதற்கு
காலனுக்கும் மனசு வந்துதோ - இன்று
ஆதரிப்பார் யாருமின்றி அல்லற்படுகின்றோம்
எம்மைக்காக்க எப்போது ஓடிவருவாயம்மா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆயுள் உள்ளவரை ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

அன்பின் நினைவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

56/22, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம். (71737)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1965 - 03 - 01



உதிர்வு 1998 - 12 - 28

### திருமதி வசந்தகுமாரி நின்மதிராஜா

(ஆசிரியை - யா/ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயம்)

திதி:- 1999-12-18

விதி வரைந்த பாதையிலே பயணம் தொடர்ந்ததனால்
கதியிழந்த நிலையில் நாம் கலங்கி நிற்கின்றோம்
மண்ணுலகில் நீ வாழ்ந்தது போதுமென்று
விண்ணுலகம் நோக்கி விரைந்து சென்றாயோ
தாங்கொணாத் துயரத்தில் தவிக்கின்ற நிலையில்
நீங்காத நினைவுடன் எந்நாளும் வாழ்கின்றோம்.

அன்புக் கணவன், பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

செம்பியன்பற்று வடக்கு,
தாளையடி. (71816)

## ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து

19-12-1999



### செல்வி ஜனனீ தேவகுமாரன்

தேவகுமாரன் தங்கராணி தம்பதிகளின்
செல்வப் புதல்வி ஜனனீ

நாளையதினம் (19-12-1999) ஞாயிற்றுக்கிழமை தனது ஐந்தாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா, அப்பப்பா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமன்மார், மாமிமார், அக்காமார், அண்ணன்மார், தம்பிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வி ஜனனீயை ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருளால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

'REX PHOTO' உரிமையாளர்.
இல. 606, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(C/10211)

## நிள்மா

நறுமணச் சொட்டு நீலம்




ஜப்பானிய கட்டமைப்புக்கு அமைய சர்வதேச தரத்திற்கேற்ப நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நறுமணம் கொண்ட சொட்டு நீலம் நிள்மா.

இது ஆடைகளில் காணப்படும் பழுப்பு நிறத்தை விரட்டியடித்து ஒளிவீசும் பிரகாசமான வெண்மையை தருவதுடன் ஆடைகளுக்கு மிருதுவான தன்மையைத்தந்து ஆடைகளின் பாவனையை நீடித்துத் தருகிறது.

ஒரு லீட்டர் நீருக்கு நிள்மா 4/5 துளிகள் வீதம் இட்டு கலக்கிய பின் சலவை செய்து பிழிந்த நிலையில் உள்ள ஆடைகளை நிள்மா நீரில் ஒவ்வொன்றாக இட்டு உங்களுக்கு தேவையான வெண்மைக்குக்கேற்ப அலசிய பின் நன்றாக பிழிந்து நிழலில் காயவிடவும்.

இப்போது முற்றும் புதியவை போன்ற தோற்றமுடைய ஒளி வீசும் பிரகாசமான வெண்ணிற ஆடைகள் உங்கள் கைகளில்.



சந்தைப்படுத்துவோர்
ஏஜே டிரேடிங் கொம்பனி
95,ஜெயந்த வீரசேகர மாவத்தை
கொழும்பு 10 தொலைபேசி: 458699

இணையற்ற தூய அன்புக்கு அம்மா, ஒளிமயமான வெண்மைக்கு நிள்மா.

யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்

**CITY AGENCY**
No. 158, STANLEY ROAD
JAFFNA.
T.P :- 021-2202 / 021-2991 / 021-2911

**S.V.M**
No. 154, HOSPITAL ROAD,
JAFFNA.
T.P :- 021-2055 / 021-2100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலுக்குச் செல்ல அனுமதி மறுப்பு

# கடலில் கைவிட்ட தம் வலைகளை மீனவர்கள் எடுக்கமுடியாத நிலை

குருநகர்,டிசெ.18

குடாக்கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவரும் குருநகர் மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இப்பகுதிக் கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் மீன்பிடி வள்ளங்கள் குருநகர் இறங்குதுறையில் விடப்பட்ட நிலையில் உள்ளன. அத்துடன் மீனவர்களின் வலைகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து கடலிலேயே விடப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். பட்டி வலைகள் பாதிப்படையாவிட்டாலும், டிஸ்கோ வலைகள் கடலில்அள்ளுண்டு போகக் கூடிய ஆபத்து உள்ளது எனவும் -

அவை பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையேற்படலாம் எனவும்-

மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு விடப்பட்டுள்ள வலைகள் கடலில் அள்ளுண்டு, மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ள கடற்பகுதியினுள் சென்றால் அவ் வலைகளை மீட்கமுடியாமல் போகலாம் எனவும் மீனவர் சங்கங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமையின் பின்னர் தினமும் காலையில் குருநகர் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கு அனுமதிபெறுவதற்காக குருநகர் இறங்குதுறைக்குச் செல்வதாகவும்-

இராணுவத்தினர் தொடர்ந்து அனுமதிவழங்க மறுத்து வருவதாகவும்-

மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-51)

### கைதான மூவர்விடுவிப்பு

படையினரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட மூவர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டதாக மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல்வம் ஜெயலதா (வயது 34- மயிலங்காடு), பொன்னையா ரவிக்குமார் (வயது 30 - மயிலங்காடு), திரவியம் ஜெயரட்ணம்(வயது 29 -பருத்தித்துறை ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவார். (ஐ-5)

# தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க முடிவு

அரசாங்க சேவையில் கனிஷ்டதரங்களில் உள்ள தற்காலிக, அமைய மற்றும் பதிலீட்டு ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக, கூட்டுறவு அபிவிருத்தி, வீதிஅபிவிருத்தி அமைச்சின் செயலாளர் க.பரமலிங்கம் சுற்றறிக்கைமூலம் அனைத்து திணைக்களத் தலைவர், செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

மேற்படி நிலையில் உள்ள ஊழியர்களின் விவரங்களை தகுதி விதிகளின் அடிப்படையில் தெரிவுசெய்து, எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

1-11-1999 அன்று மேற்படி ஊழியர்கள் 180 நாள்கள் பணிபுரிந்திருப்பதுடன் இணைந்த சேவையை சேர்ந்தவர்களாகவும் இருந்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்களின் பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ், நியமனக்கடிதம், வரலாற்றுத்தாள் என்பனவற்றை நாளைய தினத்துக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் செயலாளர் கேட்டுள்ளார். (உ-185)

### இடமாற்றம்

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் அலுவலகம் கே.கே.எஸ். வீதியில் உள்ள யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாடிக்கட்டடத் தொகுதியில் கடந்த செவ்வாய்முதல் இயங்கி வருகின்றது. இதுவரைகாலமும் யாழ்.சோமசுந்தரம் வீதியில் உள்ள அலுவலகத்தில் இயங்கிய பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலகம், யாழ்.வேம்படி கல்லூரிக்கு அருகில் இயங்கிய வெளிநாட்டு தொலைத்தொடர்பு பிரிவு என்பனவும் இந்தப் புதிய இடத்துக்கே இடமாற்றப்பட்டுள்ளன. (ஐ-17)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




காலம் : 02/01/2000 → 08/01/2000
நேரம் : 9.00 AM → 1.00 PM

மிலேனியம் ஆண்டை வரவேற்கும் உங்களை **STP COMPUTER WORLD** புதியதோர் கணனி உலகிற்கு அழைத்துச் செல்வதில் பெருமையடைகின்றது.

- கணனியென்றால் என்ன? அதன் செயற்பாடுகள் பிரயோகங்கள் என்ன? என்ன? யாவையும் ஒரு நாளிலேயே அறிந்து தெளிவுபெறவேண்டுமா?
- "கணனிகளின் இயக்கங்கள் நின்றுவிட்டால் இப்புவிதனின் செயற்பாடுகளும் குன்றிவிடும்" உண்மையா?
- இன்றைய உலக அரங்கில் பரிணமித்திருக்கும் தகவல் தொழில் நுட்பங்களில் பொதிந்திருக்கும் விழுமியங்களை அறிந்துகொள்ளவேண்டுமா?

ஒருவர் தனது தகுதிக்கேற்றவகையில் அல்லது தொழிலுக்குகந்தவகையில் எவற்றை கணனியில் கற்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ளவேண்டுமா?

**STP** இன் கருத்தரங்கில் உங்கள் மனதினில் தோன்றும் வினாக்களுக்கான விடைகள் தெளிவுபடுத்தப்படும்.

இக்கருத்தரங்கில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு விடயங்களும் STP இன் பட்டதாரி விரிவுரையாளர்களினால் எல்லாத்தரப்பினரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சிறந்த முறையில் பரிந்துரைக்கப்படவுள்ளன.

தொடர்ச்சியாக 7 நாட்களுக்குத் நடைபெறும் இக் கருத்தரங்குத் தொடரில் உங்களுக்கு வசதியான ஒரு நாளைத் தேர்ந்தெடுக்கலாம்.

தினமும் குறித்த தொகையினர் மட்டுமே உள்ளடக்கப்படவுள்ளதால் உங்கள் பதிவுகளை முற்கூட்டியே உறுதி செய்துகொள்ளுங்கள்.

குறிப்பு: இக்கருத்தரங்கு கணனியில் நேரடியான செய்முறை விளக்கங்கள் (**Internet & e-mail** உள்ளடங்கலாக) கொண்டதாக அமையும்.

- இக்கருத்தரங்கில் பங்கு கொள்வதற்கான உங்கள் பதிவுகளை நேரடியாக எமது காரியாலயத்திலோ அல்லது கீழ்க்காணும் படிவ மாதிரியை நிரப்பி Director, STP Computer World, 54A, Palaly Road, Kantharmadam, Jaffna என்னும் முகவரிக்கு 28/12/1999 இற்குமுன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைப்பதன் மூலமா கவோ உறுதிசெய்து கொள்ளலாம்.

### விண்ணப்பப் படிவம்:

விண்ணப்பப் படிவம்
-கருத்தரங்கு-

முழுப்பெயர் : ..............................
அடையாள அட்டை இல. : ..............................
முகவரி : ..............................
: ..............................
கல்வித் தகமை / தொழில் : ..............................
கலந்துகொள்ளும் திகதி (புள்ளடியிடுக)

| 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

---

# STP Computer World

அறிமுகப்படுத்தும் முதலாவது

## சிறப்புப் புலமைப்பரிசில் திட்டங்கள்

STP Computer World முதல் தடவையாக அறிமுகப்படுத்தும் சிறப்புப் புலமைப்பரிசில் திட்டங்கள் எல்லா மாணவர்களும் தத்தமது தகுதிக்குட் பட்டவர்களிடையே போட்டியிட்டுத் தங்கள் திறமைகளை வெளிக்காட்டக் கூடியவகையில் இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

பிரிவு 1 - சிறுவர்களுக்கானது (10 வயது தொடக்கம் 16 வயதுவரை).
பிரிவு 2 - உயர்நிலை மாணவர்கள் / உத்தியோகஸ்தர்களிற்கானது. (16 வயதிற்கு மேற்பட்டோர்).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பிரிவுகளிற்கும் வேறுவேறான இரண்டு போட்டிப்பரீட்சைகள் நடாத்தப்பட்டும். இவற்றில் தகுதிபெறும் மாணவர்கள் இங்கு காணப்படும் கற்கை நெறிகளில் ஏதாவதொன்றைத் தெரிவு செய்யமுடியும்.

குறிப்பு: பிரிவு 1 இல் உள்ளடக்கப்படுபவர்கள் Basic Computer Applications எனக் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறியினை மட்டுமே பயில அனுமதிக் கப்படுவர்.

இப் பரீட்சைகளுக்கான உங்களது விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தையோ அல்லது இங்கே காணப்படும் படிவத்தையோ அல்லது படிவ மாதிரியையோ பூரணப்படுத்தி 100/= பரீட்சைக் கட்டணத்துடன் நேரடியாக எமது காரியாலயத்தில் ஒப்படைக்கலாம். தபால் மூலமாக அனுப்ப விரும்புவோர் Director, STP Computer World எனப் பெயரிடப்பட்ட பணம் பெறும் நிலையம் Post Office – Jaffna எனக் குறிப்பிடப்பட்ட காசுக்கட்டளையை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 20/01/2000**

மேலதிக விபரங்களுக்கு...

**STP Computer World**
**54A, Palaly Road, Kantharmadam, Jaffna.**

**Diploma in Ms Office**
- Introduction to Windows 95/98 / NT
- Microsoft Word 97/2000
- Microsoft Excel 97/2000
- Microsoft PowerPoint 97/2000
- Microsoft Access 97/2000
- Microsoft Outlook 97/2000

**Duration 6 Months**

**Diploma in Computer Studies**
- Fundamentals of Computer studies
- Programming Technology & Structured Programming
- Introduction to Windows 95/98 / NT
- Microsoft Word 97/2000
- Microsoft Excel 97/2000
- Microsoft Access 97/2000
- Visual Basic Programming
- Software Installation

**Duration 8 Months**

**Diploma in Desk Top Publishing**
- Adobe Page Maker
- Corel Draw
- Photo Shop
- Free Hand Drawing
- Handling Scanner & Digital Camera

**Duration 5 Months**

**Diploma in Computer Science ?**
- Fundamentals of Computer Studies
- Programming Technology & Structured Programming using **Pascal for Windows**
- Object Oriented Programming using C++
- Logical Programming using Win Prolog
- Database Management System using **MS Access / Visual FoxPro**
- Information Technology & System Analysis
- Network Program using Java Symantec Cafe

**Duration 12 Months**

**Advanced Diploma in Programming**
- Introduction to Windows 95/98 / NT
- Visual Basic
- Visual Fox Pro
- Visual C++
- Java Symantec Cafe

**Duration 10 Months**

**Diploma in Computer Hardware**
- Introduction to Computer
- Introduction to Operating system (DOS/ Windows)
- PC Assembling & Cards Installation
- Cabling Connection & Network Configuration (Windows NT)
- Trouble Shooting Computer

**Duration 5 Months**

**Basic Computer Applications (Specially for Children)**
- Introduction to Computer Components & Operations
- Drawing techniques & Graphical Usage
- Typing & Printing methods
- Spread Sheet calculations & Charting Techniques
- Multimedia applications
- Games & Internet Usage

**Duration 4 Months**

## STP Computer World
### சிறப்புப் புலமைப்பரிசில் திட்டம் - 2000
### மாதிரி விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
: ..............................
அடையாள அட்டை இலக்கம் : ..............................
பிறந்த திகதி : ..............................
கல்வித் தகமைகள் : ..............................
பால் : ஆண் [ ] பெண் [ ]
பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பிரிவு : பிரிவு 1 [ ] பிரிவு 2 [ ]
காசுக்கட்டளை இலக்கம்: .................. அஞ்சல் அலுவலகம் : ..................

.............................. ..............................
திகதி கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை நிறுத்துவோம்! உரிமையை வென்றெடுப்போம்!






(1) யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்பதுதான் சந்திரிகாவின் சூளுரை.

(2) யாழ் மண்ணை மீட்டெடுத்து எம்மை நிம்மதியாக வாழவைத்தது சந்திரிகாவே!

(3) இருட்டிலே வாழ்ந்த எமக்கு மின்சாரம் தந்து கல்வி, போக்குவரத்து, தொலைபேசி வசதிகள் செய்து தந்தது சந்திரிகாவே!

(4) நிவாரணம், தட்டுப்பாடில்லாது பொருள்கள், வைத்தியவசதிகள் செய்து தந்ததும் சந்திரிகாவே!

(5) கொழும்பு செல்லாது இங்கிருந்தபடியே எமது வெளிநாட்டு உறவினருடன் பேசி இங்கேயே பணத்தையும் பெற்றுக்கொள்ள வைத்ததும் சந்திரிகாவே!

(6) யுத்தம் நடக்கும் பிரதேசத்துக்கும் உணவும் மருந்தும் அனுப்பி போராளிகளுக்கும் உதவுகின்ற உலகின் முதலாவது அரசின் தலைவி சந்திரிகாவே!

(7) குற்றவாளிக் கூண்டில் தன்னையே ஏற்றி சர்வதேச நிபுணர்கள் முன்னிலையில் செம்மணி புதைகுழி விசாரணையை நடத்தி உலகுக்கு ஜனநாயகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டிய அரசின் தலைவி சந்திரிகாவே!

(8) எம்முடைய உண்மையான நிலையை தெற்கிலேயுள்ள மக்களுக்கு நாளிலும் பொழுதிலும் உணர்த்தி அவர்களை நன்கு உணர வைத்தது சந்திரிகாவே!

(9) 21ம் நூற்றாண்டின் புதுயுகத்தின் தலைவி சந்திரிகாவே!

(10) நாடு பூராவும் பயப்பிராந்தியில் வாழ்ந்த இலங்கை மக்களை இருண்டயுகத்திலிருந்து மீட்டெடுத்த வெற்றித்திருமகள் சந்திரிகாவே!

(11) அறிவுச் சூனியத்திலிருந்து யாழ் மக்களை விடுவிக்க, ஊடகங்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கியதுடன், தினசரிகள், சஞ்சிகைகளை தாராளமாக உலாவவிட்டது சந்திரிகாவே!

(12) மொத்தத்தில் தமிழினத்தை தன்மானத்துடன் வாழ வைக்கக்கூடிய தலைவி சந்திரிகா மட்டுமே.

## ஸ்ரீ.ல.சு.கட்சி யாழ். மாவட்டம்

(10200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

குடாநாட்டு மக்கள் அடிக்கடி அலுத்துக் கொள்ளும் விவகாரம் - மின் வெட்டு.

ஒரு நாளுக்கு நாலு தடவையாவது 'பவர் கட்' ஆகி, மக்களின் வெறுப்புக்கு ஆளாகாவிட்டால் விடியாது என்ற நிலைமை இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேசப் பிரிவுக்கு.

மின்வெட்டினால் ஏற்படும் மக்களின் சீற்றத்தை எதிர்கொள்ளும் பொறுப்பு யாருடையது என்பதில் மின்சார சபைக்கு உள்ளேயே இழுபறி இருப்பதாகத் தெரிகிறது.

மின்சார விநியோகம் தடைப்படும் நேரங்களில் மக்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் என்று தெரிவித்து, இடங்கள் ரீதியாக ஆறு பகுதிகளைக் குறிப்பிட்டு, அங்குள்ள மின்சார அத்தியட்சகர் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களை கடந்த 9ஆம் திகதி பத்திரிகை மூலம் மின்சாரசபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் விளம்பரப்படுத்தியிருந்தார்.

இந்த விளம்பரமே மின்சாரசபை அதிகாரிகள் மட்டத்தில் சலசலப்பை உண்டு பண்ணியிருக்கின்றது.

குடாநாட்டுக்கான மின்சாரம் காங்கேசன்துறையில் உள்ள 'கூல் ஏயர்' நிறுவன மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும், சுன்னாகத்தில் உள்ள இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும் பெறப்படுகின்றது.

மின் உற்பத்திக்கு ஏற்றவாறு குடாநாட்டுக்கான மின் விநியோகத்தைத் திட்டமிடுவதும் அதற்கேற்ப மின் வெட்டைத் தீர்மானிப்பதும் சுன்னாகத்தில் உள்ள யாழ்மாவட்ட மின் பொறியியலாளர் அலுவலகம்.

அந்தத் தீர்மானத்துக்கு அமைய மின்வெட்டை அமுல்படுத்துவது சுன்னாகம் மின்நிலையத்தின் பொறியியலாளர்தான். (அங்கிருந்துதான் யாழ். குடாநாட்டுக்கான மின் விநியோக மார்க்கங்கள் ஆரம்பமாகின்றன).

என்றாலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் ஏனைய நாள்களில் மாலை 5 மணியிலிருந்து காலை 8 மணிவரையிலும் யாழ்.மாவட்ட மின் பொறியியலாளர் அலுவலகம் இயங்காது என்பதால் அந்தச்சமயங்களில் திட்டமிடுவதும், அவசரத்துக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுப்பதும், அவற்றை அமுல்படுத்துவதும் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையமே.

இந்த அடிப்படையில் -

பொதுவாக குடாநாட்டில் மின் வெட்டு மற்றும் மின் விநியோகம் சம்பந்தமான திட்டங்கள், முடிவுகளை தீர்மானிப்பது

(அ) 'கூல் ஏயர்' உற்பத்தி நிறுவனம்
(ஆ) சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம்
(இ) யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம் -ஆகியவைதான்.

ஆனால் மின்வெட்டு, மின் தடை விவரங்கள் குறித்து மக்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் பற்றிய விளம்பரத்தில் இந்த அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள் இல்லை.

ஆங்காங்கே உள்ள மின்சார சபையின் அத்தியட்சகர் அலவலகங்களில் அந்தந்தப்பகுதியில் மின் விநியோகத்தில் ஏற்படும் பாதிப்பு, சீர்கேடு, மின்மாற்றிகள் - எல்.வி. விநியோகத்தில் ஏற்படும் மின்தடைகள் ஆகியவை தொடர்பாக முறைப்பாடுசெய்து நிவாரணம் பெறலாமே தவிர மின்வெட்டு, மின்தடை ஆகியவை தொடர்பாக சரியான விளக்கத்தையோ நிவாரணத்தையோ பெறமுடியாது. ஏனெனில் மின்வெட்டுக்கும் இந்த அலுவலகங்களுக்கும் தொடர்பே இல்லை.

ஆனால் மின்தடைப் பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் பற்றிய விளம்பரத்தில், பதில் கூறவேண்டிய உயர் மட்ட அலவலகங்களின் தொலைபேசி இலக்கங்களைத் தவிர்த்துவிட்டு, சரியான பதிலைத் தரமுடியாத கீழ்மட்ட அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களை மட்டும் பிரசுரித்தது ஏன்? யாரோ திட்டமிட்டு செயற்படுத்தும் ஏற்பாடுகளுக்கு அவர்கள் பதிலளிக்காமல் தவிர்த்து, வேறு அதிகாரிகளை பொதுமக்கள் முன் நிறுத்தி அவர்களை மாட்டிவிடும் ஏற்பாடா இது என்று சில அதிகாரிகள் கேட்கின்றனர்.

"மின்சார சபையைப் பொறுத்தவரை 'மின்தடை', 'மின்வெட்டு' என்ற பதங்கள் குறிக்கும் அர்த்தங்கள் வேறு. "நாங்கள் 'மின்தடை' குறித்து விசாரிக்கும் இடங்கள் பற்றியே விளம்பரம் செய்துள்ளோம். 'மின்வெட்டு' குறித்து விசாரிக்கும் இடங்களை விளம்பரப்படுத்தவில்லையே. எனவே அது சம்பந்தமான அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களையே குறிப்பிட்டுள்ளோம்" - என்று மின்சாரசபை அதிகாரிகள் விளக்கம் கூற முற்படலாம்.

ஆனால் பொதுமக்களைப் பொறுத்தவரை 'மின் தடை', 'மின்வெட்டு' - வேறுபாடு எல்லாம் அவர்களுக்குத் தெரியாது. வீட்டுக்கு மின் விநியோகம் இல்லாவிட்டால் அது 'பவர் கட்' என்பதுதான் மக்களின் நிலை.

அத்தோடு குடாநாட்டில் இப்போது அடிக்கடி ஏற்படும் 'பவர் கட்'டிற்கு பெரும்பாலும் காரணம் மின்வெட்டுத்தான்.

எனவே 'மின்வெட்டு' விவரங்களை அறிந்து கொள்வதும், எப்போது மீண்டும் மின்விநியோகத்தைத் தருவார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதுமே பொது மக்களின் முக்கிய பிரச்சினை.

அதனை ஆங்காங்கே உள்ள மின் அத்தியட்சகர் அலுவலகங்களில் இருந்து அறிந்து கொள்ள முடியாது என்பதால், சம்பந்தப்பட்ட அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களை நாமே தருகின்றோம்:-

* 'கூல் ஏயர்' - 070-212264
* சுன்னாகம் உற்பத்தி நிலையம் - 070-212218
* யாழ். மாவட்ட மின் பொறியியலாளர் அலவலகம் - 070-212261 மற்றும் 021-3002.

இனி விடயங்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அறிந்து கொள்வது பாவனையாளர்களின் சாமர்த்தியம்!

* * *

சபையின் முன் அனுமதியின்றி உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவர் மூன்று மாதங்கள் தொடர்ந்து சபைக் கூட்டத்துக்கு வராவிட்டால் தாமாகவே பதவியிழந்தவாராகி விடுவார் என்பது சட்டம்.

தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு சபையே கூடாவிட்டால்...? உறுப்பினர்கள் அனைவரும் பதவி இழந்தவர்களாகி விடுவார்களா என்பதுதான் கேள்வி. சட்ட அறிஞர்கள் தீர்வுகாணவேண்டிய சிக்கல் இது.

யாழ். மாநகர சபையும் கூட இந்தச் சிக்கலில் சிக்குப்பட்டு நிற்கின்றது.

யாழ். மாநகரசபையின் மாதாந்தக்(?) கூட்டம் கடைசியாக நடைபெற்றது செப்ரெம்பர் 10ஆம் திகதி. கடந்த 10ஆம் திகதியுடன் மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. உறுப்பினர்கள் இனியும் பதவி வகிக்கலாமா என்பதுதான் கேள்வி.

இப்போது - மூன்று மாதங்கள் கழிந்த பின்னரும்கூட - சபையின் கூட்டம் கூடுமா என்பது தெரியவில்லை.

கொழும்பில் 'டோரா' போட்டபடி, யாழ்ப்பாணத்தில் மாநகரசபையை நடத்தும் கூட்டணி உறுப்பினர்கள், நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வரவும், கூட்டத்தை நேற்று நடத்தவும் ஏற்பாடாகியிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள சபையின் ஏனைய கட்சி உறுப்பினர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

ஆனால் இறுதி நேரத்தில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது; கூட்டணி உறுப்பினர்களும் வரவில்லை. இனி அடுத்த 24ஆம் திகதி கூட்டம் நடைபெறும் என்று தற்போது தெரிவிக்கப்படுகின்றது. அன்றும் அது நடைபெறுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

யாழ். மாநகரசபைப் பதவி மூலம் கிடைத்த வாகன மற்றும் வசதிகளைக் கொழும்பில் பயன்படுத்திக் கொண்டு, யாழ். மாநகரசபைக்கு நிதிவசதி போதாது என்று தெரிவித்து கொழும்பில் மாகாணசபை அமைச்சுக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்தி, தமது விலாசத்தைப் பரப்பும் இவர்கள் ஏன் யாழ்ப்பாணம் வரப் பின்னடிக்கின்றார்கள்? வரமுடியாது விட்டால் பதவியை விட்டு விடலாமே!

* * *

ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்துள்ளது - யாழ்ப்பாணத்தில்.

பிரசாரம் பெரும்பாலும் போஸ்டரில்தான்!

இந்தப் போஸ்டர் பிரச்சாரம் பல பொதுமக்களையும் சீற்றமுற வைப்பதில் போய் முடிந்திருக்கின்றது.

வீதிகளில் புதிதாகப் 'பெயின்ட்' அடித்து துலக்கமாக வைத்திருந்த் சுவர்களில் எல்லாம் கேட்டுக் கேள்வியின்றி தம்பாட்டில் கைவரிசையைக் காட்டியிருக்கின்றார்கள் போஸ்டர் ஒட்டும் ஆள்கள்.

இப்படிப் பலவந்தமாக ஒட்டப்பட்ட போஸ்டர்களைக் கிழிப்பதற்கும் வீட்டுக்காரர்களுக்குப் பயம் - 'பிறகு சாத்துவேண்ட வேண்டியிருக்குமோ என்றுதான் அச்சம்.

'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் வாசல் சுவர்களிலும் இப்படிப் பலவந்தமாக ஒட்டுதல் நடவடிக்கை இடம்பெற்றது. "பத்திரிகை அலுவலகம் இது. இங்கு ஒட்டாதீர்கள்!"என்று தடுத்துப் பார்த்த பத்திரிகை அலுவலகப் பாதுகாவலர்களின் சொல் எடுபடவில்லை. இயக்கப் பாணியில் வந்த அணியினர் அது "மேலிடத்து உத்தரவு" என்று தெரிவித்து பலவந்தமாக போஸ்டர்களை ஒட்டிச் சென்றனர். அலுவலக ஊழியர்களால் அவை உடனேயே கிழித்தெறியப்பட்டன.

போஸ்டர் ஒட்டும் பணி எவ்வளவு 'பொறுப்பாக' நடைபெற்றிருப்பது என்பதனைப் பார்க்கவேண்டுமானால், 'உதயன்' அலுவலகத்துக்குப் பக்கத்தில் நாவலர் வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்தியில், அண்மையில் கட்டப்பட்டு, புதிதாகப் 'பெயின்ட்' அடிக்கப்பட்ட சுவரைப் பார்த்தால் தெரியும்.

"பிரச்சாரத்துக்குப் போஸ்டர் ஒட்டுகிறோம்" என்று கூறிக்கொண்டு இவர்கள் ஒட்டும் போஸ்டர்கள், கிடைக்கக் கூடிய வாக்குகளையும் எதிராகத் திருப்பும் என்பது இந்தப் 'பிரசார ஏஜெண்டு'களுக்குரிய புரியாதது வியப்புத்தான்.

-மின்னல்

# தென்மராட்சியில் வியாழன் வரை 5,909 பேர் இடம்பெயர்வு

தென்மராட்சி,டிசெ.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் 13 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளோரின் எண்ணிக்கை விபரங்களை பிரதேச செயலகம் திரட்டி வருகிறது. அதன்படி நேற்று முன்தினம் காலைவரை சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆயிரத்து 485 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 909 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம்பெயர்ந்த குடும்பங்களினதும், உறுப்பினர்களினதும் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

* தனங்களப்பு -145 குடும்பங்களைச் சேர்ந்த 543 பேர்.
* மறவன்புலோ - 333 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 135 பேர்.
* கைதடி நாவற்குழி - 222 குடும்பங்களைச் சேர்ந்த 945 பேர்.
* நுணாவில் கிழக்கு - 70 குடும்பங்களைச் சேர்ந்த 359 பேர்.
* சாவகச்சேரி நகரம் - 22 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேர்.
* கொடிகாமம் வடக்கு - 65 குடும்பங்களைச் சேர்ந்த 245 பேர்.
* கச்சாய் - 28 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேர்.
* கோவில் குடியிருப்பு 250 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 100 பேர்.
* கொடிகாமம் மத்தி - 50 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேர்.
* கோகிலாக்கண்டி - 120 குடும்பங்களைச் சேர்ந்த 707 பேர்.
* அல்லாரை - 35 குடும்பங்களைச் சேர்ந்த 160 பேர்.
* கொடிகாமம் தெற்கு - 07 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேர்.
* கரம்பகம் - 38 குடும்பங்க ளைச் சேர்ந்த 164 பேர்.

பாடசலைகள்,கோயில்கள், பொது அமைப்புக்களின் அலுவலகங்களில் இவர்கள் தங்கியுள்ளதாக [illegible] தென்மராட்சி பிரதேசசெயலர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## சவரிமுத்து பேரின்பநாதன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம், பருத்தித்துறை)

எமது சக உத்தியோகத்தர் சவரிமுத்து பேரின்பநாதன் அவர்களின் அகால மரணத்தை அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக உத்தியோகத்தர்கள்,
வீதிஅபிவிருத்தித் திணைக்களம்,
பருத்தித்துறைப்பிரிவு.

(71843)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி உதயபுத்திரன் றாதா

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரம் வண்ணாம்புலத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில்கிழக்கு ஞானவைரவர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட உதயபுத்திரர் றாதா அவர்கள் 15-12-1999 இல் வவுனியா குடியிருப்பு ஆஸ்பத்திரி சுற்றுவட்டார வீதியில் உள்ள தமது இல்லத்தில் காலமானார்.

அன்னார் உதயபுத்திரனின் (புகையிலை வியாபாரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் கந்தசாமி, பரிபூரணம் ஆகியோரின் பாசமிகு மருமகளும் வினோஜா, உஷாநந்தினி, தாட்சாயினி, சைலஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் றதி (ஜேர்மனி), றமணி, தவராஜா, யோகராஜா (பிறின்ஸ் ஹோட்டல்), ராகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லம்மா, காந்தமலர், காந்திமதி ஆகியோரின் பெறாமகளும் நவரட்ணம் (கொழும்பு), சுப்பிரமணியம் (சுவிஸ்), சிவபாதசுந்தரம் (பிறின்ஸ் ஹோட்டல் - வவுனியா) ஆகியோரின் அன்பு மருமகளும் புஸ்பா, விஜயலட்சுமி, அருளானந்தம் (கனடா) இன்பா, கௌரி (கனடா), கலைவாணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-12-1999) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி சந்திரசேகரம் காந்திமதி**
(சிறியதாய்)

விலாசம்:-
P. சந்திரசேகரம், 66/1, அம்மன் றோட்,
கந்தர்மடம், .
யாழ்ப்பாணம்.

(71847)

## பிலிப் வேதநாயகம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சூசைப்பிள்ளையார் குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் வேதநாயகம் அவர்கள்16-12-99 இல் (வியாழன்) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பிலிப் - யுரேசியா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி விவினமுத்துவின் அன்புக் கணவரும் திருமதி மரிஸ்ரெல்லா (வவுனியா), காலஞ்சென்ற மரியதாசன் மற்றும் தேவதாஸ் (நவீல்ட் பாடசாலை, கைதடி), கெலன் (கனடா), ஜேசுதாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வராஜா (கிராம அலுவலர், வவுனியா), லோகி (கனடா), காலஞ்சென்ற சறோஜினி, ஞானானந்தன் (கனடா), ஞானராணி (கனடா), ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான மரியநாயகம், அந்தோனிப்பிள்ளை, இராசதுரை மற்றும் அமிர்தநாதன் (இளைப்பாறிய ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற காந்தி ஆகியோரின் சகோதரரும் செலாறா, ஜெனிற்றா, பபிற்றா, சஞ்சீவ், ரஜீவ், கஜீவ், விஜி, ராஜன், ராஜு, ரகு அனுசியா, சிந்தியா, குயின்சி, டீப்பா, பிரகாசினி ஆகியோரின் பேரனும், தனுஷன், நிஜே, தன்ஜா, ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18-12-99) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியுடன் வவுனியா இறம்பைக்குளம் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்**
(மகன்)
(நவீல்ட் பாடசாலை, கைதடி.)

28/1, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.
Tel No. 021-2379
024-21488

(71846)

## சின்னப்பொடியர் வள்ளிப்பிள்ளை

திருமதி சின்னப்பொடியர் வள்ளிப்பிள்ளை 1999-12-17ம் திகதி காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற சின்னப்பொடியரின் அன்பு மனைவியும், கந்தையா (இளைப்பாறிய ஊழியர், நில அளவைத் திணைக்களம்) சின்னையா, பூபாலசிங்கம், வெள்ளைப்பிள்ளை, காலம்சென்ற இலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சின்னத்தம்பி, தவமணி, காலம்சென்ற அழகம்மா, இராசலட்சுமி ஆகியோரின் மாமியாரும் சிறீஸ்கந்தராசா (சுவிஸ்), சிவநேசராசா (நோர்வே), தயாளராசா (லண்டன்), விவேகானந்தராசா (லண்டன்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), பிரணவராயன், லலிதா, பிரசாந்தன் (ஜேர்மனி), திருச்செல்வராசா (நிலஅளவைத்திணைக்களம்), மோகன், அற்புதராணி, கிருபைராணி, யோகராணி, செல்வராணி, தயாபரன், நவநீதிராசா, சிவகணேசவேல், கலாதேவி(ஆசிரியை) ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 1999-12-17ம் திகதி பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து கைதடி ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

குமரநகர், கைதடி.

(71854)

# வந்தேறுகுடிகள் என்று எம் வரலாற்றையே கேள்விக்குள்ளாக்கியோருக்கு வாக்களிப்பதா?

## ரெலோ அறிக்கை

தமிழர்களை வந்தேறுகுடிகள் என்று வர்ணித்து எம் இனத்தின் வரலாற்றையே கேள்விக்குள்ளாக்கியவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இன்றைய அவலங்களே தொடர்கதையாகும்.

ரெலோ அமைப்பின் யாழ்.அலுவலகம் ஊடாக அந்த அமைப்பின் முதல்வர் ந.சிறீகாந்தா விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, 1994 தேர்தல் காலத்தில் நாம் சந்தித்த சமாதானப்புறா ஓராண்டுக்குள்ளேயே சுயரூபம் காட்டி போர்க்கழுகாக சீற ஆரம்பித்ததன் விளைவாக எம் இனம் இன்று நாலா திசையிலும் சிதறி நிற்கின்றது.

மனித உயிர்களுக்கு மதிப்பில்லை. மனித உரிமைகள் தினமும் மிதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் இன்று சந்தேகப் பிரஜைகளே!

நள்ளிரவுச் சோதனைகள், காரணமற்ற கைதுகள், சித்திரவதைகள், சிறைக்கொடுமைகள், கற்பழிப்புகள், கொலைகள், மனிதப்புதைகுழிகள், கடலில் கொல்லப்பட்டு கரை ஒதுங்கும் சடலங்கள் என்று எமது மக்கள் அனுபவித்து வந்திருக்கும் அவலங்களின் நடுவிலே, மீண்டும் சமாதானம் - தீர்வுத்திட்டம் என்ற கோஷங்களுடன் எமது வாக்குகளுக்கு இன்று வலை வீசப்படுகின்றன.

தொடர்ந்து கொண்டிருக்கும் போரை நியாயப்படுத்தி நிற்கும் அவசரகாலச் சட்டத்தை ஆட்சிமன்றத்தில் ஒவ்வொரு மாதமும் விசுவாசமாக ஆதரித்து வந்திருப்பவர்கள் ஆளும் கட்சி வேட்பாளருக்கு ஆதரவுதேடி எமது மண்ணில் ஓடித்திரிகிறார்கள்.

இத்தனைக்குப் பின்னரும் ஆளும் கட்சி வேட்பாளரான ஜனாதிபதி சந்திரிகாவை எதிர்க்க வேறுசில தமிழர்கள் வாசுதேவநாணயக்காரவுக்கு வாக்களியுங்கள் என்று கோரி வாக்குகளை திசை திருப்பும் நோக்குடனும் "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்ற நினைப்புடனும் தம் அரசியல் கையிருப்புக்களை பாதுகாக்க முனைந்து நிற்கின்றனர்.

இந்தப்பச்சைத் துரோகத்திற்கும் பச்சோந்தித் தனத்திற்கும் நடுவினிலே ஆளும்கட்சி வேட்பாளரான ஜனாதிபதி சந்திரிக்காவை தோற்கடிப்பதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களியுங்கள் என்று நாம் எமது தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தேர்தலில் தில்லுமுல்லுகளை நிகழ்த்த ஒருசில சக்திகள் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருப்பதால், அதனை முறியடிக்கும் விதத்தில் தேர்தல் தினத்தன்று காலையிலேயே வாக்குச்சாவடிகளுக்குச் சென்று உங்கள் வாக்குகளை நேரத்துடன் அளியுங்கள் என்றும் நாம் வேண்டிக் கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நிவாரண விநியோகம் நிறுத்தப்படமாட்டாது

## ஐ.தே.க. தலைவர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.18

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் நிறுத்தப்படமாட்டாது என்று ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நான் ஜனாதிபதியானால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுவிடும் என்று வெளியான பிரசாரத்தில் எந்தவித உண்மையும் இல்லை.

"எமது அரசே முதன்முதலில் இந் நிவாரண ஒழுங்குமுறையை ஆரம்பித்தது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதைக் குறைத்துள்ளது.

நான் ஜனாதிபதியானால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசத்திலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரண உதவி வழங்கப்படும்" - என்றுள்ளது.

(உ-க-3)

# தென்மராட்சிப் பகுதியில் 7,500 பேர் இடம்பெயர்வு

தென்மராட்சிப் பகுதியில் ஆயிரத்து 840 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 497 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக தென்மராட்சி பிரதேசசெயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தனங்களப்பு,மறவன்புலோ,கைதடி நாவற்குழி, கோயிலாக்கண்டி, நாவற்குழி, கோவில் குடியிருப்பு (கச்சாய்) போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களே இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களில் பலர் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் நண்பர்கள் - உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். (உ-3-5-10)

### கழகஉறுப்பினர்களுக்கு அழைப்பு

குடாநாட்டில் நிலவும் யுத்த நிலையைக் கருத்தில்கொண்டு யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் உறுப்பினர்கள் இரத்ததானம் செய்ய முன்வந்துள்ளனர்.

யாழ்.வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் சிவசங்கரின் வேண்டுகோளின் பேரில் இரத்ததானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் -

இரத்ததானம் செய்ய விரும்பும் கழகங்களின் உறுப்பினர்களைத் தம்மிடம் பதிவு செய்யுமாறும் -

கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எஸ்.பி.ரஜீவன் கேட்டுள்ளார். (ஐ-3)

### இன்று

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் ஐந்தாவது தொடர் பயிற்சி நிகழ்வு இன்று காலை 10மணிக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (உ-7)

### தென்மராட்சியில் இன்று அவசரகூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

தனங்களப்பு,மறவன்புலோ,கைதடி நாவற்குழி, கோயிலாக்கண்டி, நாவற்குழி, கோயில்குடியிருப்பு ஆகிய பிரிவுகளைச்சேர்ந்த கிராமஉத்தியோகத்தர்களையும் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் ஏனைய கிராமஉத்தியோகத்தர்களையும் இன்று காலை 9மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை - இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர்உணவு நிவாரணம் வழங்குவதற்கு வசதியாக தென்மராட்சிப் பகுதியிலுள்ள ப.நோ.கூ.சங்க கிளைகளை இன்றும் நாளையும் திறந்து வைக்குமாறு ப.நோ.கூ. சங்க தலைவர்கள் பொதுமுகாமையாளர்களிடமும் அவர் கேட்டுள்ளார்.(உ-3-5)

### 4 பாடங்களிலும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகள் தோறும் நான்கு பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றோர் விவரம் வருமாறு:-

**யாழ். இந்து**

செல்லத்துரை அகிலன், அருளையா இளங்குமரன், நாகராசா எழில் வண்ணன், வைரமுத்து தயாபவன் (நால்வரும் கணிதப் பிரிவு), மரியநாயகம் அக்னல் அனோமிலன், முத்துலிங்கம் ஞானரூபன், பாலகிருஷ்ணன் பாபு (மூவரும் மருத்துவம்), தங்கராஜா சுதாகரன் (வர்த்தகம்)

**சாவகச்சேரி இந்து**

இரத்தினசிங்கம் சிவராமச்சந்திரன், சின்னையா அரியகுணசிங்கம், தர்மராஜா தர்மினி (மூவரும் கணிதம்), சிவசுப்பிரமணியம் வரதராஜன், கிருஷ்ணன் சதீஸன் (இருவரும் வர்த்தகம்), சுகந்தினி தெய்வேந்திரன் (கலை)

**சென். பற்றிக்ஸ்**

லோறன்ஸ் கிறிஸ்ரி ராஜ்றோஹன் (மருத்துவம்), சோமலிங்கம் தனஞ்செயன் (கணிதம்), இராஜநாயகம் குமணன் (வர்த்தகம்)

**சென். ஜோன்ஸ்**

கேசவன் மயூரதன் (மருத்துவம்), சிவானந்தம் அகிலன் (கணிதம்)

**ஹாட்லி**

பேரின்பநாயகம் ஜோசப் ஜெகநாதன் (கணிதம்)

**மெதடிஸ்த மகளிர்**

அந்தோனிப்பிள்ளை மேரி நிர்மலா, முருகேசபிள்ளை ராதை (இருவரும் வர்த்தகம்)

அனேகமான முன்னணிப் பாடசாலைகளில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றோர் இவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. ஏதேனும் பாடசாலைகளின் விவரம் இதில் தவறவிடப்பட்டிருந்தால அது நாளைய உதயனில் வெளியாகும். (உ)

### பரந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்-

பரந்தனிலும் அத்தகைய மாற்றங்களை படையினர் செய்திருக்கக்கூடும் என்றும் -

படை உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

ஆனால் நேற்றுப் பிற்பகலில் பரந்தனைக் கைப்பற்றி ஆனையிறவு எல்லைவரை தாங்கள் முன்னேறியிருப்பதாகவும் -

இச்சமரில் 31 பெண்புலிகள் உட்பட 78 பேர் தமது தரப்பில் உயிரிழந்திருப்பதாகவும் -

விடுதலைப்புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

இச்சமர் பற்றிய முழுவிவரங்கள் இன்று வெளியாகுமென எதிர்பார்க்கப்பட்டது. (உ-3-7-8)


**வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்**
**யாழ். மாவட்டம்**

சமுர்த்தி முகாமையாளர்கள் 42 பேருக்குமான விசேட கூட்டம்

காலம் :- 19.12.1999 ஞாயிறு காலை 10.30 மணி
இடம் :- புதிய உயர்கலைக் கல்லூரி, ஆரியகுளம் சந்தி.

*நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் மட்டும் சமுகம் தரவும்

சங்கத்தில் பதிவு செய்யாத 98ஆம் ஆண்டு பட்டதாரிகள் இணுவில் மஞ்சத்தடியில் உள்ள மேற்படி சங்கத்தின் தலைமையகத்தில் தமது பெயர் விவரங்களை பதிவு செய்து கொள்ளவும்.

இணுவில்.
T. சந்திரகாசன்.
(தலைவர்)
(சி/10233)



எமது இன்றைய வீடியோ CD வெளியீடு

வைரமுத்துவின் வரிகளில்

* பயணம்
* புத்தம் புதுப் பூக்கள்
* ஒரு காதல் வசந்தம்

மூர்த்தி வீடியோ,
மானிப்பாய்.
தொலைபேசி 2884
(C/10231)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 04 - 12 - 1915

விண்ணில் 22 - 11 - 1999

**திருமதி சிவபாக்கியம் தம்பிராசா**

(புங்குடுதீவு-1)

உதரத்தில் எமையேந்தி உதிரத்தால் உணவூட்டி
அதரத்தால் அன்பூட்டி அழும்போது தமிழூட்டி
விரதத்தால் வளர்த்தாயே விடைபெறவும் திருவுளமோ
கரமேந்திக் கதறுகிறோம் காண்போமோ நின் திருமுகமே!

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவு கேட்டு உடன் விரைந்து பல்வேறு வழிகளிலும் எங்களுக்கு ஆறுதல் கூறியோர், இறுதிக்கிரியைகளின் போது உடனிருந்து உதவியோர், மலரஞ்சலி செய்தோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும் 31ஆம் நாளையொட்டிய அன்னதானமும் 22.12.99 அன்று இராமேஸ்வரம் தீர்த்தக்கரையிலும் காசியிலும் நடைபெறும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

தகவல்: வி.ரி.தமிழ்மாறன்
F- 2/6,அண்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு - 5.

(சி/10234)

## கண்ணீர் அஞ்சலி

**சவரிமுத்து பேரின்பநாதன்**

(தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், பருத்தித்துறை)

எமது சக உத்தியோகத்தர் 'சவரிமுத்து பேரின்பநாதன்' அவர்களின் அகால மரணத்தை அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரதம பொறியியலாளர்,
நிறைவேற்றுப் பொறியியலாளர்,
சகஉத்தியோகத்தர்கள்.

வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(71856)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை தமிழ்நெறி இறுதியாண்டு மாணவன் **இராமலிங்கம் ஸ்ரீரங்கநாதன்** அவர்களின் அன்புத் தந்தையார் **"ஐயம்பிள்ளை இராமலிங்கம்"** அவர்கள் கடந்த 11.12.99 அன்று (கொல்லவிளாங்குளம், வவுனிக்குளம்) இயற்கை எய்தியமையை அறிந்து வருந்துகின்றோம். அன் னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு எமது இதய அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

- கலாசாலை சமூகத்தினர்.

ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்.

(71834)

## மரண அறிவித்தல்

**பாக்கியநாதன் பரமேஸ்வரி**

அரியாலையைச் சேர்ந்த பாக்கியநாதன் பரமேஸ்வரி நேற்று (17.12.99) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியநாதனின் (ஓய்வுபெற்ற நீர்வழங்கல் சபை ஊழியர்) அன்பு மனைவியும் சயந்தன் (லண்டன்), பாமதி (லண்டன்), சுகந்தன் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் நா.அருளம்பலம் தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் இராசம்மாவின் மருமகளும் லோகேஸ்வரி (லண்டன்), சிவபாலன் (லண்டன்), புஸ்பவதி, தனபாலன்(பிரான்ஸ்), தர்மபாலன்(அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மாவதி(ஆஸ்திரேலியா), சரவணபவான், முத்துக்குமாரசாமி(கொழும்பு), யசோதா(லண்டன்), உருத்திராதேவி(லண்டன்), பாசுபதன்(தபால்திணைக்களம், யாழ்ப்பாணம்), வாசவன்(லண்டன்), கெங்காதரன்(லண்டன்), ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் இரத்தினகுமாரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.12.99) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

634, நாவலர் றோட்,
அரியாலை.

தகவல்:
கு.பாக்கியநாதன்
(கணவர்)

(71858)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-12-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org